66

இலக்கியத் தென்றல்

RATNA STORES
SLAVE ISLAND

வித்தியானந்தன்

இலக்கியத் தென்றல்

RATNA STORES
BOOK-SELLERS
130, MALAY ST:
SLAVE ISLAND

*

சு. வித்தியானந்தன், M. A., Ph D.
தமிழ் விரிவுரையாளர்,
இலங்கைப் பல்கலைக்கழகம்.

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை
677/9, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்

*

தமிழ் மன்றம்,
கல்ஹின்னை, கண்டி.

முதற் பதிப்பு: கார்த்திகை, 1953.

எல்லா உரிமையும் ஆக்கியோனுக்கே.

விலை ரூபா: 3—00.

கிடைக்குமிடம்:

நவலட்சுமி புத்தகசாலை,
136, செட்டியார் தெரு,
கொழும்பு.

கண்டி 42, ஹில் வீதியிலிருக்கும்
அருணா அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

பதிப்பாளர் உரை.

கலாநிதி க. வித்தியானந்தன் அவர்களின் நூல்களுள் ஒன்றாகிய இலக்கியத் தென்றலை வெளியிடுவதில் நாம் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம். தலைசிறந்த தமிழ் எழுத்தாளருள் கலாநிதியவர்களும் ஒருவர். இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் விரிவுரையாளராகக் கடந்த எழு ஆண்டுகளாகக் கடமை ஆற்றிவரும் இப்பெரியார், உயர் திரு விபுலானந்த அடிகளிடமும் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை அவர்களிடமும் தமிழ்க்கல்வி கற்று முதுமாணிப் பட்டத்தில் தேறியவர். இலண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சென்று தமிழர் பண்பாட்டினைப்பற்றி ஈராண்டுகளாக ஆராய்ச்சி செய்து, கலாநிதிப்பட்டம் பெற்றவர். இவர் சஞ்சிகைகளிலும் கிழமைப்பத்திரிகைகளிலும் எழுதியுள்ள கட்டுரைகள் இவரின் ஆராய்ச்சித்திறனுக்கும் தெளிவான நடைக்கும் தக்க சான்று பகரும்.

இந்நூலிலுள்ள இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு என்னும் பகுதி இதுவரை தமிழில் எழுதப்பட்ட இலக்கிய வரலாற்று நூல்களில் இடம்பெறாததொன்று. தென்னிந்தியாவிலுள்ள அறிஞர் பலர் ஈழத்துப்பெரியார் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டினை உணர்வதில்லை. அவர்களுக்கு ஓர் அறிவுரைக் கட்டுரையாக அமைந்துள்ளது ஈழநாட்டுப்பெரியார் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு என்னும் பகுதி.

செவ்விதாக விளங்கக்கூடிய எளியநடையில் எழுதப்பட்ட இந்நூலை வெளியிடும் பேற்றினை எங்களுக்கு அளித்த கலாநிதி அவர்களுக்கு எங்கள் மன்றத்தாரின் நன்றி உரித்தாகுக.

இலக்கியச் சுவை நுகரும் மனப்பான்மை இப்பொழுது தான் தமிழர் உள்ளத்தில் தோன்றியிருக்கின்றது. அவ்வியல்பை மேன்மேலும் வளர்ப்பதற்கு இதைப்போன்ற வெளியீடுகள் துணையாகும். இவ்வாசிரியர் எழுதிய இலக்கிய வரலாற்றுத் தொடர்பான வேறு பல நூல்களையும் அடுத்து வெளியிட எண்ணியுள்ளோம். அதற்குத் தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

இலக்கியத் தென்றல் தமிழறிந்த மக்கள் உள்ள இடங்களிலெல்லாம் பரந்து, என்றும் இன்பமும் பயனும் அளிப்பதாக.

தமிழ் மன்றத்தார்.

முன்னுரை.

தமிழ் இலக்கிய வரலாற்றின் சில பகுதிகளை விளக்க எழுந்த நூல் இலக்கியத்தென்றல். ஒருமொழியிலுள்ள நூல்களின் தோற்றத்தையும் தன்மையினையும் இலக்கிய வளர்ச்சியினையும் காலவரையறைப்படுத்தி வகுத்துக்கூறுவன, இலக்கிய வரலாற்று நூல்கள். தமிழ் இலக்கிய வரலாற்றைச் சங்க காலம், சங்கமருவியகாலம், பல்லவர்காலம், சோழர்காலம், விசயநகர நாயக்க மன்னர்காலம், ஐரோப்பியர்காலம், இக்காலமென ஏழு பிரிவுகளாக வகுத்து, ஒவ்வொரு காலப் பகுதியின் அரசியல் நிலை, அக்காலப் பகுதியிலே தோன்றிய நூல்கள், அவற்றின் பண்பு முதலியனவற்றை ஒழுங்குபெற எடுத்துக்கூறுகின்றது இந்நூலிலுள்ள இலக்கியப் பரப்பு என்னும் முதற்பகுதி.

தமிழிலே முதன்முதல் இலக்கணநூல் இயற்றியவர் அகத்தியர் என்பர். தமிழ் இலக்கண நூல்கள் என்னும் பகுதி இம்மரபு ஆராய்ச்சிக்கு முரண்பட்டதென்றும், தொல்காப்பியமே இப்பொழுது கிடைத்துள்ள பழம் இலக்கண நூலென்றும் சான்றுகாட்டி நிறுவுகின்றது. தொல்காப்பியத்துக்குப்பின் இன்றுவரையுள்ள காலப்பகுதியில் தோன்றிய இலக்கண நூல்களின் வரலாற்றினையும் காலவரையறுத்து இப்பகுதி கூறுகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியன ஐம்பெருங் காப்பியங்கள் என்பர். பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களைத் தந்து

சீவகசிந்தாமணியே பெருங்காப்பிய இலக்கணம் அமைய இயற்றப் பெற்றநூல் என்பதனை ஐம்பெருங் காப்பியங்கள் என்ற பகுதி விளக்குகின்றது.

தமிழகத்திற் பிறந்த சமயங்களும் புகுந்த சமயங்களும் பல அவை யாவும் தமிழ் மொழியைப்பேணி வளர்த்தன. சைவரும் வைணவரும் சமணரும் பௌத்தரும் கிறித்தவரும் தமிழ்த்தாய்க்குச் செய்த தொண்டினை யாவரும் நன்கறிவர். ஆனால் இஸ்லாமியரின் தமிழ்ப்பணியை அறிந்தோர் தொகை மிகக் குறைவு. இஸ்லாமியர் தமிழிலே இயற்றிய நூல்களைக் காப்பியங்கள், பிரபந்தங்கள், இசைப்பாடல்கள், ஞானப் பாடல்கள், உரைநடை நூல்களெனப் பல பிரிவுகளாக வகுத்து, அவற்றைப்பற்றிக் கூறுகின்றது, இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு என்னும் பகுதி.

"வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஈழநாடு தமிழகத் தோடு இணைந்திருந்தது. பல சமயங்களில் உண்டான கடல் கோள்களினால் ஈழம் தனித்ததாயிற்று," என்று சில அறிஞர் கொள்வர். இதன் உண்மை எவ்வாறாக இருப்பினும் பழங் காலந்தொட்டே ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததெனத் தெரிகின்றது. ஈழத்துத் தமிழ ரும் தமது தாய்மொழியைப்பேணி வளர்த்து வந்திருக் கின்றனர். தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாத பல துறை களில் ஈழநாட்டினரே தமிழ் நாட்டவருக்கு வழிகாட்டினர்; இன்றும் வழிகாட்டுகின்றார்கள். இவையாவையுமே ஈழ நாட்டுப் பெரியார் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு என்னும் பகுதியில் அடங்கியுள்ளன.

கட்டுக்கிடையாக இருந்த தமிழ்மொழியை விடுதலை செய்து, அதற்குப் புத்துயிர் கொடுத்தவர் புதுமைக் கவி

பாரதியார். அவர் வகுத்த வழியிற் சென்றவர் பாரதிதாசன், தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை முதலியோர். இவர்களுடைய கவிதைகளிற் பொதுவான பண்புகள் பலவற்றைக் காணலாம். ஆயினும் இவர்களுடைய பாடல்களுக்கெனச் சிறப்பான பண்புகளுஞ் சில உள. இவை யாவற்றையும் ஆராய்வதே இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை என்னும் பகுதி.

இந்நூலை ஆக்குந்தோறும் படி எழுதித்தந்தும், ஆயோலை தூக்கியும் உள்ளன்போடு நண்பர் பலர் உதவினர். அவர்களுக்கு நான் என்றும் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்

இந்நூலினை வெளியிட முன்வந்த கல்ஹின்னைத் தமிழ் மன்றத்தார்க்கும், இதனை விரைவில் அச்சிட்டு உதவிய அருணா அச்சகத்தார்க்கும் எனது நன்றி உரித்தாகுக.

இலங்கை,
பல்கலைக்கழகம்.
16–11–53.

சு. வித்தியானந்தன்.

பொருளடக்கம்.

		பக்கம்
	பதிப்பாளர் உரை	3
	முன்னுரை	5
1.	தமிழ் இலக்கியப்பரப்பு	9
2.	தமிழ் இலக்கண நூல்கள்	33
3.	ஐம்பெருங் காப்பியங்கள்	61
4.	இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு ...	68
5.	ஈழநாட்டுப்பெரியார் தமிழ்மொழிக் காற்றிய தொண்டு ...	88
6.	இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை	108
	புலவர் அகர வரிசை	125
	நூல் அகர வரிசை	131
	பத்திரிகை அகர வரிசை	141

1

தமிழ் இலக்கியப் பரப்பு

தமிழ் நாட்டின் வளர்ச்சி தேய்வுகளுக்கு இணங்கவே தமிழ் மொழியும் வளர்ந்தும் தேய்ந்தும் வந்திருக்கின்றது. தமிழ் நாட்டின் வரலாற்றினை ஆராயுமிடத்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. இரண்டாம் நூற்றாண்டுவரையுள்ள காலப்பகுதியில் தென்னிந்தியாவில் சேர சோழ பாண்டியர் அரசாண்டு வந்தனரெனத் தெரிகின்றது. இம் மூன்று குலத்தரசரும் தமிழ் மொழியை ஆதரித்து வந்தனர். இவருள் பாண்டிய மன்னரே தமிழ் மொழியைப் பேணி வளர்ப்பதில் மிக்க ஊக்கம் எடுத்தனர். இவர் தமது தலைநகரில் மூன்று சங்கங்கள் நிறுவினரென்றும், இச்சங்கங்களில் தமிழ் நாட்டுப் புலவர் தமது கவித்திறனைப் புலப்படுத்திப் பல தமிழ் நூல்களை அரங்கேற்றினர் எனறும் தமிழ் நூல்கள் கூறும். இறையனார் அகப்பொருள் உரையே இவ்வரலாற்றினை முதன் முதல் எடுத்துக் கூறுகின்றது. இவ்வரலாற்றிலுள்ள பல பகுதிகளை உண்மையெனக் கொள்ளமுடியாது. எனினும் கி. மு மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. இரண்டாம் நூற்றாண்டுவரையுள்ள காலத்தில் தமிழ் மொழி உன்னத நிலையில் இருந்ததென்பது இந்நாலுரையால் அறியக்கிடக்கின்றது.

சங்ககாலம்

மேலே குறிப்பிடப்பட்ட காலப் பகுதியே பொதுவாகச் சங்க காலம் என வழங்கும். சங்க காலத்திலே தோன்றிய நூல்கள் சங்க நூல்கள் எனப்படும். எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களே சங்க நூல்கள். எட்டுத்தொகை நூல்களாவன ... அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, கலித்தொகை, பரிபாடல். புறநானூறு, பதிற்றுப்பத்து என்பன. இவற்றுள் கலித்தொகையும் பரிபாடலும் சங்ககாலத்துக்குப் பிந்தியவை. பத்துப்பாட்டு நூல்கள் திருமுருகாற்றுப்படை, பெருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை. மலை

படுகடாம் அல்லது கூத்தர் ஆற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு என்பன. இவற்றுள் திருமுருகாற்றுப்படை காலத்தால் ஏனைய நூல்களுக்குப்பிந்தியது.[1]

இரண்டாம் சங்கத்திற்குரிய இலக்கண நூல் தொல்காப் பியமென்பது தமிழ் மரபு. ஆனால் இந்நூல் சங்ககாலத்திற்குப் பிந்தியதென இக்கால ஆராய்ச்சியாளர் கொள்வர்.[2] தொல் காப்பியத்திற்கு முதனூல் அகத்தியமெனவும் அவ்வகத்தியம் முதலாம் சங்கத்திற்குரியதெனவும் தமிழ் நூல்கள் கூறும். ஆனால் இப்பொழுது கிடைத்துள்ள அகத்தியச் சூத்திரங்களை நோக்குமிடத்து அவை பிற்காலத்திலே தோன்றியவையெனப் புலனாகின்றது.

எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் அகம் புறம் என்ற இரு பாகுபாட்டினுள் அடங்கும். அகப்பொருள் நூல் கள் காதல் ஒழுக்கத்தினையும் புறப்பொருள் நூல்கள் அரசரின் வீரம், கொடை, போர் முதலியவற்றையும் கூறுவன. எட்டுத் தொகையுள் கலித்தொகையும் பரிபாடலும் சங்ககாலத்துக்குப் பிற்பட்டவையென முன்பு கூறப்பட்டது. ஏனைய எட்டுத்தொ கை நூல்களையும் பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படை ஒழிந்த ஏனைய நூல்களையும் நோக்குமிடத்து, அவற்றில் சங் கதச் சொற்கள் போன்ற பிறமொழிச் சொற்களின் கலப்பு மிகக் குறைவெனத் தோன்றுகின்றது. மக்கள் ஒழுக்கத்தினை இயற் கையோடு ஒன்றுபடுத்திக்கூறுவன இப்பாக்கள். ஆரியக்கலப்பி னால் பிற்காலத்தில் ஏற்பட்ட அணிவகைகளைக் கொள்ளாது குறிப்புப் பொருள், உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் முதலிய அணிகளைக் கொண்டனவே இந்நூல்கள். இந்நூல் களில் வழங்கும் சொற்கள் சில எழுத்துக்களால் ஆனவை. அத்

---

1. திருமுருகாற்றுப்படை: எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பு 1943. முன்னுரை (செந்தமிழ்ப்பிரசுரம் 68)

2. எஸ். வையாபுரிப்பிள்ளை: தமிழ்ச்சுடர்மணிகள். பக். 26-28 (இரண்டாவது புதுக்கிய பதிப்பு 1952)

தகைய சொற்கள் ஒன்றேடொன்று தொடர்ந்து செல்லும்பொழுது உருபு முதலியன விரியாது தொக்குநிற்பன. ஆகவே சங்க காலப் புலவர் சுருங்கிய சொற்களில் விரிந்த பொருளினை அமைத்தனர். மேலும் இந்நூல்களிற் புலவர் கையாண்ட யாப்பு முறைகள் இயற்கைத் தமிழ் யாப்புக்களே. ஆசிரியமும் வஞ்சியுமே இந்நூல்களின் யாப்பு.

சங்கமருவிய காலம்

கி. பி. மூன்ரும் நூற்ருண்டு தொடங்கி ஆரும் நூற்ருண்டு நடுப்பகுதிவரை ஆட்சி புரிந்த சேர சோழ பாண்டிய அரசர் இன்ஞர் என்றுவது, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் இன்ஞர் என்றுவது இப்பொழுது வரலாற்று ஆராய்ச்சியிருக்கும் நிலையில் தெளிவாய் அறியமுடியாது. இக்காலப் பகுதியில் இயற்றப்பட்ட நூல்களுட் பெரும்பான்மையன இறந்து போயின. இதற்கெல்லாம் காரணம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியற் குழப்பங்களே. கி. பி. இரண்டாம் நூற்ருண்டோடு தமிழ் நாட்டின் மும்முடியரசராகிய சேர சோழ பாண்டியரின் குலங்கள் அழிவடைந்தன. களப்பாளர் என்னும் சாதியாரால் நாடெங்கும் குழப்பம் ஏற்பட்டது. புலவர் ஆதரிப்பார் இல்லாது தத்தளித்தனர்.

இக்காலப் பகுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்கம் மருவிய காலம் எனப்படும். சங்க நூல்கள் அல்ல என முன்பு கூறப்பட்ட கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியம் ஆகியவை இக்காலப் பகுதிக்குரியவையெனக் கொள்ளலாம். திருக்குறள், ஏலாதி, பழமொழிநானூறு முதலிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுட் பெரும்பாலனவும் இக்காலத்தனவே. திருக்குறள் மூன்ரும் சங்கத்திற் குரியதெனப் பொதுவாகக் கொள்ளப்படினும், சங்கம் மருவிய காலத்திற்கே உரியதெனக் கொள்வதற்குப் பல சான்று உள.[3] பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுட்பல, சமணரால் இயற்றப்பட்டவை.

---

3. எஸ். வையாபுரிப்பிள்ளை: தமிழ்ச் சுடர்மணிகள் பக். 61–80 (இரண்டாவது புதுக்கிய பதிப்பு 1952)

இந் நூல்கள் தோன்றிய காலத்தில் சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டில் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தன. அகிம்சை யும் தூய்மையான வாழ்க்கையும், ஒழுக்க நெறியும், எல்லா உயி ரிடத்தும் பரந்த அன்பும் மனிதனுக்கு அவசியமென இச்சம யங்கள் வற்புறுத்தின. இவற்றின் பயனாகத் தமிழ் இலக்கியத் தில் மாற்றம் ஏற்பட்டது. பண்டைத் தமிழரின் அகவொழுக் கத்தினையும் புறவொழுக்கத்தினையும் கூறும் நூல்களுக்குப் பதிலாக ஒழுக்கநெறியைப் புகட்டும் நூல்கள் எழுந்தன. பதி னெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நாலைந்திணை நூல்கள், களவழி நாற்பது, கார் நாற்பது ஆகிய ஆறு நூல்களைத்தவிர ஏனைய நூல் கள் ஒழுக்கத்தையேசிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. மேலும் ஒழுக்கத்தைக் கூறுவதற்கு ஆசிரியமும் வஞ்சியும் விடப் பட்டு வெண்பா யாப்பே இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

சிலப்பதிகாரம் எனும் சமண நூலும் மணிமேகலை எனும் பௌத்த நூலும் சங்கம் மருவிய காலத்தன. சிலப்பதிகாரம் கடைச்சங்கத்தின் இறுதியில் கி. பி இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டதென்பது பலர் கொள்கை. ஆனால் இது சங்க காலத்திற்குப் பிந்தியதென்பதற்கு ஆராய்ச்சியாளர் பல சான்றுகள் காட்டுவர்.[4] மணிமேகலை சிலப்பதிகாரத்திற் குச் சிறிது பிந்தியது.[5] பௌத்த மதத்தைத் தமிழ் நாட்டில் நாட்டுவதற்குத் தோன்றிய சமய நூல். இரு நூல்களும் சங் கம் மருவிய காலத்துக்குரியன வெனப் பொதுப்படக்கூறலாம்.

பல்லவர் காலம்

ஆறாம் நூற்றாண்டின் இறுதி தொடங்கித் தமிழ் இலக் கியத்தின் வரலாற்றினை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

---

4. V, Chelvanayakam: Dates of Cilappatikaram and Manimekalai: University of Ceylon Review, Vol. VI; 1948.

5. S. சோமசுந்தர பாரதியார்: 'மணிமேகலையின் காலமும் அதை இயற்றிய ஆசிரியரும்: செந்தமிழ், தொகுதி 40., 1942-1943.

இந்நூற்றாண்டில் காஞ்சி நகரில் அரசு புரிந்த பல்லவ அரசர் நாட்டுக் குழப்பங்களை ஒருவாறு அடக்கி, மீண்டும் எங்கும் அமைதியும் நிலையான வாழ்வும் பரவும் வண்ணம் செய்தனர். அவரது ஆதரவில் தமிழ் மொழி புத்துயிர் பெற்று வளர்ச்சி யடைந்தது. இக்காலத்தில் சமண பௌத்த சமயங்கள் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தன. பல்லவ அரசரும் இச்சம யங்களுக்கு ஆதரவளித்தனர். இங்ஙனம் வளர்ந்துகொண்டிருக் கும் சமண பௌத்த மதங்களின் ஆதிக்கத்தைக் குறைத்து, மீண்டும் வைதிக சமயத்தை நிலைநாட்டுவதற்குச் சைவ நாயன் மாரும் வைணவ ஆழ்வாரும் தோன்றினர். சைவசமய எழுச் சியை உண்டாக்கி, பிற சமயங்களைத் துரத்தி, அவற்றில் ஈடு பட்டிருந்த அரசரையும் சைவசமயத்தைக் கைப்பற்றும்படி செய்து, சைவ சமயத்தை நிலைநாட்டி, உணர்ச்சி ததும்பும் தோத்திரப் பாக்களைப் பாடியருளிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர் எழுந்தனர். அதே காலத்தில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், திருமழி சையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை மன் னன், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய வைணவ ஆழ்வாரும் தோன்றி வைணவ சமயத்தைத் தமிழ் நாட்டில் நிலைநாட்டினர்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய சைவநாயன்மார் பாடல் கள் தேவாரம் எனப்படும். மாணிக்கவாசக சுவாமிகள் இயற் றிய நூல்கள் திருவாசகமும் திருக்கோவையாரும். சுந்தர மூர்த்தி சுவாமிகள் காலத்தவரான சேரமான் பெருமாள் நாய னார்பாடியபிரபந்தங்களாகிய பொன்வண்ணத்தந்தாதி, திருக்கை லாய ஞானவுலா முதலியனவும் இக்காலத்தின. திருமூலர் என் னும் சித்தரால் இயற்றப்பட்ட திருமந்திரமும் பல்லவர் காலத் திற்குரியது. பன்னிரு ஆழ்வாரும் பாடிய தோத்திரப்பாக்கள் நாலாயிரத்திவ்விய பிரபந்தம் என வழங்கும். அவற்றுள், ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த பொய்கையாழ்வார், பூதத்தாழ்

வார், பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார் மூவரும் முறையே முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி பாடினர். திருமழிசையாழ்வார் பாடியவை திருச்சந்த விருத்தமும் நான்முகன் திருவந்தாதியும். பெரியாழ்வார் பாடல்கள், பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு என்பன. பெரியாழ்வாரின் மகளே ஆண்டாள். அவர் பாடியவை நாய்ச்சியார் திருமொழியும் திருப்பாவையும். திருமங்கை மன்னன் சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம் என்பனவற்றைப் பாடியருளினர். குலசேகர ஆழ்வார்பாடியது பெருமாள் திருமொழி. தொண்டரடிப் பொடியாழ்வார் அருளியவை திருமாலையும் திருப்பள்ளியெழுச்சியும். திருப்பாணாழ்வார் 'அமலனாதிபிரான்' என முதல் எடுத்துப் பத்துப்பாடல்கள் செய்தருளினர். திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்பன நம்மாழ்வார் பாடல்கள். மதுரகவியாழ்வார் பாக்கள் கண்ணிநுண் சிறுத்தாம்பு என வழங்கும்.

சங்ககால நூல்கள் அகம் புறம் என இருபாகுபட்டன. சங்கம் மருவிய காலத்து நூல்கள் ஒழுக்கத்தைப் பொருளாகக் கொண்டன. பல்லவர் காலத்துப் பாக்கள் பெரும்பாலும் பத்திப்பாடல்களாகவே அமைந்துள்ளன. பத்திச் சுவையமைந்த பாடல்கள் இக்காலப்பகுதியிலேயே அதிகமாக எழுந்தன. உள்ளக் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் தெளிவாக வெளிப்படுத்துவதற்குச் சமய ஆசிரியர்கள் பதிக அமைப்பினை நன்கு கையாண்டனர். பத்துப் பாக்களைக் கொண்டது பதிகம். மேலும், பல்லவர் காலத்தில் புலவர் வடநூற் கருத்துக்களையும், கதைகளையும் தழுவினர். சங்கதச் சொற்கள், இலக்கணங்கள், யாப்பமைதிகள் தமிழில்இடம்பெற்றன. வெண்பா யாப்புச் சிறிதே வழக்கில் இருந்தது. பல்லவர் காலப் புலவர், விருத்தப் பாவினையும் வேறு சில செய்யுள் வகைகளையும் போற்றினர்.

பல்லவர்காலத்தில் பெருங்கதை நந்திக் கலம்பகம், பாரத வெண்பா, புறப்பொருள் வெண்பாமாலை, நிகண்டுகள் முதலி யனவும் தோன்றின. பெருங்கதை என்பது கொங்குவேளிர் என்பவரால் இயற்றப்பட்ட ஒரு தொடர் நிலைச் செய்யுள். உத யணன் வரலாற்றைக் கூறுவது இந்நூல். தெள்ளாற்றில் நடந்த போரில் பகைவரைத்தோற்கடித்த நந்திவர்மன்மேற் பாடப்பட்டன பாரத வெண்பாவும் நந்திக்கலம்பகமும். பாரத வெண்பாப் பாடியவர் பெருந்தேவனார். நந்திக்கலம்பகம் பாடிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கிடைத்துள்ள கலம்பகங் களுள் இதுவே காலத்தால் முந்தியது. புறப்பொருள் வெண் பாமாலை புறப்பொருள் இலக்கணமாகிய சூத்திரங்களையும் அவற்றின் இலக்கியமாகிய வெண்பாக்களையும் உடையது. நூலை இயற்றியவர் ஐயனாரிதனார் என்பவர். நிகண்டுகளுள் சேந்தன் திவாகரமும் பிங்கலந்தையும் பல்லவர் காலத்தன.

சோழர் காலம்

பல்லவரின் ஆட்சி ஒன்பதாம் நூற்றாண்டோடு குன்றுகின் றது. ஒன்பதாம் நூற்றாண்டு தொடங்கிப் பதின்மூன்றாம் நூற் றாண்டின் இறுதிவரை சோழவரசர் தென்னிந்தியா முழுவதை யும் ஆண்டனர். நான்கு நூற்றாண்டாக ஒரு தொடர்ச்சியாக, இவர்கள் செங்கோலோச்சி வந்ததனால் தமிழ் மொழியும் ஒரு தடையுமின்றிப் பல துறைகளில் வளர்ச்சியடைந்தது. புலவர் தம்மை ஆதரித்த அரசர்மீது கோவை, உலா, அந்தாதி முதலிய பிரபந்தங்கள் பாடினர். வடமொழிக் கல்வி பல்லவர் காலத்தி லும் பார்க்க அதிக செல்வாக்குப் பெற்றது. சங்கத நூல்களில் அடங்கிய கதைகளையும் கருத்துக்களையும் தழுவிப் பெருங்கா வியங்களும் சிறுகாவியங்களும், புராணங்களும் எழுந்தன. சங்கதச் சொற்களும், சங்கத யாப்பமைதிகளும் தமிழில் பெருந் தொகையாகப் புகுந்தன. வடமொழிக்கல்வி விருத்தியால் தத்துவ சாத்திர நூல்களும் தோன்றின. இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரைகளும் எழுந்தன. பல்லவர் காலத்தில் கை யாளப்பட்ட தாழிசை, துறை, விருத்தத்தில் விருத்தமே இக்காலப்பகுதியில் பெரிதும் போற்றப்பட்டது.

இப்பொழுதுள்ள திருமுறைகள் பன்னிரண்டென்பதும், மூவர் பாடிய தேவாரம் முதல் ஏழு திருமுறைகள், மாணிக்க வாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை, திருவிசைப் பாக்களும் திருப்பல்லாண்டும் ஒன்ப தாம் திருமுறை, திருமந்திரம் பத்தாம் திருமுறை, பலசான் றோர் பாடிய பிரபந்தங்கள் பதினோராம் திருமுறை, பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை என்பதும் யாவரும் அறிந்தவை. அவற்றுள் முதலேழு திருமுறைகளையும் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் நம்பியாண்டார்நம்பி தொகுத்தார். ஆழ்வார்கள் பாடிய பாக்களைத் தொகுத்தவர் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகு தியிலும் வாழ்ந்த நாதமுனி என்பவர்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டல கேசி, வளையாபதி என்பன ஐம்பெருங்காப்பியமென வழங்கு கின்றன. இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்திற்குரியனவென முன்பு கூறப்பட்டது. ஏனைய மூன்றும் சோழராட்சிக் காலத்துக்குரியன. இவற்றுள் சீவக சிந்தாமணி திருத்தக்கதேவர் என்னும் சமணரால் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப் பெற்றது. சங்கதக்காவிய முறையைப் பின்பற்றித் தமிழ் மொழியில் இயற்றப்பெற்ற பெருங் காப்பியம் இதுவே. தொடர்மொழிச்செய்யுள் பாடுவ தற்கு விருத்தம் இவ்வாசிரியராலேயே முதன் முதல் கையாளப் படுகின்றது. குண்டலகேசியும் வளையாபதியும் சீவக சிந்தாமணி காலத்தை ஒட்டியே தோன்றியிருக்கவேண்டும். அவை இப் பொழுது நூல்வடிவில் இல்லை. குண்டலகேசி பௌத்த நூல். வளையாபதி சமண காவியம். யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி, உதயணகுமாரகாவியம் நாககுமாரகாவியம் என்பன ஐஞ்சிறு காப்பியம். இவற்றுள் நாககுமாரகாவியம் ஒழிய ஏனைய நூல்கள் நான்கும் வெளியாகியுள்ளன. இவையாவும் சமண நூல்கள்.

இரண்டாவது குலோத்துங்கன் காலத்தில் பன்னிரண்

டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சேக்கிழார் சுவாமிகள் சைவ நாயன்மாரின் வாழ்க்கை வரலாற்றினைப் பெருங்காப்பிய முறையில் அமைத்துப் பெரிய புராணம் என்ற நூலைத் தமிழ் உலகிற்கு அளித்தனர். தமிழ்ப் புராணத்தொகுதியில் உயர்ந்த நிலையிலுள்ள கந்த புராணமும் திருவிளையாடற் புராணமும் சோழராட்சிக்காலத்தன. கந்தபுராணத்தை இயற்றியவர் கச்சியப்பசிவாச்சாரியார். இது காவிய நயங்களும் சைவ சித்தாந்தக் கருத்துக்களுமுடைய சிறந்த நூல். மதுரையம்பதியிலே கோயில் கொண்டருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுள் உயிர்கள் உய்தியுறுதற் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல்களைக் கூறுவது திருவிளையாடற் புராணம். இத்திருவிளையாடல்களை உணர்த்தும்பொருட்டுத் தமிழில் எழுந்த நூல்களுள் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய புராணமே இக்காலத்துக்குரியது. 'கல்வியிற் பெரியன் கம்பன்' எனப் புகழ் பெற்ற கம்பன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இராமாயணத்தைப் பாடினர். இது பலராலும் கொண்டாடப்படும் சிறந்த காவியம்.

பல சிற்றிலக்கியங்களும் சோழர் காலத்திலே எழுந்தன. முதலாம் குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின் மேற்படையெடுத்துச் சென்று அந்நாட்டைக் கைப்பற்றியதைக் கூறும் கலிங்கத்துப்பரணி எனும் நூல் செயங்கொண்டாரால் இயற்றப்பெற்றது. பரணி நூல்களில் இதுவே சிறந்ததாகலின் இந்நூலாசிரியர் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' எனப் போற்றப்படுவர். 'கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' எனச் சான்றோர் சிறப்பித்துக் கூறும் ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோர் காலத்தவர். இம் மூவர்மேலும் இவர் பாடிய பிரபந்தம் மூவருலா எனப்படும். குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ், தக்கயாகப் பரணி என்பவையும் இவர் பாடியவை. புகழேந்தி என்னும் புலவர் நளவெண்பா என்னும் நூலைப் பாடிப் புகழ் பெற்றார். 'வெண்பாப்புலி' என

இவரைப் பலர் போற்றுவர். இவர் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தவர்.

சோழர் ஆட்சிக்காலத்தில் பல இலக்கண நூல்களும் வெளிவந்தன. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமிர்த சாகரர் என்னும் சமண துறவி யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை என்னும் இரு யாப்பு நூல்களை இயற்றினர். பதினொராம் நூற்றாண்டில் வீரராச சோழன் ஆதரவில் புத்தமித்திரர் என்பவர் வீரசோழியம் என்னும் நூலை இயற்றினர். இதில் எழுத்து, பொருள், சொல், யாப்பு, அணி ஆகிய ஐவகை இலக்கணமும் அடங்கியுள்ளன. குணவீர பண்டிதர் என்னும் சமணர் தொல்காப்பியத்தைப் பின்பற்றி, எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் அமைத்து நேமிநாதம் என்னும் நூலை யாத்தனர். இது சின்னூல் எனவும் வழங்கும்; பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குரியது. நாற்கவிராச நம்பியின் அகப்பொருளும் தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூலும் இக்காலத்தன. பவணந்தி என்னும் சமண முனிவர் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நன்னூலை இயற்றினர்.

பழந்தமிழ் நூல்கள் எமக்கு இப்போது பயன்படுவது, அந்நூல்களின் ஆழ்ந்த கருத்துக்களை முட்டறுத்து விளக்கும் அவற்றது உரைகள் வாயிலாகவேயாம். இவ்வித உரை எழுதியவருள் சிறந்தவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலியோர். இலக்கியங்களில் ஒன்றாகிய திருக்கோவையாருக்கும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் சில பகுதிகளுக்கும் உரை எழுதினார் பேராசிரியர். தொல்காப்பியம் முழுவதற்கும் உரை கண்டார் இளம்பூரணர். தொல்காப்பியத்திற்கு எழுதப்பட்ட உரைகளுள் இவர் உரையே காலத்தால் முந்தியது. ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கும், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி, குறுந்தொகையின் கடைசி இருபது பாக்கள் முதலிய இலக்கி

யங்களுக்கும் உரை எழுதினர். சேனவரையர் தொல்காப்பியம் சொல்லதிகாரம் ஒன்றற்கே உரைகண்டார். திருக்குறளுக்குச் சிறந்த உரை எழுதியவர் பரிமேலழகர். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். இவ்வுரைகாரரின் காலத்தைத் திட்டமாக வரையறுத்துக் கூறமுடியாது. ஆயினும் இவர்களுட் பெரும்பாலானோர் சோழர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர்கள்.

சோழர் காலத்தில் மதப்பற்றுடையோர் கல்வியில் ஈடுபட்டதன் பயனாக முறையான தத்துவ சாத்திரங்கள் பிறந்தன. சைவ சித்தாந்தம் ஒரு தனிப்பட்ட தத்துவ முறையாக நிறுவப்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் திருவுந்தியார் என்னும் நூலைத்திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் இயற்றினர். இந்நூலின் பொருளை விளக்கித் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் திருக்களிற்றுப்பாடியார் என்னும் நூலை ஆக்கினர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் மெய்கண்டதேவர் சிவஞான போதம் பாடினர். இவருடைய மாணவன் அருணந்தி சிவாச்சாரியார் சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் இரு நூல்களை இயற்றினர். மனவாசகம் கடந்தார் என்பவர் உண்மை விளக்கம் என்னும் நூலை யாத்தனர். அதன்மேல் பதினான்காம் நூற்றாண்டில் உமாபதி சிவாசாரியார் என்பவர் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறிவிளக்கம்,சங்கற்ப நிராகரணம் ஆகிய நூல்களை இயற்றினர்.

விசய நகர நாயக்கர் காலம்

பதின் மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சோழ அரசரின் அதிகாரம் குறைந்து, அவர் தனியாட்சி சிதறுண்ட காலத்தில், தமிழ் நாட்டின் புகழ் குன்றத் தொடங்கியது: நாட்டிற் பிளவுகளும் அமைதியற்ற நிலையும் ஏற்பட்டன. சோழருக்குப் பின்னால் கொஞ்சக் காலம்வரை சில பாண்டிய மன்னர் தங்கள் பழைய குலப்புகழுடன் மதுரையில் ஆண்டனர்.

அவர் ஆட்சியும் ஒரு நூற்றாண்டுக்குள் முடிவு பெற்றது. இசிலாமியரின் படையெடுப்பு ஆரவாரத்துடன் கிளம்பியது. பாண்டிய மன்னர் தெற்கே ஓடினர். சிறிதுகாலம் இசிலாமியரின் படையெடுப்பால் தமிழ் நாடு தத்தளித்துக்கொண்டிருக்குங் காலத்தில் விசயநகர மன்னர் தோன்றினர். அவர்கள் மதுரையை இசிலாமியரிடமிருந்து கைப்பற்றி, அங்கு தமது ஆட்சியை நிலைநிறுத்தினர். விசய நகரம் இந்துத்தனியரசாகவே தோன்றிப் பெரும் புகழுடன் வளர்ந்து, இரண்டு நூற்றாண்டுவரை பெருமையுடன் திகழ்ந்தது. விசயநகர அரசரின் வலிகுறைய அவரின் பிரதிநிதிகளாகிய நாயக்கர் மதுரையிலும் தஞ்சையிலும் ஆண்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அவர்கள் ஆட்சி நிலைபெற்றது.

விசயநகர மன்னர் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் சமயச்சார்பான நூல்களும் தத்துவச்சார்பான நூல்களுமே தோன்றின. கோயில்கள்மீது பிரபந்தங்களும் புராணங்களும் தனிப்பாடல்களும் பாடினர் புலவர். சங்கதத்திலுள்ள காவியங்களும் புராணங்களும் தமிழில் எழுதப்பட்டன. சங்கதச் சொற்கள் கணக்கின்றித் தமிழ் நூல்களில் இடம் பெற்றன. ஆதரிப்பதற்கு அரசர் இல்லாததனால், கவிஞர்கள் அரசர்மேல் பிரபந்தம் பாடுவதை விடுத்துத் தத்துவ சாத்திரக் கொள்கைகளை விளக்கும் பிரபந்தங்கள் பாடினர். முற்காலங்களில் தோன்றிய வாழ்த்துப் பாக்களுக்குப் பதிலாக வசைக்கவிகள் அதிகமாகத் தோன்றின. எளிதிற் பொருள் அறிந்துகொள்ள இயலாத யமகம், திரிபு, மடக்கு, சித்திரக்கவி முதலியவற்றை, சொல்லடுக்கும் சந்தமும் பொருந்த, சிலேடைப் பொருள் தொனிக்கப் பாடினர் புலவர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் காளமேகப் புலவர். இவர் பலவிடங்களை அடைந்து, தம் மனம் சென்றவாறு செய்யுள் பாடிச் சிலரைப் புகழ்ந்தும் பலரை வைதும் வந்தனர். இவர் ஆசுகவிகளும் சித்திரக்கவிகளும் சிலேடைக்கவிகளும்

பாடுவதில் வல்லவர். இவைபற்றியே 'ஆசுக்குக் காளமுகிலான வனே' என்றும் 'வசைபாடக்காளமேகம்' என்றும் இவரைச் சான்றோர் சிறப்பித்துக்கூறுவர். இவர் காலத்தில் இரட்டைப் புலவரும் இருந்தனர். இவ்விருவரும் ஒருவரையொருவர் எவ்வாற்றானும் ஒத்திருந்தமையாலும், ஒருங்கு சேர்ந்து செய்யுள் பாடிவந்தமையாலும், இரட்டையர் எனப்பட்டனர். இவர்கள் கல்வி வளம் பழுத்த இனிய செந்தமிழ்ப் பாக்களை முயற்சியும் உழைப்புமின்றி எளிதிற் பாடிய காரணத்தினாலே 'தெய்வப் புலவர்' என்றும் சிறப்பித்து ஓதப்பெறுவர். பல தலங்களுக்குச் சென்று அத்தலங்களில் வீற்றிருக்கும் கடவுளர்மீது கலம்பகங்கள் பலபாடிச் சிறப்புப்பெற்றனராகையால் 'கலம்பகத்துக்கு இரட்டையர்' எனப் போற்றப்பட்டனர். சங்கதத்திலுள்ள மகா பாரதத்தைத் தமிழில் யாவரும் சுவைத்து இன்புறும் வண்ணம் பாடிய வில்லிபுத்தூராரும் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வண்ண நலம் சிறந்த பற்பல சந்தக் கவிகள் இயற்றுவதில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி, வீறுபெற்று, திருப்புகழ்ச் சுவை அமுதைப்பாடிக் கந்தவேளின் செவிகளை இன்புறச்செய்து 'திருப்புகழ்ப் பேராசிரியர்' என்று யாவராலும் புகழப்பட்ட அருணகிரிநாதர் வில்லியாரோடு ஒத்த காலத்தவர். கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, திருவகுப்பு முதலிய நூல்களை இயற்றியவரும் இவரே.

பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த புலவருள் குறிப்பிடத் தக்க இருவர் வீரகவிராசரும் நிரம்பவழகிய தேசிகரும். வீரகவிராசர் இயற்றிய நூல் அரிச்சந்திரபுராணம். நிரம்பவழகிய தேசிகர் இலக்கண இலக்கிய நூல்களிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர். இவர் திருப்பரங்கிரிப் புராணமும் சேதுபுராணமும் பாடியுள்ளார். திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவரும், மாறனகப்பொருள், மாறனலங்காரம் திருப்பதிகக்கோவை முதலியன இயற்றிய திருக்

குருகைப் பெருமாள் கவிராயர் முதலியோரும் இந் நூற்றாண்டுக்கேயுரியவர். இந் நூற்றாண்டிலே சிற்றரசராகவிருந்து அரசாட்சி செய்தோரிலும் பலர் நூல் இயற்றும் திறமை வாய்ந்தவராய் இருந்தனர். அவர்களுள் வரதுங்கராம பாண்டியன் ஒருவர். அவர் செய்ததாகப் பிரமோத்தரகண்டம், கொக்கோகம், திருக்குருவைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல்கள் வழங்குகின்றன. வரதுங்கராமனின் சிற்றப்பன் மகன் அதிவீரராம பாண்டியன். 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என ஒரு முதுமொழியுண்டு. இந் நைடத்ததை இயற்றிபவர் இவரே. கூர்ம புராணம், காசிகாண்டம் ஆகிய நூல்களும் இவர் இயற்றியவையே.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த கடிகைமுத்துப் புலவர் இருபொருள் படும்படி பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிக்கவிகள் பல. பிரயோக விவேகம் இயற்றிய சுப்பிரமணிய தீட்சிதரும், கல்லாடம் என்னும் நூலிற்குச் சிறந்த உரை கண்ட மயிலேறும் பெருமாள் பிள்ளையும் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்நூற்றாண்டிலும் பதினெட்டாம் நூற்றாண்டிலும் தமிழ் மொழியைப் பேணி வளர்த்த பெருமை மடங்களுக்கே உரியது. நாட்டுக் குழப்பங்களால் அரசரின் ஆதரவு குறைய, மத ஒழுக்கங்களை மேற்பார்வையிடவும், தத்துவ ஞானத்தை வளர்த்து மக்களுக்குப் போதிக்கவும, அரச குலங்களின் மாறுதலால் மதங்களுக்கு ஆதரவு குறையாமலிருக்கவும், மடங்கள் நிறுவப்பட்டன. மடங்கள் இன்றியமையாத மத நிலையங்களாகவும் கல்வி வளர்ச்சி நிலையங்களாகவும் கொஞ்சக் காலம் திகழ்ந்தன.

இவ்வாறு தென்னாட்டிலே தமிழ்மொழியை மிகுதியாகப் பேணி வளர்த்து வந்த மடங்களுள் ஒன்று திருவாவடுதுறை ஆதீனம். தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சித்தாந்தப் பஃறொடை, உபாய நிட்டை, உபதேச வெண்பா முதலிய நூல்களை இயற்றிய துறைசை அம்பலவாண தேசிகர், திருச்செந்திற் கலம்பகம், இலக்கணக் கொத்து முதலிய நூல்களை ஆக்கிய

ஈசானதேசிகர், நன்னூலுக்குச் சிறந்த விருத்தியுரை கண்ட சங்கர நமச்சிவாயர் முதலியோர் இம்மடத்திலிருந்து அருந் தொண்டு புரிந்தனர். தருமபுர ஆதீனத்தை நிறுவுவதற்குக் காரணமாய் இருந்தவர் குமரகுருபரர். கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், நீதிநெறி விளக்கம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், துண்டி விநாயகர் பதிகம் முதலியன இவர் பாடிய பிரபந்தங்கள். இம் மடத்தைச்சேர்ந்த வெள்ளியம்பலவாண தேசிகர் செய்த நூல்கள் ஞான சம்பந்த தேசிகர் சமூகமாலை, முத்தி நிச்சயச் சிற்றுரை, சிவஞான சித்தி ஞானாபரணவிளக்கம், மிருகேந்திரம் முதலியன. மேலும் தேவாரம் பெரிய புராணம் முதலியவைகளில் முனிவர் அனேக செய்யுட்களை இடைமடுத்துள்ளார் தருமபுர மடத்தைச்சேர்ந்த இன்னொரு புலவர் வைத்தியநாத தேசிகர். இவர் பாசவதைப்பரணி, திருவாரூர்ப் பன்மணிமாலை, இலக்கண விளக்கம் முதலிய நூல்களை இயற்றினர். துறை மங்கல மடத்திலிருந்து தமிழை வளர்த்தவருள் குறிப்பிடத்தக்கவர் சிவப்பிரகாச சுவாமிகள், கருணைப்பிரகாசர், வேலையர் முதலியோர். சோணசைலமாலை, திருவெங்கைக்கோவை, சிவஞான பாலையர் நெஞ்சுவிடுதூது, பிரபுலிங்கலீலை, முதலியன சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நூல்கள். இட்டலிங்க அகவல்பாடியவர் கருணைப்பிரகாசர். இவர் பாடிய சீகாளத்திப்புராணத்தை முடித்துவைத்தார் வேலையர். வேலையர் பாடிய நூல்கள் நல்லூர்ப் புராணம், நமச்சிவாய லீலை மயிலத்துலா முதலியன.

ஐரோப்பியர் காலம்.

பதினைந்தாம் நூற்றாண்டிலேயே மேனாட்டினர் இந்தியாவிற்கு வந்துவிட்டனர். தமிழ் நாட்டிற்கு வந்த மேனாட்டுப் பாதிரிமார் தமிழ்மொழியைக் கற்றுத் தேர்ந்து, தமிழிற் பேசவும் சொற்பொழிவாற்றவும் நூல் இயற்றவும் தொடங்கினர். இவ்வாறு தமிழ்மொழிக்கும் மேனாட்டினர்க்கும் ஏற்பட்டதொடர்பினால் தமிழ்மொழி வளர்ச்சியடைந்தது. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலே தமிழ் மொழி இவர்கள் ஆற்

றிய தொண்டுகளினல் பல துறைகளில் விருத்தியடைந்தது. மேனாட்டினர் வருகைக்கு முன் தமிழ் மொழியில் தனிவசன நூல்கள் எழுதப்படவில்லை. இலக்கணம், இலக்கியம், நிகண்டு, சோதிடம், மருத்துவம் முதலிய நூல்கள் செய்யுளிலேயே இயற்றப்பட்டுவந்தன. இவற்றிற்கு உரையாசிரியர்கள் எழுதிய உரைகளைத் தவிரத் தனிப்பட்ட வசன நூல் ஒன்றேனும் இருக்கவில்லை. ஆகவே மேனாட்டினர் தொடர்பினாலேயே வசன நடை தமிழ் நாட்டிலே வேரூன்றி வளர்ச்சியடைந்தது. தமிழ் நாட்டிலே முதன் முதல் அச்சியந்திரங்களை நிறுவி அச்சுப் புத்தகங்களை வெளியிட்டவர் மேனாட்டவரே. பூகோளநூல், வான நூல், தேச வரலாறு, உடல் நூல் முதலிய விஞ்ஞான சாத்திர நூல்களும் மேனாட்டார் வருகைக்குப் பின்பே தமிழ் நாட்டிலே தோன்றின. தமிழ் மொழியில் வழங்கும் சொற்களை அகர முதலாக வரிசைப்படுத்திப் பொருளை விளக்கும் அகராதிகளை முதன் முதல் தமிழ் உலகிற்கு அளித்தவரும் மேனாட்டவரே. செய்தித்தாள், தினத்தாள், மாதச் சஞ்சிகை முதலிய வெளியீடுகள் தமிழ் நாட்டிலே தோன்றுவதற்குக் காலாக இருந்தவர் மேனாட்டினர். பொது மறையாகிய திருக்குறளின் சிறப்பினை உலகறியக் காட்டிய பெருமை மேனாட்டவர்க்கு உரித்து. சங்கம் மருவிய காலத்துக்குப் பின் தமிழ் நாட்டில் வழங்கிய பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டவரும் மேனாட்டவர். மேலும் தமிழ் உட்படத் திராவிட மொழிகளை மொழி நூல் முறையில் ஆராய்ந்தவர்களும் மேனாட்டவரே.

மேனாட்டுப் பாதிரிமார் பல செய்யுள் நூல்களும் இயற்றியுள்ளார்கள். செய்யுள் இலக்கியம் இயற்றியவருள் குறிப்பிடத்தக்கவர் வீரமாமுனிவர். இவரது தேம்பாவணி எனனும் காவியம் பலராலும் போற்றப்படுகின்றது. திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னையழுங்கல் அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களும் இவர் இயற்றியவையே.

தமிழ் நாட்டுக் கிறித்தவருள் கவிஞராக விளங்கிய வேத நாயகம்பிள்ளை இசைத்தமிழின் பெருமையைக் கீர்த்தனங்களால் நாட்டினர். சர்வசமய சமரசக் கீர்த்தனை, நீதி நூல், பெண் புத்தி மாலைமுதலிய நூல்களையும், பல தனிப் பாடல்களையும் இவர் பாடியுள்ளார். வைணவ மதத்தைக் கைவிட்டுக் கிறித்தவ மதத் தைத்தழுவிய கிருஷ்ண பிள்ளை என்னும் பெரியார் ஆங்கிலத் தில் ஜோன் பனியன் எழுதிய 'பில்கிறிம்ஸ் புறோகிறஸ்' என்னும் நூலை இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயருடன் தமிழில் ஆக்கினர். மேலும் இவர் யேசுநாதர் மீது பாடிய பத்திப் பாடல் கள் இரட்சணிய மனோகரம் என்னும் நூலில் அடங்கியுள்ளன.

மேனாட்டார் இயற்றிய வசன நூல்களுள் தத்துவ போத சுவாமிகள் எழுதிய ஞானோபதேச காண்டம், சகுண நிவாரணம், கடவுணிருணயம், தத்துவக் கண்ணாடி, ஞான தீபிகை முதலிய னவும் அடங்கும். வீரமாமுனிவர் வேத விளக்கம், வேதியரொழு க்கம், பரமார்த்த குருவின் கதை முதலிய உரை நடை நூல்கள் எழுதினர். தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலை இயற்றியவரும் இவரே. இவர் எழுதிய சதுரகராதி பிற்காலப் பேரகராதிகளுக்கெல்லாம் வழி காட்டியது. சுவிசேஷ பிரபல விளக்கம், பால தீபிகை, ஜன சிநேகன், உதய தாரகை, சிறுபிள் ளையின் நேசத் தோழன், தினவர்த்தமானி, கத்தோலிக்கப் பாது காவலன் முதலிய செய்தித் தாள்களும் சஞ்சிகைகளும் மேனா ட்டுப் பாதிரிமாரால் வெளியாகின. தமிழ்நாட்டுக் கிறித்தவருள் வேதநாயகம் பிள்ளை என்பவர் தமிழில் நாவல் என்னும் நவீனக் கதை இயற்றுவார்க்கு வழி காட்டினர். இவர் இயற்றிய வசன நூல்களிலே தலை சிறந்தது பிரதாப முதலியார் சரித்திரம் என் னும் கற்பனைக் கதை ஞான சுந்தரி, சுகுண சுந்தரி சரித்திரம் என்பனவும் இவர் இயற்றிய நாவல்கள்.

இந்நூற்றாண்டுகளில் இந்து சமயத்தைச் சார்ந்த புலவரும் பலர் வாழ்ந்தனர். இவர்களுள் புகழ்பெற்றவர்கள் உணர்ச்சி மிக்க தோத்திரப் பாக்களைப் பாடிய தாயுமானசுவாமிகளும் இராமலிங்கவடிகளும். தர்க்கம், தத்துவ சாத்திரம், இலக்கண

இலக்கியம் முதலியவற்றிலே தலை சிறந்து விளங்கிய சிவஞான முனிவர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், காஞ்சி புராணம் முதலிய நூல்களை இயற்றினர். திருத்தணிகைப் புராணம், திருவானைக்காப் புராணம் முதலிய புராணங்களையும் பல பிரபந்தங்களையும் பாடிய கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவரின் மாணக்கன். மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவர் பல புராணங்களும் அந்தாதி கோவைப் பிரபந்தங்களும் பாடியுள்ளார். திருக்குற்றாலக் குறவஞ்சி பாடிய திரிகூடராசப்பக் கவிராயர், இராம நாடகம் இயற்றிய அருணாசலக் கவிராயர், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியோரும் இக்காலத்தவர்.

இந்து சமயத்தைச் சேர்ந்தோர் எழுதிய வசன நூல்களுள் சிவஞான முனிவர் இயற்றிய இலக்கண விளக்கச் சூறாவளி, சித்தாந்த மரபு கண்டன கண்டனம, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, திராவிட மாபாடியம் முதலியன சிறந்து விளங்குகின்றன. இராமாயணக் கதை, பாரதக்கதை, அரிச்சந்திரன் கதை முதலிய வசன நூல்களும் இக்காலப் பகுதியில் வெளி வந்தன. தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரக் கதையும் வீராசாமி செட்டியார் விநோதரச மஞ்சரியும் எழுதினர். இராஜமையர் கமலாம்பாள் சரித்திரம் எழுதினர்.

தமிழ் நாட்டு இந்துக்கள் பல நூல்களை இயற்றியதுபோலப்பல தமிழ் நாட்டு இசிலாமியரும் சிறந்த நூல்கள் இயற்றியுள்ளார்கள். நூல் அமைப்புமுறையிலும், நடையிலும், போக்கிலும் இசிலாமியப் புலவரின் நூல்களுக்கும் புகழ்பெற்ற மற்றைய தமிழ் இலக்கியங்களுக்கும் அடிப்படையான வேறுபாடு இல்லை. அவர்களின் இலக்கியங்களும் தமிழ் மரபுக்கு ஒத்தனவாகவும் தமிழ்ப் பண்புக்கு இயைந்தனவாகவும் அமைந்திருக்கின்றன. இவ்விலக்கியங்களிலும கற்பனைத்திறன், பொருட்சிறப்பு, சொல்லழகு முதலியவற்றைக்காணலாம். பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இசிலாமியப் புலவருள் சிறந்தவர் குலாம் காதிறு நாவலர். புராண வகையில் நாகூர்ப்புராணம் முதலியவையும், கோவையில் மதுரைக்கோவை

யும், கலம்பகத்தில் நாகூர்க் கலம்பகம், குபாலீர் கலம்பகம் முத லியவையும், அந்தாதியில் திருமதிஞத்திரிபந்தாதியும், மாலையில் சமுத்திரமாலை முதலியனவும், உரை வகையில் சீறாப் புராண வசனம், திருமணிமாலைவசனம் முதலியவையும் இவரால் செய்யப்பட் வை. இவையன்றி மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப் படையும் இவரால் இயற்றப்பட்டதே. முகம்மது நெய்ஞ மரைக் காயரும் நாகூரைச் சேர்ந்தவர். புகழ்ப்பா மஞ்சரி, கீர்த்தன மஞ் சரி, சித்திரக் கவிகள், வண்ணக் கவிகள் முதலியன இவரால் செய்யப்பட்டன. மக்காக் கோவை முதலிய நூல்கள் இயற்றிய வர் மு. செவத்த மரைக்காயர். பிச்சை யிபுறுகிம் புலவர் நாகூர்ப் புராணம் சித்திரக்கவிப்படலத்துக்கு உரை எழுதினர். பிரபந்தக் கொத்தும் இவர் நூல்களுள் ஒன்று. செய்கப்துல் காதிர் நயினர் லெப்பே ஆலிம் புலவர் நாகையந்தாதி, சொர்க்க நீதி முதலிய நூல்கள் யாத்தனர். 'மகா வித்துவான் பாவகை வல்ல கல்விக் களஞ்சியம் முகம்மதுப் புலவர்' எனச் சிறப்பிக்கப் பெறும் முகம் மதுப் புலவர் செய்த நூல்களுள் மீருன் சாய்பு பிள்ளைத் தமிழ் ஒன்று. இன்னும் பல இசிலாமியப் புலவர் பல நூல்களை இயற் றினர்.

ஐரோப்பியர் காலத்தில் ஈழத்திலும் பல அறிஞர் தமிழை ப் பேணி வளர்த்தனர். இறக்கும் நிலையிலிருந்த ஏட்டுச் சுவடி களுக்கு உயிர் கொடுத்தும், தெளிவான நடையில் வசன நூல் பல எழுதியும், பழந்தமிழ் நூல்களைத் திருத்தமுறப் பதிப்பித் தும், தமிழ் மக்களின் பண்டை நாகரிகத்தினைப் புலப்படுத்தித் தமிழ் வரலாற்று ஆராய்ச்சிக்கு அடிகோலியும், சிறந்த இலக்கிய நூல்களை இயற்றியும் புகழ் பெற்றனர் ஈழநாட்டவர். தமிழ்ப் புலவருடைய இல்லங்களில் பனையோலைச் சுவடிகளிற் சிறைப் பட்டு வெளியேற இயலாது தத்தளித்துக் கொண்டிருந்த தமி ழை அச்சு வாகனம் ஏற்றி நாடெங்கும் பரவச்செய்தவர் யாழ்ப் பாணத்துச் சிறுப்பிட்டியைச் சேர்ந்த தாமோதரம் பிள்ளை. இவ ர் பதிப்பித்த இலக்கண நூல்கள் தொல்காப்பியம் நச்சினர்க் கினியம், தொல்காப்பியம் சேனவரையம், வீரசோழியம் முத

லியன. கலித்தொகை, தணிகைப் புராணம், சூளாமணி ஆகிய நூல்களும் இவர் முயற்சியினாலேயே வெளி வந்தன. கல்லாதவரும் எளிதில் விளங்கக்கூடிய தெளிவான முறையில் முதன் முதற் செந்தமிழ்ச் சொல் அமைந்த வசன நடையைக் கையாண்டவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரே. பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கோயிற்புராண உரை, பாலபாடம், சைவ வினாவிடை, நன்னூல் காண்டிகை உரை, முதலியன இவர் புதிதாக இயற்றி வெளியிட்ட நூல்கள். கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, இலக்கணக் கொத்து முதலியன இவர் திருத்தி அச்சிட்ட நூல்கள். யாழ்ப்பாணத்து மல்லாகத்தைச் சேர்ந்த கனகசபைப் பிள்ளை ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர்' என்ற நூலில் தமிழ் ஆராய்ச்சியின் போக்கு எவ்வகையாக இருத்தல் வேண்டும் என்பதை விளக்கினர்.

சின்னத்தம்பிப்புலவர், சேனதிராய முதலியார், கதிரைவேற்பிள்ளை, சிவசம்புப் புலவர் ஆகியோரும் ஈண்டு குறிப்பிடத் தகுதியுடையவர். யாழ்ப்பாணத்து நல்லூர் வில்லவராயரின் மகன் சின்னத்தம்பிப்புலவர் இளமையிலேயே புலமைத் திறனுடன் விளங்கினர். இவர் மறைசையந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளைப்பள்ளு முதலிய நூல்களைச் செய்தனர். ஏறக்குறைய நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன் இருபாலையில் வாழ்ந்த சேனதிராய முதலியார் நல்லை வெண்பா, நல்லை அந்தாதி, நல்லைக்குறவஞ்சி முதலிய பிரபந்தங்களும், பல தனிப்பாடல்களும் பாடினர். புலோலியிலிருந்து சென்னைக்கு ஒளித்தோடிய கதிரைவேற் பிள்ளை கூர்ம புராண விரிவுரை, பழனித்தல புராணவிரிவுரை, சைவ சந்திரிகை, மகோற்சவ விளக்கம் முதலிய நூல்களை இயற்றினர். பருத்தித்துறையைச் சேர்ந்த உடுப்பிட்டி அருளம்பல முதலியாரின் மகன் சிவசம்புப் புலவர் அறுபது பிரபந்தங்கள் வரை பாடியுள்ளார். யாப்பருங்கலக்காரிகை உரை, கந்தபுராண வள்ளியம்மை திருமணப்படல உரை முதலிய உரைகளும் எழுதினர்.

இவ்வாறு ஈழத்துப் பெரியார் பலர் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழைப் பல துறைகளிலும் பேணி வளர்த்தனர்.

இக்காலம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் தேசிய இயக்கம் தோன்றியது. இதன் பயனாகப் பல புதுக் கவிஞர் தோன்றினர். அவருள் தலைசிறந்து விளங்கியவர் சுப்பிரமணிய பாரதியார். பாரதியாருக்குப் பின் தோன்றிய புலவருள் தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இக்கவிஞர்களின் கவிதைகளைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது இவற்றின் எளிய நடையே. இவர்களுடைய கவிதைகளின் எளிமையையும், இனிமையையும் கண்ட பொதுமக்கள் கவிதைச் சுவையைக்களிவோடு பருகத் தொடங்கிவிட்டனர். மேலும் இவர்கள் பாக்களில் நாம் காண்பது புதிய புதிய உண்மைகள்; புதிய புதிய ஒளிவெள்ளம்; புதிய வாழ்க்கையமைப்பு. மக்கள் உள்ளத்தில் உறையும் எண்ணத்துடிப்புக்களை, சமூகத்திலே பரவியுள்ள மூடப் பழக்க வழக்கங்களை, எடுத்து விளக்குவன இவர்களின் கவிதைகள். சுருங்கக் கூறின் மக்களுக்காக, மக்களிடையே வழங்கும் மொழியில் இயற்றப்பட்ட கவிதைகள் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் எனக் கூறுதல் மிகையாகாது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை இலக்கியமும் பல விதத்தில் விருத்தியடைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவேதநாயகம் பிள்ளை, வீராசாமி செட்டியார், இராஜமையர் முதலியோர் கையாண்ட வசன நடையில் இலக்கியச் சுவையும் நேர்மையும் இருந்தபோதும், ஒருவிதமான கனத்தன்மையும் ஆற்றலின்மையும் காணப்படுகின்றன. தமிழ் உரை நடைக்கு இவ்விதக் கனத்தன்மையை ஒழித்து, ஒரு புதிய ஒளியைக் கொடுத்தவர் சுப்பிரமணிய பாரதியாரே. பாரதியார் எழுதிய ஞானரதத்தில் அவருடைய

கற்பனை அழகின் உச்சத்தைக் காணலாம். இந்த நூலில் பாரதியின் வசன நடை ஆற்றல் மிக்க எளிய நடை; அது இதற்கு முன்னால் தமிழிலுள்ள வசனத்திற்கு முற்றிலும் மாறுபட்டுப் புதிய குணங்களைப் பெற்றது. இவரது முயற்சியினால் தமிழ் உரை நடை பொதுமக்கள் அறியக்கூடிய எளிய நடையிலேதான் இருக்க வேண்டும் என்ற கொள்கை நிலைத்துவிட்டது. தமிழ்நாட்டின் வாழ்வு, கலைகள், அரசியல் நிலை, சமுதாய முன்னேற்றம், மொழி வளர்ச்சி முதலிய பலபொருள்களைப் பற்றித் தாம் கொண்டிருந்த தெளிவான கருத்துக்களை வசன நடையில் வெளியிட்டுள்ளார்.

காலஞ்சென்ற வ. வெ. சு. ஐயரும் தமிழில் அநேக வசன நூல்களை நயத்துடன் இயற்றியுள்ளார் அவற்றுள் மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகளடங்கிய நூல்உயர்ந்த இலக்கியத்தன்மையும் ஒப்பற்ற பெருமையுமுடையது. அவர் பிளேட்டோ, சோக்கிரட்டீசு, சந்திரகுப்தன் முதலியோரின் வரலாறுகளை எழுதியிருக்கிறார். கலாநிதி உ. வெ. சாமிநாதையரும் பல உரைநடை நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சரித்திரத்திற்கு அதிக சிறப்புண்டு. ஒரு தமிழ்ப்புலவரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் விரிவாக வசன நடையில் எழுதிய பெருமை இவருக்கே உரியது. இவர் எழுதிய நான் கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும், நல்லுரைக் கோவை, நினைவு மஞ்சரி முதலிய வசனத் தொகுதிகளும் சிறந்தவை.

இந்நூற்றாண்டுகளில் தமிழ் உரை நடையிற் பல இலக்கிய ஆராய்ச்சிநூல்களும் வெளிவந்தன. அவற்றுள் முதலிற் குறிப்பிடத்தக்கது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சபாபதி நாவலர் எழுதிய திராவிடப் பிரகாசிகை. இது பழைய முறையில் ஆற்றலுடன் எழுதப் பெற்ற ஓர் ஆராய்ச்சி நூல். செல்வக்கேசவராய முதலியார் எழுதிய நூல்களில்

கம்பரைப் பற்றி எழுதியது சிறந்தது. அனவரதவிநாயகம் பிள்ளை எழுதிய இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சில தமிழ்ப் பெருமக்கள் வரலாறு என்னும் நூலில் அடங்கியுள்ளன. கம்ப ராமாயண ரசனை என்ற பெயருடன் வ. வெ. சு. ஐயர் எழுதிய கட்டுரை தலைசிறந்த ஆராய்ச்சி நூலாகும்.

நூற்றுக்கணக்கான நாவல்களும் இருபதாம் நூற்றாண் டில் வெளிவந்துள்ளன. மாதவையரின் பத்மாவதி சரித்திரம் என்னும் நூல் தமிழ் மொழியிலுள்ள சிறந்த ஒரு நாவல். கதை, சுவையுடன் அமைந்திருக்கின்றது; பாத்திரங்களும் நயத் துடன் சித்திரிக்கப்பட்டிருக்கின்றார்கள். இருபதாம் நூற்றாண் டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டின் சமுதாய வாழ்க்கை அடைந்த மாறுதல்களை இந்நூல் நன்றாய்க் காட்டுகின்றது. வை. மு. கோதைநாயகி, வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஸ்ரீ நிவாசன், ய. லக்ஷ்மிநாராயணன், குகப்பிரியை, தி. நா. சுப்பிர மணியம், வ. ரா. ரா. வெங்கடாசலம் முதலிய நாவல் எழுத்தா ளரும் பல நாவல்கள் எழுதியுள்ளார்கள். ஆயினும் நாவல்கள் தமிழ் நாட்டில் நன்றாய் வேரூன்றிச் செழித்தோங்கவில்லை. தமிழ் நாட்டு வாழ்க்கையைப் பற்றிய சிறந்த நாவல்கள் இல்லை. எனினும் பிறமொழிகளிலுள்ள நல்ல நாவல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பங்கிம் சந்திர சட்டர்ஜி, சரத் சந்திர சட்டர்ஜி, தாகூர், பிரேம்சந், பெயின் முதலியோரின் நாவல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இக்காலத்தில் நல்ல தமிழ் நாவல்கள் இல்லாதபோதிலும் சிறுகதை இலக்கியம் அதிக வளர்ச்சியடைந்திருக்கிறது. தமி ழில் முதலாவதாகச் சிறுகதைகள் எழுதியவர் காலஞ்சென்ற வ. வெ. சு. ஐயர். அவர் எழுதிய சிறுகதைகள் போல அவ்வளவு உணர்ச்சிப்பெருக்குடன் எழுதப்பட்ட கதைகள் தமிழில் அதிகமாயில்லை. ஐயர் சிறுகதையின் பொருளாகக் காதலைக் கொண்டனர். கமல விஜயம், குளத்தங்கரை அரசமரம், லைலா மஜ்னூன், அனார்கலி முதலியன சிறந்த சிறுகதைகள். கல்கி ஏட்டிக்குப்போட்டி, சாரதையின் தந்திரம் முதலிய கதைகளை

நகைச்சுவைததும்ப எழுதியுள்ளார். சக்கரவர்த்தி இராசகோ பாலாச்சாரியார் குடியின் கேடு, தீண்டாமை விலக்கு முதலிய பொருள்களைப்பற்றி நயமும் சுவையும் பொருந்திய கதைகள் எழுதியுள்ளார். கடந்த சில ஆண்டுகளாக சிறுகதைகள் அதிகமாய் எழுதப்பெற்றன. பத்திரிகைகள் ஏராளமாய் இருப்பது இதற்குரிய முக்கிய காரணம். பத்திரிகைகள் மூலம் சிறுகதைகள் எழுதியவருள் 'புதுமைப்பித்தன்', பிச்ச மூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியம், ஜகந்நாதன். தி. நா. சுப்பிரமணியன், க. நா. குமாரசாமி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்.

தமிழிலே நாடக இலக்கியங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. பொதுவாகக் கதைகளை நீளமாய் நாவல்களாய் எழுதுவதைவிட நாடகங்களாய் எழுதுவது பொறுப்பானது. ஒரு கதைக்கு நாடக உருவமும் நாடகத்தன்மையும் கொடுப்பதற்கு மிகுந்த கற்பனைத் திறன் வேண்டும். வசன நடையில் எழுதப் பெற்ற நாடகங்களில் திரு. ப. சம்பந்தமுதலியாரின் நூல்கள் சிறந்தன. இவர் ஏறக்குறைய நாற்பது நாடகங்கள் வரை எழுதியுள்ளார். தமிழ் நாடக மேடை சீர்கேடான நிலைமையில் இருந்ததால் அதைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் அரங்கமேடையில் நடிப்பதற்காகவே இவை எழுதப்பட்டன. இப்போது இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ் மொழிக்கு அருந்தொண்டு ஆற்றிவரும் கலாநிதி கந்தசாமி கணபதிப்பிள்ளை அவர்கள் நானாடகம் என்ற பெயருடன் சிறந்த நாடகங்கள் நான்கு இயற்றி வெளியிட்டிருக்கின்றார். இரு நாடகம் என்ற பெயருடன் இருநாடகங்கள் அண்மையில் வெளிவந்திருக்கின்றன. இந்நாடகங்கள் பல்கலைக் கழக மாணவர் நடிப்பதற்கெனச் சிறப்பாக எழுதப்பட்டவை. யாழ்ப்பாணத்தில் பத்து ஆண்டுகளுக்குமுன் நிலவிய பேச்சு வழக்குத் தமிழில் இவை எழுதப்பட்டுள்ளன. பேச்சு வழக்குத் தமிழில் நாடகங்கள் எழுதுவோருக்கு இவரே வழிகாட்டினர். இவர் இன்னும் பல நாடக நூல்கள் எழுதித் தமிழில் நல்ல நாடகங்கள் இல்லாத குறையை நீக்குவாரெனத் தமிழ் உலகம் எதிர்பார்க்கின்றது.

2

தமிழ் இலக்கண நூல்கள்

குறுமுனியாகிய அகத்தியனாரே தொடக்கத்தில் தமிழிற்கு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணம் வகுத்தாரென்பது பொதுவழக்கு. தலைச்சங்கமும் இடைச்சங்கமுமிருந்தார் அகத்தியனார் என்றும் இவ்விரு சங்கத்தார்க்கும் நூல் **அகத்தியம்** என்றும் இறையனார் அகப்பொருள் உரை கூறுகின்றது. இயற்றமிழ் இலக்கணம் வகுப்பதோடு அமையாது இவர் இசைநாடக இலக்கணமும் வகுத்தனர் என்பர் பெரியோர். இவ்வாறு அகத்தியனாரால் 12,000 சூத்திரங்களைக் கொண்டதாக இயற்றப்பட்ட இலக்கண நூல் இப்போது கிடைத்திலது. சிற்சில சூத்திரங்களை உரையாசிரியர்கள் தமது உரைகளில் மேற்கோளாக ஆண்டிருக்கின்றனர். இவ்விதம் ஆளப்பட்ட சூத்திரங்கள் யாவற்றையும் தொகுத்துச் சில ஆண்டுகளுக்குமுன் பவணந்தம் பிள்ளையென்பவர் "பேரகத்தியத்திரட்டு" என்ற பெயருடன் வெளியிட்டனர். இச்சூத்திரங்களை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர் இவை பிற்காலத்தனவென்றும், இவற்றைப் பின்பற்றித் தொல்காப்பியர் தமது நூலை இயற்றவில்லையென்றும் துணிவாகக் கூறுவர்.[1]

இப்பொழுது கிடைத்துள்ள இவ்வகத்தியச் சூத்திரங்கள் பழங்காலத்திற்கே உரியன என்பதைக் குறிப்பதற்கு இவற்றின் அமைப்பு, பொருள், மொழிநடை முதலியவற்றில் ஒரு சான்றும் இல்லை. மேலும் சங்கதச்சொற்களும் சங்கத இலக்கணப்பாகுபாடும் அமைந்திருப்பதனால், பிற்சாலத்தவர்

1. K. N. Sivaraja Pillai: Agastya in the Tamil land.

இச்சூத்திரங்களை இயற்றிய, அகத்தியச்சூத்திரங்களென வழங்கினரென்று தெரிகின்றது. அகத்தியரின் சிறந்த மாணவராகிய தொல்காப்பியர் தமது ஆசிரியரைப்பற்றியோ அவர் இயற்றிய நூலைப்பற்றியோ குறிப்பிடாதிருத்தலும் கவனிக்கத்தக்கது. தென்னிந்தியாவில் வைதிக சமயங்களுக்கும் புறச் சமயங்களாகக் கருதப்பட்ட பௌத்த சமண சமயங்களுக்குமிடையே சமயப்போர் மூண்ட பொழுது, தமிழரை மீண்டும் சைவசமயத்தைக் கைப்பற்றச் செய்வதற்கு ஏற்ற ஒரு கருவியாக அகத்திய மரபு தோன்றியதெனச் சிவராசபிள்ளையவர்கள் கொள்வர். இவர் கூற்று மிகப் பொருத்தமுடைத்தே. வடக்கே இருந்து வந்த, சீர்திருந்தியவராகக் கருதப்பட்ட, ஆரியரோடு தமிழருக்குப் பழந்தொடர்பு இருந்ததெனக் கதைகள் எழுந்தன. அக்காலப் பொதுமக்களும் இக்கட்டுக் கதைகளை உடனே நம்பினர். ஏனெனில் இக்கதைகளிலிருந்து தமது இனம் மேன்மையுடையது, தொன்மையுடையது எனக் கருதினர். அக்காலத்திலே தமிழ் நாட்டிலே வந்து குடியேறிய பிராமணருக்குத் தமிழ் மக்களிடையே அதிக செல்வாக்கு இருந்தது. எனவே மக்கள் அவ்வாரியரின் கூற்றுக்களைத் தெய்வமொழியாகக் கொண்டு, நம்பிக்கை மேலீட்டினால் அவற்றைப் பரம்பரை பரம்பரையாக வழங்கியும் வந்தனர். இதன் பயனாக அகத்தியமரபு மக்கள் உள்ளத்தில் வேரூன்றி, நாளாவட்டத்தில் எங்கும் பரவிக்கொண்டு வந்தது. பேராசிரியர் பாணற்று அவர்கள் இவ்வகத்திய மரபினைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:—

"பிராமண முனி'யாகிய அகத்தியர் முதன்முதல் ஆரியருடன் பொதியமலையிற் குடியேறித் தமிழ்மொழியைக் கற்பித்தனர் என்ற மரபு பிற்காலத்தில் வடமொழியிலுள்ள புராணக்கதைகளைத் தழுவியே எழுந்திருக்க வேண்டும்." [2]

---

2. L. D. Barnett: Cambridge History of India, Volume I page 596 f. n. 1.

எனவே மேலே காட்டிய சான்றுகளால் அகத்தியரென ஓர் இலக்கண நூலாசிரியர் இருந்தனரோ என்னும் ஐயம் தோன்றுகின்றது. தொல்காப்பியச் சூத்திரங்கள் சில 'என்ப' 'மொழிப' என்று முடிகின்றன. தொல்காப்பியருக்கு முன் இலக்கண ஆசிரியர்கள் இருந்தனர் என்பதை இவை குறிக்கின்றன. ஆனால் அவ்வாறு குறிக்கப்படும் ஆசிரியர் அகத்தியனார்தான் என்பதற்கு எவ்வகைச் சான்றும் இல்லை. அகத்தியம் தொல்காப்பியத்தின் முதனூலன்று என்பதும், இப்பொழுது அகத்தியச் சூத்திரங்களென வழங்குவன பிற்காலத்திலே இயற்றப்பட்டு அகத்தியர்மேல் சுமத்தப்பட்டன என்பதும் ஒத்துக்கொள்ளற்பாலன.

தொல்காப்பியமே இப்பொழுது எமக்குக் கிடைத்துள்ள பழைய இலக்கண நூலாய்க் குறைபாடுகளில்லாது விளங்குகின்றது. இதைத் தொல்காப்பியக் குடியிலே தோன்றிய தொல்காப்பியர் என்பவர் ஐந்திரம என்ற வடமொழி இலக்கண நூலைப் பின்பற்றி எழுதினர் என அறிஞர் கொள்வர். இது இரண்டாம் சங்கத்திற்குரிய நூலென இறையனார் அகப்பொருள் உரை கூறுகின்றது. ஆனால் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தொல்காப்பியர் பதஞ்சலி முனிவர்க்குக் கடப்பட்டுள்ளபடியால் கி. மு. 100 க்குப் பின் அவர் வாழ்ந்தவர் என்றும், தொல்காப்பியர் கருத்து மனுதர்ம சாத்திரத்தில் காணப்படுவதால் தொல்காப்பியர் கி. பி. 200 க்குப் பிற்பட்டவர் என்றும், தொல்காப்பியர் கூறும் உத்திகள் கௌடில்பரது நூல்களில் காணப்படுவதால் தொல்காப்பியர் காலம் கி. பி. 300க்குப் பிற்பட்டதாகும் என்றும், தொல்காப்பியர் எண்வகை மெய்ப்பாடுகளைப் பற்றிக் கூறியிருப்பது பரத முனிவரது நூலினைப் பின்பற்றியிருப்பதால், தொல்காப்பியர் கி. பி. நான்காம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தனரென்றும் பல சான்றுகள் காட்டித் தொல்காப்பியர் காலம் கி .பி, ஐந்தாம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக்கொள்வர்.[3]

---

3. எஸ். வையாபுரிப்பிள்ளை: தமிழ்ச்சுடர்மணிகள் பக். 26–28 (இரண்டாவது புதுக்கிய பதிப்பு 1952)

சிவராசபிள்ளை அவர்களும் தமிழ் நாட்டில் பெரும் இராச்சியங்கள் நிலவிய பிற்காலத்திற்கே தொல்காப்பியம் உரியதெனக் கொள்வர். ஆரியர் ஆதிக்சம் தமிழ் நாட்டில் வேரூன்றிய பிற்காலத்திலேயே தொல்காப்பியம் இயற்றப் பட்டதென இவர் சான்று தந்து கூறுவர்.[4] தொல்காப்பியம் வருணனை நெய்தலுக்கும் இந்திரனை மருதத்திற்குமுரிய தெய்வங்களாகக் கூறுகின்றது. சங்கம் மருவிய காலத்திற்குரிய பரிபாடலில் ஒழிய ஏனைய சங்கநூல்களில் இத்தெய்வங்களின் வழிபாடு கூறப்படாதிருத்தலால் இந்நூல் சங்ககாலத்திற்குப் பிந்தியதென அவர் கொள்வர். மேலும் "ஓரை" என்ற சொல் களவியலில் வருவதால் கிரேக்க வானசாத்திரம் தமிழ் நாட்டிற் புகுந்த 4-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்திலேயே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார். இவ்வாறு பல ஆராய்ச்சியாளர் தொல்காப்பியம் சங்ககாலத்திற்குப் பிந்தியதெனப் பல சான்றுகள் காட்டி நிறுவுவர். இந்நூல் சங்கமருவிய காலத்திற்கு உரியதெனக் கொள்ளுதல் ஏற்புடைத்து.

தொல்காப்பியர் சமயத்தைப் பற்றியும் கொள்கை வேறுபாடு உண்டு. அவர் சமண சமயத்தவர் என்பார் கூற்றே பொருத்த முடையதாகத் தோன்றுகின்றது. "பல்புகழ் நிறுத்த படிமையோன்" எனத்தொல்காப்பியர் சிறப்பிக்கப் படுகின்றார். 'படிமை' என்பது சமண சமய வழக்குச் சொல். அச்சொல் தவவொழுக்கம் என்றதனை உணர்த்துதல் சமண சமய நூலின் கண்ணேயே காணப்படுவதால் தொல்காப்பியர் சமணர் என்பர். ஓவ்வொரு உயிரிலுமுள்ள அறிவு நுட்பங்களைக் கூரிதாக ஆராய்ந்து, உயிர்களைப் பல பிரிவுகளாகப் பிரித்தவர் சமணரே. இதனைத் தொல்காப்பியர் மரபியலிற் கூறுகின்றார்—சூத்திரங்கள் 27–33. தொல்காப்பியர் எழுத்

---

4. **K. N. Sivaraja Pillai: The Chronology of the early Tamils (1932) Appendix: xv.**

ததிகார ஏழாம் சூத்திரத்தில் கூறிய மாத்திரை இலக்கணம் சமணருக்குரியதே. பாகத நூல்களில் காணப்படும் செய்யுள் வகையின் இலக்கணத்தைத் தமிழ்ச் செய்யுள் வகைக்குச் சார்த்தித் தொல்காப்பியர் விதித்ததும் அவர் சமணர் என்பதற்குச் சான்று. இவ்வாறு பல காரணங்கள் சாட்டித் தொல்காப்பியர் சமணர் என நிறுவியுள்ளார்கள் சான்றோர்கள்.[5]

தொல்காப்பிய நூலானது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்என மூன்று பகுதிகளையுடையது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களை உடையது. எழுத்ததிகாரத்தின் முதலியலாகிய நூன்மரபு முதலெழுத்து, சார்பிற்றோற்றம் ஆகியவற்றின் இலக்கணத்தையும் அளவினையும் விளக்கும். சொற்களில் இன்ன எழுத்து இன்ன இடத்தில் நிற்றல் வேண்டும் என்பதை மொழி மரபு கூறும். அதன்பின் எழுத்துக்களின் பிறப்பியல் கூறப்படுகின்றது. மொழிகள் தொடரு முறையை ஆசிரியர் புணரியலுட் கூறுகின்றார். வேற்றுமையிலும் அல்வழியிலும் வரும் சொற்றொடர்கள் தொக்கு நிற்குமுறையைச் சிறப்பாக எடுத்துக்காட்டுவது தொகை மரபு. உருபுகளும், உயிர் எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும், குற்றியலுகரமும் புணருமுறையை முறையே உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப்புணரியல் ஆகிய இயல்கள் கூறுகின்றன. குற்றியலுகரப் புணரியலுடன் எழுத்ததிகாரம் முடிகின்றது.

சொல்லதிகாரத்தின் முதல் இயலாகிய கிளவியாக்கத்தில் சொற்றொடருள் திணை, பால், மரபு முதலியனவை வழுவாதுசொற்கள் அமைக்கும் முறைமை விளக்கப்பட்டுளது. இரண்டாவது இயலாகிய வேற்றுமை இயலில் எண்வகைவேற்றுமையின் உருபும், பொருளும், சொல்லின்கண் அவை பயிலும் முறையும் விரிவாகக் கூறப் பட்டுள. பொருளிலும் உருபிலும் உள்ள வழுவமைதியை வேற்றுமை மயங்கியல் கூறுகின்

5. எஸ். வையாபுரிப்பிள்ளை: தமிழ்ச் சுடர்மணிகள் பக். 7–25 (இரண்டாவது பதிப்பு 1952)

றது. விளி வேற்றுமையைப் பற்றித் தனியியல் ஒன்று ஐந்தாவதாக அமைந்துள்ளது. பின்னர் பெயர், வினை, இடை உரிச் சொற்களின் இலக்கணங்கள் முறையே பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய இயல்களிற் கூறப்பட்டுள்ளன. இறுதியியலாகிய எச்சவியல் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச்சொற்களின் இலக்கணத்தையும், சொல்லின் கண்ணும் சொற்றொடரின் கண்ணும் பொருள்கோண் முறைமையையும் கூறுகின்றது.

பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்னும் ஒன்பது பகுதிகளை உடையது. தொல்காப்பியர், தலைவன் தலைவியர் இடத்தே நிகழும் ஒழுக்கத்தினைக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூன்றாக வகுத்து அகத்திணை இயலில் உரைக்கின்றார். கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். பெருந்திணை என்பது பொருந்தாக்காமம். ஐந்திணை என்பது ஒத்த அன்புடையாரிடத்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்தின் கண்ணும் நிகழும். புறத்திணை இயல், அகப்பகுதி ஆகிய எழுதிணைக்கும் நேராகிய புறத்திணை ஏழின் இலக்கணத்தையும் வகுத்து விளக்குகின்றது. அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டினை என்பன. இவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என்னும் அகத்திணைகளோடும் ஒருபுடை ஒப்புடைய புறத்திணைகள். இல்லறம் நிகழ்த்துவதற்கு முன் நிகழும் ஒழுக்கம் களவியலில் கூறப்படுகின்றது. ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டுக் கூடி மணந்து ஒழுகும் ஒழுக்கம் இது. மணத்தின் பின் நிகழும் ஒழுக்கத்தினைக் கற்பியல் கூறுகின்றது. பொருளியல் அகவொழுக்கத்தின் ஒழிபியலாக அமைந்துள்ளது. மெய்ப்பாட்டியல் பெருமிதம்,

அச்சம், வியப்பு, இழிவு, உவகை, அவலம், நகை, வெகுளி என்னும் எண்வகைச் சுவைகளின் இலக்கணங்களைக் கூறுகின்றது. உவமையணியையும் அதன் பாகுபாடுகளையும் விரித்து ஆசிரியர் உவமையியலில் கூறுகின்றார். செய்யுள் உறுப்புக்களாகிய அசை, சீர், தளை, தொடை முதலியவற்றின் இலக்கணங்களைச் செய்யுளியல் ஓதுகின்றது. கடைசி இயலாகிய மரபியலில் தொல்காப்பியர் தமிழர் வழக்கிலும் செய்யுளிலுமிருந்த மரபுகளைத் தொகுத்துக் கூறுகின்றார்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதினோர் பலராவர். இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதினர். ஆனால் பொருள் அதிகாரத்திலுள்ள மெய்ப்பாடு, மரபு, உவமை ஆகிய மூன்று இயலுக்கும் நச்சினார்க்கினியர் செய்த உரை இக்காலத்தில் கிடைத்திலது. இளம்பூரணரே தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரை எழுதியவராகையால் உரையாசிரியர் என்ற பொதுப் பெயர் அவருக்குச் சிறப்புப்பெயராக வழங்குகின்றது. சூத்திரங்களுக்கு நேருரை கண்டவர் இவரே. நச்சினார்க்கினியர் பல இடங்களில் சூத்திரங்களுக்கு வலிந்துபொருள் உரைத்த போதிலும், அவரைச் சான்றோர் "உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்" எனச் சிறப்பித்துக்கூறுவர். இவ்விருவரைத்தவிர, சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் எழுதிய உரைகளும் உள. சேனாவரையர் உரை மிகவும் சிறந்தது என அறிஞர் பாராட்டுவர்.

தொல்காப்பியத்திற்குப்பின் தோன்றிய அகப்பொருள் இலக்கணநூல்களிற் சிறந்தது இறையனார் அகப்பொருள். பாண்டிய நாட்டில் பன்னிரண்டியாண்டு நிலைத்திருந்த கருப்பொன்று கழிந்தபின் பாண்டிய மன்னன் தமிழ்ச்சங்கத்தைமீண்டும் நிறுவிய காலத்திலே கூடற்பெருமான் பீடத்தின் கீழ்க்கண்டு எடுக்கப்பட்டதென்பர் இந்நூல். இவ்வாறு

இறையனுர் இயற்றியதாகக் கருதப்படும் இந்நூல் ஐவகை இலக்கணங்களில் ஒன்ருகிய பொருள் இலக்கணத்தின் ஒரு பகுதியாகிய அகப்பொருள் இலக்கணத்தைக் கூறுகின்றது. இதன் காலம் யாது எனத் திட்டமாகக் கூறமுடியாது. இன்னூலுக்குரை கண்டார் நெற்றிக்கண்ணைக்காட்டினும் குற்றங்குற்றமே என வாதாடிய சங்கப்புலவராகிய நக்கீரர் என்பர். ஆனல் இக்கூற்றுப் பொருந்தாது. இவ்வுரை பாண்டிக்கோவையிலிருந்து 327 பாடல்களை எடுத்து ஆளுகின்றது. கிடைத்துள்ள கோவை நூல்களுள் இதுவே காலத்தால் முந்தியது. திருஞான சம்பந்தருக்குச் சம காலத்தவனை நெல்வேலி வென்ற சீர் நெடுமாறன் என்னும் பாண்டியன் அரிகேசரி மாறவர்மனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டது இன்னூல். இவன் கி. பி. 670 தொடக்கம் 710 வரை ஆட்சி புரிந்தான். எனவே இவ்வுரை எட்டாம் நூற்ருண்டுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றி இருக்க முடியாது.

தமிழ் இலக்கணம் ஐந்தனுள் பொருளின் பகுதியாகிய புறத்தின் இலக்கணமாகிய சூத்திரங்களையும், அவற்றின் இலக்கணமாகிய வெண்பாக்களையும், அவ்வெண்பாக்களின் கருத்துக்களைத் தனித்தனியே புலப்படுத்தி ஒவ்வொன்றன் பின்னும் நிற்பனவாகிய கொளுக்களையுமுடையது புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல். இந்நூலிலுள்ள கொளுக்கள் சூத்திரங்கள் எனவும் வழங்கும். நூலையியற்றியவர் ஐயனுரிதனுர் என்பவர். இவர் சேரர் பரம்பரையில் தோன்றியவர் என்றும் அகத்தியரின் மாணுக்கர் பன்னிருவர் செய்த பன்னிருபடலம் இதன் முதனூல் என்றும் கூறுவர். "மன்னிய சிறப்பின்" என்னும் இந்நூல் சிறப்புப்பாயிரத்தாலும், "மெய்யினுர்தமிழ் வெண்பா மாலையுள் ஐயனுரிதனமர்ந்துரைத்தனவே" என்னும் இந்நூலின் 18ம் சூத்திரத்தாலும், "பன்னிருபடல முதனூலாக வழி நூல் செய்த வெண்பா மாலை ஐயனுரிதனுரும்—இது கூறினுர்" (தொல்காப்பியம், மரபியல், சூத்திரம் 94—பேராசிரியர் உரை) என்பதனுலும்

இவை அறியப்படும். பன்னிருபடலத்தின் வழிநூல் என்பதற்கேற்ப வெட்சிப்படலம் முதல் பெருந்திணைப்படலம் இறுதியாகப் பன்னிரண்டு படல உறுப்புக்களை உடையது புறப்பொருள் வெண்பாமாலை.[6]

இந்நூல் வெண்பாமாலையென்ற பெயருடனேயே பெரும்பாலும் வழங்கும். இதில் உள்ள வெண்பாக்கள் பலவற்றையும் கொளுக்கள் சிலவற்றையும் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், புறநானூற்றுரையாசிரியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலியோர் மேற்கோளாக எடுத்தாண்டும் உரை நடையாக எழுதியும் இருக்கின்றனர். இந்நூலைப் பெரிதும் எடுத்தாண்டவர் இலக்கணவிளக்க உரையாசிரியரே.

புறப்பொருள் வெண்பாமாலையிற் கூறப்பட்டிருக்கும்போர்முறை முதலியவற்றிற்கும் தொல்காப்பியர் தமது நூலில் புறத்திணையியலிற் கூறியிருப்பவற்றிற்கும் ஆங்காங்கு சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல் உரைகளில் புறப்பொருட் செய்திகளுக்கு இலக்கணம் கூறவந்த ஆசிரியர்கள் புறப்பொருள் வெண்பாமாலையிற் காணப்படும் முறையைப்பின்பற்றியே எழுதினர். இளம்பூரணர் தொல்காப்பியம் புறத்திணை இயல் உரையில் இந்நூலிலுள்ள வெண்பாக்கள் பலவற்றை எடுத்துக்காட்டாகக் காட்டு

---

6. பன்னிருபடலத்துள் வெட்சிப்படலத்தைத் தொல்காப்பியர் இயற்றினர் என்பது பொருந்தாதெனஇளம்பூரணர் தொல்காப்பியம் புறத்திணை இயலிற் கூறுகின்றார். வெட்சிப்படலத்தைத் தொல்காப்பியர் செய்திராவிட்டாலும் பன்னிருபடலங்களைக் கொண்ட ஒரு புறப்பொருள் நூல் புறப்பொருள் வெண்பாமாலைக்கு முன் இருந்திருக்க வேண்டும். இந்நூற் சூத்திரங்களுட் சில யாப்பருங்கல விருத்தியுரை, இலக்கண விளக்கவுரை முதலிய உரைகளில் ஆங்காங்கு காணப்படுகின்றன. அச்சூத்திரங்களிற் கூறப்படும் சில திணைகளின் இலக்கணமும் துறைப்பெயர்கள் முதலியவற்றின் காரணமும் அறியமுடியவில்லை.

தலால் அவர் காலத்துக்கு இவர் முந்தியவராவர். பல்லவர் காலத்தின் இறுதியில் நூல் தோன்றியிருக்கலாம்.

இவற்றின்பின் இயற்றப்பட்ட இலக்கண நூல்களுள் எமக்கு இப்போது கிடைத்துள்ளன சோழ அரசரின் ஆட்சிக் காலத்தே இயற்றப்பட்ட நூல்களேயாம். அவரது ஆட்சியில் தோன்றிய இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியவை யாப்பிலக்கண நூல்களாகும். அகத்தியனாரால் செய்யப்பட்ட அகத்தியத்தில் செய்யுள் இலக்கணம் பரந்து கிடந்ததென்றும், அதனைத் தொல்காப்பியர் சுருங்கச் செய்தமையின் அதன் அருமை நோக்கிப் பல்காப்பியர் பகுத்துக்கூறினர் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவர். ஆசிரியர் பல்காப்பியருக்கு முன் பல்காயனார் முதலாயினோரும், அவரின் பிற்காலத்துக் காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார், அவினயர் முதலாயினோரும் செய்யுள் இலக்கணம் செய்தனரென அறிஞர் கூறுவர். இதன் உண்மை எவ்வாறாயிருப்பினும் தொல்காப்பியம் ஒழிய எஞ்சிய எல்லாம் இறந்தொழிந்தன. சில சூத்திரங்கள் மட்டும் உரையாசிரியரால் மேற்கோளாகக் கையாளப்படுகின்றன. சோழர் ஆட்சிக்காலத்துச் சமணரால் இயற்றப்பெற்ற யாப்பருங்கலமும், யாப்பருங்கலக்காரிகையுமே இப்போது வழக்கின்கண் உள.

வேற்றுமொழிச் சொற்களும் பொருளும் அதிகம் விரவப்பெறாத சங்ககாலத்திலும் அதற்கடுத்த சங்கமருவிய காலத்திலும் அகவற்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா என்னும் இயற்கைச் செந்தமிழ்ப் பாக்களே தமிழில் வழங்கிவந்தன. இப்பாக்கள் பாவினங்களின் அரியபெரிய அமைதிகளையெல்லாம் முதன் முதல் முற்றாக எடுத்துத் தெளிவாக விளக்கிய தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியமே. சங்ககாலம் கழிந்தபின் இடைப்பட்ட காலத்திலே வேறு நாட்டவரின் ஆதிக்கத்தால் சங்கதமொழியாளரின் சொற்களும், யாப்பு வகைகளும் தமிழ் மொழியில் இடம் பெற்றன. அக்காலப்பகுதியில் ஆரியர் திரள் திரளாகத் தென்னிந்தியாவிற் புகுந்து,

ஆதிக்கம் பெற்றதால், அவர் மாற்றித்தந்த விருத்தப்பாக்களைத் தமிழர் தமக்கு இசைந்தவாறு பல வகைப்படத்திரித்து அமைத்தார்கள். இதனாலேயே கி. பி. 7ம் 8ம் 9ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சைவநாயன்மார் காலம் தொட்டு இன்று வரையும் பத்திப்பாடல்கள் காவியங்கள் புராணங்கள் முதலியன பெரும்பாலும் பலவகைப்பட்ட விருத்தப் பாக்களினாலேயேயாக்கப்படுவனவாயின.

தமிழுக்கே சிறப்பாக உரிய பாக்கள் வழங்கிய பண்டைக்காலத்தில் இயற்றப்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பிற்காலத்தில் வழக்கில் அமைந்த கலித்துறைகள் விருத்தங்கள் முதலியவற்றின் இலக்கணவகைகள் கூறப்படவில்லை. தமிழுக்கே சிறப்பாக உரிய பாக்கள் பாவினங்களோ இப்புதியபாக்கள் பாவினங்களின் இலக்கணங்களையும் விளக்கமாக விரித்துக் கூறியது யாப்பருங்கலமென்னும் நூல். இதை இயற்றியவர் அமிர்தசாகரர். யாப்பருங்கலக்காரிகை இயற்றியவரும் இவரே.

யாப்பருங்கலம் சூத்திரங்களாலும் யாப்பருங்கலக்காரிகை கட்டளைத்துறைகளாலும் அமைந்தவை. அக்காலத்திலே தமிழ் நாட்டில் இருந்த சமணசங்கங்களுள் பேர்போனது நந்திகணம். நந்திகணத்தில் அருங்கலான்வயம் மிகவும் சிறப்புற்று விளங்கியது. அமிர்தசாகரர் அருங்கலான்வயத்தைச் சேர்ந்தவர். எனவே தமது நூலுக்கு யாப்பருங்கலமெனப் பெயரிட்டனர். இவர் பத்தாம் நூற்றாண்டின்பிற்பகுதியிலோ பதினொராம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ வாழ்ந்திருக்கவேண்டும். இவ்வகுப்பினர் புகழ் பெற்றகாலம் அதுவே என அறிஞர் கூறுவர். யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரிகையும் அவற்றின் உரைகளும் சமணபண்டிதரால் இயற்றப்பட்டிருந்தலோடு அவற்றின் மேற்கோள்களுட் பெரும்பாலானவையும் சமணசமயத் தொடர்புடையனவாகவே இருந்தன. இதனால் இச்செய்யுட்களைப் படித்துப்பாராட்டுதற்கு விருப்பமில்லாத சைவ வைணவ

சமையப்பற்றுடையோர் வேண்டுகோளின்படி சைவவைணவப் பண்டிதரால் இயற்றப்பட்டு அவ்விலக்கண நூல்களின் மேற்கோளாக முறையே சிதம்பரச் செய்யுட் கோவை பாப்பாவினமெண இரண்டு நூல்கள் இக்காலத்து வழங்குகின்றன.

வீரசோழியம் என்னும் நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும், இன்றியமையாத இடங்களில் வடநூன் மரபையும், மணிமிடை பவளம் போல் விரவிநிற்பச் சொல்லுகின்றது. இது பொன்பற்றியூரிற் சிற்றரசனுயிருந்த புத்தமித்திரனுர் என்னும் புலவரால் கி. பி. 1062ம் ஆண்டு தொடக்கம் பேரரசு செலுத்திய வீரசோழன் என்னும் அரசன் பெயரால் இயற்றப்பட்டது. வீரசோழனுக்கு வீரராசேந்திர சோழன் எனவும் விக்கிரமசோழன் எனவும் பெயர்களும் உண்டு. புத்தமித்திரர் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர். இந்நூலுக்கு உரை எழுதினுர் பெருந்தேவனுர் என்பவர். இவர் கடைச் சங்கக்காலத்திலிருந்த கவிசாகரப் பெருந்தேவனுர், பாரதம்பாடிய பெருந்தேவனுர் என்னும் இருவரினும், பல்லவ அரசன் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்த பாரதம் பாடிய பெருந்தேவனுரினும் வேருனவராவர்.

இந்நூல் ழகரமெய் ளகரமெய்போல வல்லெழுத்துவரின் டகரமெய்யாகவும், மெல்லெழுத்துவரின் ணகரமெய்யாகவும் திரிதற்கும், குறில் செறியாத ழகரமெய், குறில் செறியாத ளகரமெய் போலத் தகர நகரங்கள் வரின் கெடுதற்கும், ழகரமெய்யின் முன்வரும் நகர தகரங்கள் னகரமெய்முன் திரிதல் போல முறையே ணகரமாகவும் டகரமாகவும் திரிதற்கும் விதிகூறுகின்றது. இவ்விதிகள் வேறு இலக்கண நூல்களில் கூறப்படவில்லை. ழகரமெய் ளகரமெய்போல வல்லெழுத்துவரின் டகரமெய்யாகத் திரியும் என்று இந்நூல் கூறும் விதிக்கிணங்க கச்சியப்பசிவாச்சாரியார் தாம் பாடிய கந்தபுராணத்துக் காப்பில் "திகடசக்கரச் செம்முகமைந்துளான்"

என்று உரைத்தார். வீரசோழிய உரையில் இக்காலத்தில் வேறு எவ்விடத்தும் காணப்படாத பல பழைய சூத்திரங் களும் செய்யுட்களும் காணப்படுகின்றன. அவை எந்நூல் களைச் சார்ந்தவை எனத் தெரியவில்லை. நூலிலுள்ள மேற் கோட் செய்யுட்களுட் பெரும்பாலானவை பௌத்த சமயக் கொள்கைகளையும் புத்தரின் வரலாற்று வகையினையும் புலப்படுத்துகின்றன.

நேமிநாதம் என்னும் நூல் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் வெண்பாயாப்பாற் சுருக்க உரைக் கும் ஒரு நூல். இது தென்மயிலாபுரி நீனிறக்கடவுள் நேமிநாதரின் பெயராற் செய்தமைத்தமையான் நேமிநாதம் என்னும் பெயர் உடையது என்பர். தொல்காப்பியமாகிய பேரிலக்கண நூலுள் எழுத்தும் சொல்லும் பற்றிப் பரந்து கிடந்த விதிகளை ஒருவாறு தொகுத்து உரைப்பது இந்நூல். தொல்காப்பியத்தையே முதனூலாகக்கொண்டு அதன் விதிகளையே போற்றி இந்நூல் கூறுகின்றதென்பதனைத் தொல்காப்பியச் சொல்லதிகார இயன் முறையே இதன் சொல்லதிகாரமும் ஒன்பது இயலான் முடிந்திருப்பது அறிவுறுத்துகின்றது. மேலும் இதன் சிறப்புப்பாயிரம் இதனைத் "தொல்காப்பியக் கடலுட் சொற் றீவச் சுற்றளக் கப்—பல்காற்கொண்டேகும் படகென்ப" எனச் சிறப்பித்துக் கூறுகின்றது. தொல்காப்பியமாகிய பெருநூல் கற்றற்கு முன்னே அதன்வழித்தாயுள்ள இச்சிறு நூலைப் பயில்வது பண்டைக்கால வழக்கம். இது இதற்கு வழங்கும் சின்னூல், என்னும் பெயரால் உய்த்துணரத்தக்கது. இன்னூல் தோன்று வதற்குமுன் தொல்காப்பியம் கற்பவர் முதலில் இந்நூலைக் கற்றுப் பின்னரே தொல்காப்பியத்தைக் கற்றுவந்தனரெனக் கூறுவர்.

இந்நூலை இயற்றியவர் குணவீரபண்டிதர் என்பவர். இவருடைய ஆசிரியர் களந்தைப் பதிக்கண்ணிருந்த வச்சணந்தி முனிவர் என்பவர். பன்னிரண்டாம் நூற்றாண்டில்

அரசுபுரிந்த திருபுவனதேவன் எனப் பெயரிய குலோத்துங்க சோழன் காலம் இவர்காலமாகும். இலக்கணங்களை வெண்பா யாப்பிற் பாடுவதில் இவர் மிக வல்லவர் என்பது இந்நூலா லும் இவர் இயற்றிய வெண்பாப்பாட்டியலாலும் அறியலாம்.

குணவீரபண்டிதர் சமண சமயத்தவர். நேமிநாதத்தில் எழுத்ததிகாரத்தின் முதலினும் சொல்லதிகாரத்தின் முதலி னும்வெண்பாப்பாட்டியல் முதலினும் கூறிய கடவுள்வாழ்த் துக்களும், நேமிநாதம் என்றபெயரும் இதற்குச்சான்று பகருகின்றன. சமண சமயத்தவர் வழிபடும் இருபத்துநான்கு தீர்த்தங்கரருள் இருபத்திரண்டாம் தீர்த்தங்கரரே நேமிநா தர். இவர்மேலுள்ள பத்தியால் குணவீரபண்டிதர் தாம் இயற் றிய நூலுக்கு நேமிநாதம் எனப் பெயர் வழங்கியிருக்கவேண் டும். இந்நூலுக்கு உரை ஒன்று உண்டு. ஆனால் அவ்வாசிரியர் பெயர் தெரியவில்லை.

இக்காலத்து மாணவர் பயிலும் இலக்கண நூலாகிய நன்னூலை இயற்றியவர் பவணந்தி முனிவர். "முன்னோ ரொழியப் பின்னோர் பலரினுள், நன்னூலார் தமக் கென் னூலாரும், இணையோவென்னுந் துணிவே மன்னுக" என இலக்கணக்கொத்து உரைகாரர் இவரைப் பாராட்டுவர். (சூ 8. உரை) சங்கரநமச்சிவாயர் நன்னூலுரையில் இவரைப் "பல்கலைக்குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்" எனச் சிறப்பித்துக் கூறுவர் (சூ 137 உரை) பவணந்தியாரும் சமணசமயத்தவர். நன்னூற் கடவுள் வணக்கம் இரண்டும், மொழிக்கு முதற்காரணம் அணுத்திரள் என்ற கோட்பாடும், உயிர்களை ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் இறுதியாக அமைத் திருக்கும் முறையும், பவணந்தி என்ற பெயரும் இதற்குச் சான்றாகும். பிரயோகவிவேக உரையில் "செயப்படுபொருளை ஆக்கல், அழித்தல், அடைதல் முதலாகச் சினேந்திரன் மதம்பற்றி நன்னூலார் பலவாகக் கூறுவர்" (கலித்துறை 12) எனக் கூறியிருப்பதும் கருதற்பாலது.

தொல்காப்பியம் பழந்தமிழ் இலக்கியங்களின் ஆராய்ச்

சிக்கு இன்றியமையாததாக அமைந்தபோதும் அது பரந்திருந்தது. இதனால் அதனைக்கற்று விதிவிலக்குகளை அறிந்து கொள்வது மக்களுக்கு வில்லங்கமாக இருந்தது. எனவே அந்நூல்களிற் கூறப்படும் இலக்கணத்தை யாவரும் எளிதில் அறியும் வண்ணம் ஒவ்வொரு பகுதியையும் சுருக்கி விளக்கி ஓர் இலக்கண நூலைச் செய்யுமாறு சீயகங்கன் என்னும் அரசன் பவணந்தியை வேண்டிக்கொண்டமையால் அவர் இந்நூலை இயற்றினர் என்பர். கி.பி. 1178 முதல் 1216 வரை ஆண்ட மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்தவன் சீயகங்கன். எனவே நன்னூலார் காலமும் அதுவேயாகும்.

இந்நூல் இப்பொழுது எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் ஆகிய இரண்டையுமே கூறுகின்றது. எனினும் இவர் பொருள், யாப்பு, அணி, அதிகாரங்களும் செய்தன ரென்றும், அவை பிற்காலத்தில் இறந்தனவென்றும் சிலர் கொள்வர். நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயர் மயிலைநாதர் எழுதிய உரைகளிலுள்ள குறிப்புகள் இவர்கள் கூற்றுக்குச் சான்றாக அமைந்துள்ளன. மேலும் இடையூற்றின் மிகுதியால் இந்நூல் முடிவுபெறவில்லை என்று தருக்க சங்கிரகவுரை கூறுகின்றது. தொல்காப்பியரைப் போலப் பவணந்தியாரும் யாப்பினையும் அணியினையும் பொருளில் அடக்கி, எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றதிகாரம் அமைத்தார் என்றும், பிற்காலத்தில் பொருளதிகாரம் இறந்துபோக எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமுமே வழங்கலாயினவென்றும் சமணர் சிலர் கூறுவர். எவ்வாறாயினும் பிற்காலத்தில் இவ்விரு அதிகாரங்களே வழக்கிலிருந்தன. இதனால் இந்நூல் சிற்றதிகாரம் எனவும் பெயர் பெற்றது.

தொல்காப்பியத்திற்குப் பின் இயற்றப்பட்ட இலக்கண நூல்களுள் இதுவே சிறப்புற்று விளங்குகின்றது. இந்நூலின் 49ம் சூத்திரவுரையில் தன்மையாற் பெயர்பெற்ற நூலுக்கு இந்நூற்பெயர் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது இதிலிருந்தே இதன் சிறப்பு நன்கு விளங்கும்

ஆசிரியர் நூலிற் சிற்சில இடங்களில் வடமொழி வழக்கைப் பின்பற்றி இலக்கணம் வகுத்துள்ளார். நூலின் இரண்டாம் இயலுக்கு "மொழியியல்" எனப் பெயர் வழங்காது "பதவியல்" என வழங்கியிருக்கின்றார். இவ்வியலில் அவர் கூறியிருப்பது பிற ஆசிரியர்கள் கூறாத புது இலக்கணமாகும். வட சொற்கள் தமிழில் அமைவதற்கும் வடசொற்கள் புணர்வதற்கும் இவர் விதிகள் கூறியுள்ளார் மேலும் முற்காலத்து வழங்கிய இலக்கணங்களுள் பிற்காலத்து வழக்கற்றுக் கிடந்தனவற்றை நீக்கியும், முற்காலத்து வழக்கில் இல்லாது பிற்காலத்தில் வழக்கில் அமைந்தனவற்றைப் பெரும்பாலும் தழுவியும் இவர் நன்னூலை யாத்தனர். இந்நூல் தோன்றியதன் பின், அதுவரை வழக்கிற் சிறந்து ஓங்கிய தொல்காப்பியம் முதலிய பண்டைக்கால நூல்கள் பயிற்சி குன்றின. இது தலையெடுத்து வழக்கில் நிலைபெற்றது.

சோழர் ஆட்சிக் காலத்தில் அணியிலக்கண நூல்களும் தோன்றின. வட நூலாசிரியரோடு தமிழர் ஊடாடியதன் பயனாக அணியிலக்கணத்தையும் தமிழ்ப் புலவர் விருத்தி செய்துகொள்ளத் தொடங்கினர். இதன் பயனாகத் தண்டியலங்காரம் இயற்றப்பட்டது. இந்நூல் தமிழ் மக்களிடையே பயிற்சி மிக்குடையதாய் விளங்குகின்றது. அணியியல் எனவும் இந்நூல் வழங்கும். இது காவியாதரிசனம் என்னும் சங்கத நூலின் மொழிபெயர்ப்பு. எனினும் முதனூலுக்கும் இந்நூலுக்குமிடையே சிறு வேறுபாடு இருப்பதாக அறிஞர் கூறுவர். நூலின் மூன்று பகுதிகள் பொதுவியல், பொருளணி யியல், சொல்லணியியல் என்பன. பொதுவணியியலிற் பொதுவாகப் பலவகை நலப்பாடுகளும் காணப்படுகின்றன. பொருளணியியல் தன்மையணி முதலாக முப்பத்தைந்து அணிகளைக் கூறுகின்றது. தொல்காப்பியர் உவமையணியில் அடக்கிக் கூறியவற்றையே இங்கு ஆசிரியர் விரித்து முப்பத்தைந்து அணிகளிற் கூறினர். சொல்லணியியல் மடக்கு, சித்திரம் முதலிய மிறைக் கவிகளின் பாகுபாடு

களையும் அவற்றின் இலக்கணங்களையும் பரக்கக் கூறுகின்றது.

தண்டியலங்கார ஆசிரியரின் வரலாற்றினைத் துணிவாக அறியமுடியவில்லை. இவர் தண்டியென்னும் பெயருடையவர் எனச் சிலர் கொள்வர். இன்னொரு சாரார் அம்பிசாபதியின் மகன் தண்டியென்னும் பெயரினர் எனக் கொள்வர். ஆகவே தண்டியென்பது இவருக்கு இயற்கையாக உள்ள பெயரோ, வடநாட்டுத் தண்டியாரின் காவியதரிசத்தைத் தமிழிற் பெயர்த்து அமைத்ததால் எழுந்த சிறப்புப் பெயரோ எனத் துணிந்து கூறமுடியாது. இந்நூலுக்கு சிறந்த ஓர் உரை உண்டு. ஆனால் அவ்வுரையாசிரியர் பெயரும் வரலாறும் அறிய இயலவில்லை. இந்நூலின் பழைய படியொன்று "சுப்பிரமணிய தேசிகராற் செய்யப்பட்ட உரை" எனக் கூறுகின்றது. ஆனால் அதன் உண்மை தெளிவாயில்லை. இவ்வுரை சூத்திரப் பொருளைத் தெளிவாக விளக்கி, சூத்திரங் களிற் காணப்படும் அணிவேறுபாடுகளின் இலக்கணத்தை எடுத்துக் காட்டி உதாரணச் செய்யுட்களின் பொருளையும் விளக்கிச் செல்கின்றது.

அரும்பெருநூல்களைக் கற்கும் ஆற்றல் மிக்க பண்டைக் காலத்தவர் தொல்காப்பியத்தை எளிதில் உணர்ந்தனர். அவ்வாற்றல் குன்றிய பிற்காலத்திலே, தொல்காப்பியம் கல்வி முதிர்ச்சி பெற்றோர்க்கன்றிக் கற்கும் சிறுவர்க்கு அங்ஙனம் உணர்தற்கு அரிதாயிற்று. எனவே பிற்காலத்திலே அவ்விலக்கணங்களுள் எழுத்திலக்கணத்தினையும் சொல்லிலக் கணத்தினையும் அக்கால வழக்கிற்கிணங்கப் பழையன கழித் துப் புதியன புகுத்திக் கற்போர் எளிதில் உணரத்தக்கதாகப் பவணந்திமுனிவர் நன்னூலை இயற்றினர். பன்னிருபடலத் தில் விரிந்து கிடந்த புறப்பொருள் இலக்கணத்தை முறைப் படுத்தித் தெளிவுற "வெண்பாமாலை" என்னும் நூலை ஐயனாரிதனார் இயற்றினர்; தொல்காப்பியரும் அவிநயர் முதலி யோரும் கூறிய யாப்பிலக்கணங்களைப் பிற்கால வழக்கினைத் தழுவி வடமொழி யாப்பமைதிகளையும் உள்ளடக்கி யாப்பருங்

கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய இரு நூல்களையும் அமிர்தசாகரர் யாத்தனர். தொல்காப்பியம் உவமையியலில் கூறப்பட்ட அணியிலக்கணத்தை விரித்து, வடமொழியி லுள்ள அணியிலக்கணங்களைப் பெயர்த்துத் தண்டியலங்கார மென்னும் நூலைத் தண்டியாசிரியர் இயற்றினார். அம்முறை யில் தொல்காப்பியம் இறையனார் அகப்பொருள் முதலிய இலக்கண நூல்களில் விரிந்து பரந்து கிடந்த அகப்பொருள் இலக்கணங்களை முறைப்படத் தொகுத்துப் பிற்கால வழக்கிற் கேற்ப "அகப்பொருள் விளக்கம்" என்னும் பொருளிலக்கண நூலை நாற்கவிராச நம்பி இயற்றினார். இந்நூல் "நம்பி அகப்பொருள்" எனவும் வழங்கும். அகப்பொருள் இலக் கணங்களை இந்நூல் தெளிவுற விளக்கியமையால் இலக்கண விளக்க நூலுடையார் அகப்பொருள் இலக்கணம் கூறு மிடத்து இந்நூலிலுள்ள சூத்திரங்களைப் பின்பற்றியே இலக் கணம் வகுத்தனர். இந்நூலாசிரியர் சமயமும் சமணமே. இவர் தமது புலமைத் திறமையின் காரணத்தால் நாற் கவிராச நம்பி எனப் பெயர் பெற்றனர். இந்நூல் பாண்டிய அரசன் குலசேகரனின் அவைக்களத்தில் அரங்கேறியது— இப்பாண்டிய மன்னன் கி.பி. 1260 முதல் 1308 வரை அரசு செலுத்திய முதலாம் மாறவர்மன் குலசேகரன் ஆவான். எனவே நம்பி அகப்பொருளின் காலம் பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதி அல்லது பதின்நான்காம் நூற்றாண்டின் தொடக்கமாக இருத்தல் வேண்டும்.

சோழர் ஆட்சிக்காலத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களுளொன்று அணியிலக்கணத்தை விரிவாக எடுத்துக் கூறும் மாறனலங்காரம். இதனை இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இவர் தென்பாண்டி நாட்டிலே நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகை என்ற ஊரிற் பிறந்த வர். திருக்குருகைப் பெருமாள் சமத்தான வித்துவானாகிய தும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்ற பெயர் பெற்றனர். சடையன், சடைக்குட்டி என்ற பெயர்களும்

இவருக்கு உண்டு. மாறன் என்பது நம்மாழ்வாரைக் குறிக்கும். மாறன், காரிமாறன், சடகோபன், பொருநற் சேர்ப்பன் முதலாயின நம்மாழ்வாருக்கு இயல்பாகவும் காரணம்பற்றியும் வழங்கிவந்த பெயர்கள். தண்டியலங்காரம் போன்ற நூல்கள் அரசன் முதலியோரைப் பற்றிக் கூறும் நூல்கள். ஆனால் இவர் நம்மாழ்வாரிடத்துப் பூண்ட தொண்டினால், இவ்வலங்கார நூலை ஆழ்வார்க்குச் சமர்ப்பித்து, உதாரணங்களை ஆழ்வார் தொடர்பான பொருள்களாகச் சேர்த்து அருளினர்.

தண்டியலங்காரத்திலும் மிக விரிவுடையது மாறனலங்காரம். காவியதரிசத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்தது தண்டியலங்காரம்; ஆனால் மாறனலங்காரம் தொல்காப்பியம் முதலியவற்றின் கருத்துக்களைக் கொண்டதாய், "முதுமொழித் தண்டி முதனூலணியையும், புதுமொழிப் புலவர் புணர்த்தியல் அணியையும், தனது நுண்ணுணர் வாற்றரு பலவணியையும், மனுதறத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும், சதுர்பெறவிரண்டிடந்தழீஇய சார்பெனலாய்" அமைந்திருக்கின்றது. என்றாலும் இது தண்டியலங்காரத்தின் வழி நூலாகுமென்பர். இதன் உரையில் வடமொழித் தண்டியாசிரியரைச் சில இடத்திலும், தமிழ்த் தண்டியாசிரியரை அடிக்கடிப் பல இடங்களிலும் சுட்டியிருக்கிறார்.

தண்டியாசிரியர் கூறிய 35 பொருளணிகளை இவர் 64 அணிகளாக விரித்துக் கூறியிருக்கின்றார். தண்டியாசிரியர் ஒரே சூத்திரத்தில் 12 சித்திரக் கவிகளுக்குப் பெயர் மாத்திரம் கூறிச்சென்றார். ஆனால் இவ்வாசிரியர் தமது நூலில் 32 சித்திரக்கவிகள் அமைத்து அவற்றிற்கு இலக்கணமும் கூறினர். ஆசிரியர் தாமே உதாரணச் செய்யுட்களும் பாடி அமைத்தார். இந்நூலிற் பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு, புறநானூறு, குறுந்தொகை, அகநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம், திருவாய்மொழி, யாப்பருங்கலம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்

காட்டப்பட்டுள. தாம் இயற்றிய திருக்குருகாமான்மியம், நம்பெருமாள் மும்மணிக்கோவை, மாறன்கிளவிமணிமாலை முதலிய வைணவ நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டுகின்றார். நூலின் பாயிரம் 64 சூத்திரங்களைக் கொண்டது; பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் ஆகிய இயல்கள் முறையே 21, 166, 48, 28 சூத்திரங்களைக் கொண்டன.

பொருளிலக்கணத்தின் ஒரு பகுதியாகிய அகப்பொருளிலக்கணத்தைக் கூறுவது இவ்வாசிரியர் இயற்றிய மாறனகப்பொருள் என்னும் நூல். இதுவும் நம்மாழ்வார் பெயரை வைத்து இயற்றப்பட்ட நூல். தொல்காப்பியம் முதலிய நூல்களிற் பல இயல்களிலும் பரந்து கிடந்த அகப்பொருள் இலக்கணங்களை முறைப்படத் தொகுத்து, வகுத்து, புதியதாக வேண்டுவனவற்றைக் கூட்டி, விரித்து, 363 சூத்திரங்கள் கொண்டதாக விரித்து இயற்றப்பட்ட நூல் இது. அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்து இயல்களாக நூலை ஆசிரியர் வகுத்திருக்கின்றார். இவ்வாசிரியரின் காலம் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதி.

சோழர் ஆட்சிக்காலத்திற்குப்பின் தமிழகம் பிறமொழியாளரின் ஆட்சியிற் பட்டுப் பேணுவாரின்றிக் கிடந்த சமயத்தில் அதனைப் பேணிப் பாவேந்தரை ஆதரிக்க முன்வந்தவை சைவமடாலயங்களே. அத்தகைய மடங்களுள் ஒன்றாகிய தருமபுரத்தைச்சேர்ந்தவர் வைத்தியநாத தேசிகர். இலக்கணவிளக்கம் என்னும் நூலை இயற்றிவர் இவரே. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐவகை இலக்கணத்தை மாணவருக்குப் போதுமான அளவு கூறுவது இந்நூலென அறிஞர் கொள்வர். இந்நாலினைக் "குட்டித் தொல்காப்பியம்" என்று பெயரிட்டழைப்பதிலிருந்தே இதன் சிறப்பு விளங்கும். தொல்காப்பியரைப்போல் இவ்வாசிரியரும் யாப்பினையும் அணியினையும் பொருளதிகாரத்திலடக்கி

மூன்றதிகாரமாக்கினர். எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் பெரும்பாலும் நன்னூலைத் தழுவியே எழுதப்பட்டன. பல சூத்திரங்கள் நன்னூற் சூத்திரங்களாகவே காணப்படுகின்றன. பாயிரம் ஒழிந்த 407 நன்னூற் சூத்திரங்களையும் 372 விதிகளில் அடக்கினர். பாயிரத்திலுள்ள 55 விதிகளையும் பொருளதிகாரத்துப் பாட்டியலில் 129 முதல் 142 வரையுள்ள 14 விதிகளில் அடக்கிக் கூறியிருக்கின்றார். மேலும் நன்னூலிற் குற்றமெனக் கண்ட சிலவற்றைத் திருத்தியும் எழுதியிருக்கின்றார்.

பொருளதிகாரத்தில் அகத்திணைச் சூத்திரங்கள் நாற்கவிராச நம்பி செய்த அகப்பொருள் விளக்கத்தையும் தொல்காப்பிய அகத்திணையியலையும் பின்பற்றி எழுதப்பட்டன. அணியியல் தண்டியலங்காரத்தைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது. பல சூத்திரங்கள் தண்டி சூத்திரங்களாகவே அமைந்திருக்கின்றன. உதாரணச் செய்யுட்களும் அந்நூலிலிருந்தே எடுத்து ஓதப்பட்டிருக்கின்றன. செய்யுளியலில் ஆசிரியர் யாப்பருங்கலத்தைப் பின்பற்றியிருக்கின்றார். பாட்டியலில் முதல் 128 சூத்திரத்தில் வச்சணந்திமாலை, சிதம்பரப்பாட்டியல் முதலிய நூல்களின் கருத்துக்கள் பொதிந்திருக்கின்றன. 128 முதல் 142 வரை நன்னூலார் பாயிரமாமொழிய, 142 முதல் 181 வரை தொல்காப்பிய மரபியலின் இறுதியாகின்றது. இது 941 சூத்திரங்களை உடையது.

இவரே நூலுக்கு உரையும் எழுதினர். இம்மாதிரியாக நூலாசிரியரே உரையெழுதும் வழக்கம் தமிழிற் கிடையாது. முதன் முதல் இவ்வாறு உரையெழுதத் தொடங்கியவர் இவரே. இவரைப் பின்பற்றிப் பிற்காலத்தார் சிலரும் தாமியற்றிய நூல்களுக்குத் தாமே உரையும் எழுதினர். தமது உரையிற் பிறர் கொள்கைகளைக் கண்டித்துக் கூறுகின்றார். தொல்காப்பியச் சூத்திரப் பொருள்கள் சிலவற்றை உரையிலே தழுவியிருக்கின்றார். தொல்காப்பிய உரைகளுள் நச்சினார்க்கினியர் உரையே இவரால் பெரும்பாலும் கையாளப்

பட்டுள்ளது. மேலும் அகத்திணையியலில் தொல்காப்பிய உரையில் உள்ள சில பொருள்களைச்சூத்திரங்களாக வகுத்தார். தண்டியலங்காரவுரையிற் கூறிய சில பிரிவுகளை அணியியலில் விதிகளாக அமைத்துள்ளார். பாட்டியல் 181 சூத்திரங்களும் இவர் இயற்றவில்லை. இவ்வியலை இவரின் மகன் தியாகராச தேசிகர் சேர்த்தார். இந்நூற்குப் பாயிரமும் சொல்லணிச் சூத்திரங்களும் இவருடைய மூத்தமகன் சதாசிவதேசிகராற் செய்யப்பட்டன. திருவாவடுதுறைச் சிவஞான சுவாமிகள் இவ்விலக்கண விளக்கத்தை அவிக்கும்பொருட்டுச் சூறாவளி யை ஏவினர். இக்கண்டனத்தை அவர் வேண்டுமென்றே எழுதினர். எனினும் சில இடங்களில் தேசிகர் செய்த பிழைகளையும் எடுத்துக் காட்டியிருக்கின்றார். சூறாவளியின் மூலமாயே இலக்கண விளக்கத்திற்கு அதிக மேன்மை உண்டாயிற்று.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் சுப்பிரமணிய தீட்சிதர். வடமொழியிலுள்ள இலக்கணத்துக்கு ஒத்தவாறு தமிழ்மொழி இலக்கணமின்மையை இவர் உணர்ந்தார். வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றிச் செய்த வீரசோழியம் இவர்காலத்தில் வழக்கொழிந்திருந்தது. மேலும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் சங்கத வழக்குப்பற்றி உரை வகுத்திருந்தபோதும், அதனைப் பின்பற்றி வேறு நூல்கள் தோன்றவில்லை. இக்காரணங்களினால் சுப்பிரமணிய தீட்சிதர் பிரயோக விவேகம் என்னும் நூலை இயற்றினார். நூலின் ஐந்தாவது பாட்டின் உரை இதற்குச் சான்றாகும். இந்நூலை இவர் இராமபத்திர தீட்சிதர் முன்னிலையில் அரங்கேற்றினர். இராமபத்திரதீட்சிதர் தஞ்சையை ஆண்ட மகாராட்டிர குலத்துச் சகஜி மகாராசாவிடம் பரிசு பெற்றவர். வடமொழியில் வல்ல பண்டிதர்.

இந்நூல் காரகப்படலம், சமாசப்படலம், தந்திதப்படலம், திங்ஙுப்படலம் என நான்கு படலங்கள் கொண்டது. இது

சங்கத மொழிக்கும், திராவிட மொழிக்கும் பொதுவாக ஏற்பட்ட சத்த சாத்திரத்தின் தத்துவங்களைக் கூறுகின்றது. இந்நூலை 51 கட்டளைக் கலித்துறைப் பாவாற்பாடியிருக்கின்றார் ஆசிரியர். சங்கதவழக்கைப் பின்பற்றி நூலுக்குத் தாமே உரையும் எழுதினர். "வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வடநூலைச் சிறுபான்மை வேறுபடுத்திச் செய்தலான், யாமும் பதிகமும் உரையும் செய்து, உதாரணமும் காட்டினும்" என்று தீட்சிதரே மூன்றாம் செய்யுளின் உரையிற் கூறுவதால் இது பெறப்படும். இவர் இடையிடையே தமது சொந்தக் கொள்கைகளை ஆழ்ந்த கருத்துடன் வெளியிடுகின்றார். தமிழ் இலக்கணமெல்லாம் பெரும்பாலும் வடமொழி இலக்கணவழியே என்ற தப்பான கொள்கையைப் பரப்பியவரும் இவரே. கட்டளைக்கலித்துறையால் இலக்கணமெழுதுவதில் இவ்வளவு கைவந்தவர் வேறு யாரும் இல்லை என அறிஞர் கூறுவர்.

இவர் உரை தருக்கசாத்திர முறைப்படி அமைந்திருக்கிறது. உரையிற் பல இடங்களில் சிறப்பான குறிப்புக்களைக் காட்டுகின்றார்; பழைய உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் முதலியோரின் கொள்கைகளைக் கண்டித்துஞ் செல்கின்றார். உரையில் ஆங்காங்கு தாமே இயற்றிய பல உரைச்சூத்திரங்களையும் சேர்த்திருக்கின்றார். இந்நூலை அச்சிட்டு வெளியிட்ட பெருமை யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலருக்கு உரியது.

வைத்தியநாதரின் உறவு பெற்றவர் ஈசான தேசிகர் என்பவர். இவர் இயற்றிய நூல்களில் ஒன்று இலக்கணக் கொத்து. இது பாயிரம், வேற்றுமையியல், வினையியல், ஒழிபியலென நான்கு இயல்களையுடையது. எனவே இலக்கணக் கொத்து ஐந்திலக்கணங்களில் ஒன்றாகிய சொல்லிலக்கணத்தைக் கூறுகின்றது. 131 சூத்திரங்களைக் கொண்டது இந்நூல். தாம் கற்ற இலக்கண இலக்கிய நூல்களில் மறைவாகக் கிடந்த அரிய உண்மைகளை நுட்பமாக

ஆராய்ந்து கூறுகின்றார். பல நூல்களினும் பலவுரைகளி னுஞ் சிதறிக்கிடந்த சில விதிகளை ஒவ்வொரு சூத்திரத்தால் ஒருங்கே யாவரும் அறியும்படி செய்திருத்தலின் இலக்கணக் கொத்து எனப் பெயரிட்டதாக நூற்பெயரின் காரணத்தை யும் குறிப்பிடுகின்றார். நூலிலுள்ள 44, 45 முதலிய சூத்திரங்களிலிருந்து இவருடைய கொள்கைகள் பரந்த தன்மையனவென அறியலாம்.

இந்நூலுக்கு உரையும் இவரே எழுதினார். வைத்திய நாததேசிகர் இலக்கணவிளக்கத்திற்கும், சுப்பிரமணிய தீட்சிதர் பிரயோக விவேகத்திற்கும் தாமே உரை எழுதியிருப்பதை ஒட்டித்தான் இவரும் தாம் எழுதிய நூலுக்குத் தாமே உரையும் எழுதினார். வேற்றுமையியலில் காரக இலக்கணம் விரிவாகக் கூறப்படுகின்றது. இடையிடையே வடமொழிக் கருத்துக்களையும் பொருத்திக் காட்டுகின்றார். தொல்காப்பி யர் கூறிய இலக்கணத்தையும், குறள் உரையில் பரிமேலழகர் ஆங்காங்கு கூறிய பொருள்களையும் இவர் தொகுத்து வினை யியலில் விதிகளாக அமைத்துள்ளார். பிரயோக இலக்கணம், அண்மை தகுதி அவாய்நிலை என்பன முதலான சருக்க நூற்றென்மை வழக்குகள், உபசர்க்கம் பிரந்தியபமாகிய வற்றினிலக்கணம், பொருள்கோளின் இலக்கணம் முதலி யனவற்றை ஒழிபியல் விரித்துக் கூறுகின்றது. இவர் சூத்திரங் களுக்கு உலக வழக்கினின்றும் உதாரணம் எடுத்துக் காட்டு கின்றார்.

ஐரோப்பியர் காலத்தில் மேனாட்டுப் பாதிரிமார் பலர் தமிழ், இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழி களிற் பல தமிழ் இலக்கண நூல்கள் இயற்றினர். அவர்களுள் காலத்தால் முந்தியவர் பதினெட்டாம் நூற்றாண்டின் முற் பகுதியில் வாழ்ந்த பெஸ்கி (*Beschi*) என்பவர். இவர் தமிழ்நாடு வந்ததும் வீரமாமுனிவர் என்ற தமிழ்ப்பெயர் பூண்டார். இவருக்கு நல்ல தமிழ் இலக்கண அறிவு இருந் தது. தொல்காப்பியம், நன்னூல் முதலியன இவர் கற்ற

இலக்கண நூல்கள். அதன்மேல் தமிழ் இலக்கண நூல்களைத் தாமும் இயற்றினர். அவற்றுள் ஒன்று, நன்னூலைப் பின் பற்றி எழுதப்பட்ட தொன்னூல் விளக்கம் என்னும் செந் தமிழ் இலக்கணநூல். நன்னூலாசிரியர் எழுத்தையும் சொல்லையும் கூறிச் செல்ல, வீரமாமுனிவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தையும் கூறினர். மேலைநாட்டுச் சிறந்த கருத்துக்களும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. மேலும் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் ஏட்டுத்தமிழ் இலக்கணமும் பேச்சுத் தமிழ் இலக்கணமும் வகுத்து இருநூலாக எழுதினர். அவற்றுள் பேச்சுத்தமிழ் இலக்கணநூல் (*A Grammar of Kodun Tamil*) பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலும், ஏட்டுத்தமிழிலக்கணநூல் (*A Grammar of High Tamil dialect*) இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

மேனாட்டுத் தமிழ்த்தொண்டருள் ஒருவர் புலவர் போப்பையர் (*Rev. G. U. Pope*). 1820ம் ஆண்டிற் பிறந்த இப்பெரியார் ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி செய்திருக்கின்றார். இவர் தஞ்சாவூரில் வாழ்ந்த காலத்தில் சிறந்த தமிழ் நூல்கள் பல எழுதினர். தொல் காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பள்ளிக்கூட மாணவர் கற்பது எளிதன்று என்பதை உணர்ந்து, அவர்கள் பயில்வதற்கேற்ற சிற்றிலக்கணநூல் களைச் செய்யத்தொடங்கினர். இதன் பயனாக மூன்று இலக்கண நூல்கள் வெளிவந்தன. அவற்றுள் முதலிரண்டும் இளமாணவர் எளிதாகத் தமிழிலக்கணம் பயில்வதெற்கென வினாவிடையாக எழுதப்பட்டன. மூன்றாவது விரிவான இலக்கணநூல். அதனைப்பயில்வோர் இலக்கணத்தின் நுட்பங் களை ஒருவாறு அறிந்து கொள்ளலாம் என அறிஞர் கூறுவர். *A Hand Book of Tamil language* எனப்பெயரிய நூலையும் இவர் எழுதினர். தமிழ்பயில விரும்பும் ஐரோப் பியர் இவ்விலக்கணநூலையே பெரிதும் போற்றிப்படிப்பர்.

அயர்லாந்து தேசத்திலே பிறந்து, இந்தியதேசத்தில் நெடுங்காலம் வாழ்ந்து, இந்தியரது வாழ்க்கையில் ஈடுபட்டு, இந்தியருளொருவனுகத் திகழ்ந்த கால்டுவெல்ஐயரும் (*Rev: Robert Caldwell*) போப்பையர் காலத்தவர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், (*A Comparative Grammar of the Dravidian Languages*) என்னும் பெயரால் ஒப்பற்றவோர் இலக்கணநூல் எழுதியவர் இவரே. கால்டுவெல் ஐயர் காலத்துக்குமுன் தென்னுட்டு மொழியாகிய தமிழைச் சங்கதத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கும் வழக்கம் இருந்தது. வடமொழியிலிருந்தே தமிழ்மொழி முதலிய தென்னுட்டு மொழிகள் யாவும் தோன்றின என்னும் கொள்கையும் நிலைபெற்றிருந்தது. இலக்கணக்கொத்தாசிரியர், "வடமொழி தென்மொழி என்னும் இருமொழியினும் இலக்கணம் ஒன்றே யென்றே எண்ணுக" என அழுத்தமாகக் கூறியிருக்கின்றுர். பத்தொன்பதாம் நூற்றுண்டில் கால்டுவெல் ஐயர் செய்த ஆராய்ச்சியின் பயனுக அக்கொள்கை ஆதாரமற்றதென நிலைநாட்டப்பட்டது. சங்கத இலக்கணமும் திராவிட மொழிகளின் இலக்கணமும் வேறுபட்டனவெயென இவர் தமது ஒப்பிலக்கணநூலில் சான்று காட்டி நிறுவியுள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய தென்னுட்டு மொழிகளின் அடிப்படையான இலக்கணம் ஒன்றேயென்பதை இவரே தெளிவாக உணர்த்தினுர். தென்னிந்திய மொழிகளைக் குறிப்பதற்குத் 'திராவிடமொழி' என்னும் பொதுச்சொல்லை மொழிநூல்வழக்கில் அமைத்தார். இவரைத் திராவிடமொழிநூலின் தந்தை எனச் சான்றேர் போற்றுவர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அண்டேசன் என்பவர் (*Robert Anderson*) கொடுந்தமிழிலக்கண விதிகளையும், செந்தமிழ் இலக்கண விதிகளையும் சேர்த்து ஓர் இலக்கணநூல் இயற்றினுர். இது *Rudiments of Tamil Grammar* என வழங்குகின்றது. பத்தொன்

பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஆடன் என்பவர் (A H. Arden) போப்பையரின் இலக்கணத்தைப் பின்பற்றி விரிவான ஓர் இலக்கண நூல் இயற்றினர். *A Progressive Grammar of Common Tamil* என வழங்கும் இந்நூல் அக்காலத் தமிழ் மொழியின் அமைப்பினை நன்றாக எடுத்து விளக்குகின்றது.

ஐரோப்பியர் காலத்தில் வாழ்ந்த சைவப்பெரியாரும் தமிழ் இலக்கண நூல்கள் எழுதினர். முற்காலத்தில் இயற்றப் பட்ட இலக்கண நூல்கள் சூத்திரங்களாலானவை. அவற்றைக் கற்றறிந்தோரே படித்து விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந் தது. எனவே யாவரும் எளிதில் கற்றறிவதற்கு ஏற்ற உரைநடையில் ஆசிரியர் இலக்கண நூல்கள் இயற்றத்தொடங் கினர். இத்தகைய ஆசிரியருள் சிறந்து விளங்கியவர் திருத் தணிகைப்பதியைச் சேர்ந்த விசாகப்பெருமாளையரென்பவர். இவர் இயற்றிய நூல் பாலபோத இலக்கணம் என்ற பெயரு ருடன் வெளிவந்துள்ளது. நூலின் பழைய பதிப்பில், ஆக்கியோரால் பாயிரம் என எழுதப்பட்ட முகவுரையில், மேல்வரும் குறிப்புக்காணப்படுகின்றது: "உலகவழக்கியற் சொற்களால் உரைவசனமாகத் தெளிவுறச்செய்து கல்விச் சாலைகளிலே உபயோகமுறும்படி செய்தல் நன்றென்னும் கருத்துக்கொண்டு, தமிழ்கற்கப் புகுவோரும் அவ்வாறாக அந்நூல்களைச் செய்யப்புகுவோரும் தமிழ் நடை நன்குணர் ந்து எழுதுவதற்கு இன்றியமையாக் கருவியாயுள்ள எழுத் திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் யாவரும் எளிதில் உணரும்படி கடின சந்தியின்றி உரைவசனமாகப் பாலபோத இலக்கணமென்னும் பெயரினால் இந்நூல் செய்யப்பட்டதென அறிக." ஐந்திலக்கணங்களையும் சுருக்கமாக வினாவிடை முறையில் தெளிவுபெற இலக்கணச் சுருக்கவினாவிடை என்னும் நூலையும் இவர் எழுதினர்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் எழுதிய இலக்கணச் சுருக்கம் என்னும் நூலை இக்கால மாணவர்

பெரும்பாலும் படிக்கின்றனர். விசாகப்பெருமாளையரின் மாணுக்கனுகிய மழவைமகாலிங்கம் என்பவரும் ஓர் இலக்கண நூல் இயற்றியுள்ளார். மாணவர்களுக்கென இயற்றப்பட்ட இந்நூல் முக்கியமான இலக்கணவிதிகளைத் தெளிவாக எடுத்து விளக்குகின்றது.

இக்காலத்தில் பல ஆசிரியர்கள் பள்ளிக்கூட மாணவருக்கெனப் பல இலக்கண நூல்கள் எழுதியிருக்கின்றார்கள். ஆனால் ஒரு நூலாயினும் மாணவர் எளிதில் விளங்கக்கூடிய முறையில் எழுதப்படவில்லை. இக்காலத்துத் தமிழ்மொழியின் அமைப்பினை ஆராய்ந்து மேனாட்டு ஆசிரியர்கள் எழுதிய இலக்கண நூல்களைப்போல் தமிழிலும் சிறந்த ஓர் இலக்கணநூல் வெளியாகும் நாளைத் தமிழுலகம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றது.

3

ஐம்பெருங் காப்பியங்கள்

தமிழ்மொழி வரலாற்று நூலாசிரியர் தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் உண்டென்று கூறுவர். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, ஆகிய நூல்களே ஐம்பெருங்காப்பியங்களாகக் கருதப்படுகின்றன. ஐம்பெருங்காப்பியம் என்று அழைக்கும் வழக்கு மயிலைநாதரால் நன்னூலுரையகத்து ஆளப்பட்டது. "இவ்வாறே ஆண்பாற் பொருட்பெயரும் பெண்பாற் பொருட்பெயரும், ஏனையபாற் பொருட்பெயரும், இடப்பெயரும், காலப்பெயரும், சினைப்பெயரும், பண்புப்பெயரும், தொழிற்பெயரும், மரபுப்பெயரும் வழுவாமல் ஐம்பெருங்காவியம் எண்பெருந்தொகை பத்துப்பாட்டு பதினெண்கீழ்க்கணக்கு என்னும் இலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச்சொற் பனுவலுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக" என்று இவ்வுரைகாரர் (நன்: சூ: 387) கூறுகின்றார்.

தொடர்நிலைச் செய்யுள், பொருட்டொடர்நிலைச் செய்யுள் சொற்றொடர்நிலைச்செய்யுள் என இருவகைப்படும். முற்செய்யுளோடு பிற்செய்யுள் பொருளினால் தொடர்ந்து வரப்பெறும் நூல் தொடர்நிலைச் செய்யுளெனப்படும். ஒரு சரித்திரத்தைத் தொடர்ச்சியாகக்கூறும் நூல்கள் இதற்கு உதாரணமாம். பொருட்டொடர் நிலைச்செய்யுள் பெருங்காப்பியம், காப்பியம் என இருபாற்படும். தண்டியலங்கார ஆசிரியர் பெருங்காப்பியத்தின் இலக்கணத்தை விரிவாகக் கூறுவர். வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், உரைக்கும் பொருள் உணர்த்தல் என்னும் மூன்றனுளொன்று முன்வர

நடப்பதாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான் கினையும் பயக்கும் ஒழுக்கலாறு உடைத்தாய்த் தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனை நாயகனுய் உடைத்தாய், மலைவருணனையும் கடல் வருணனையும் நாட்டு வருணனையும் நகர் வருணனையும் என்றின்னோரன்ன வருணனையுடைத்தாய், நன்மணம் புணர்தல் புனல்விளையாடல் சிறுவரைப் பெறுதல் முதலிய வரலாற்றை உடைத்தாய், சருக்கம் என்றுதல், இலம்பகம் என்றுதல், பரிச்சேதம் என்றுதல் பாகுபட்டு விளங்கி, எட்டுவகைச் சுவையும் மெய்ப்பாட்டுக்குறிப்பும் உடையதாய் விளங்குவது பெருங்காப்பியமாகும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினுள்ஒன்றும் பலவும் குறைந்து வருவது சிறுகாப்பியமெனப்படும்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பெருங்காப்பியங்கள் அல்ல வென்பது இக்காலத்து ஆராய்ச்சியாளர் துணிபு. மணிமேகலை என்னும் நூல் மணிமேகலையின் வாழ்க்கை வரலாற்றினை ஒருவாறு கூறினும், அவளது இளம் பருவத்தைப்பற்றிக் கூறுகின்ற பகுதிகள் அதில் இல்லையென்றும், அவளது பெற்றோரைப் பற்றிய குறிப்புகள் நூலிற் காணப்படவில்லை என்றும், எனவே அந்நூலைப் பெருங்காப்பியமென்று கூறுதல் ஒவ்வாதென்றும் பல காரணங்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை எடுத்து ஆராயும் பொழுது மணிமேகலையும் சிலப்பதிகாரமும் தனித் தனி பெருங்காப்பியங்களல்ல என்பது வெளிப்படை. இரண்டும் சேர்ந்து ஒரு பெருங்காப்பியமாகும் என ஒருவாற்றுன் கூறலாம். அதுபற்றியே "மணிமேகலை மேலுரைப் பொருள் முற்றிய சிலப்பதிகாரம்" என்ற தொடரும் எழுந்தது. அங்ஙனம் கூறுவதிலும் இழுக்குண்டு. எந்தக் கதாநாயகன் அறம் பொருள் இன்பங்களை அனுபவித்ததாக நூல் கூறுகின்றதோ அவனே வீட்டுப் பேற்றினையும் அடைதல்

வேண்டும். அறம் பொருள் இன்பங்களை அனுபவித்த சீவகனே வீட்டையும் அடைய முயன்றான், அடைந்தான் என்று கூறியிருக்கும் நூலையன்றோ பெருங்காப்பியமென்று கூறுதல் வேண்டும்.

பெருங்காப்பியத்திற்கு இன்றியமையாத இலக்கணமாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கினையும் ஒருங்கே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தனித்தனி கூறவில்லை. சிலப்பதிகாரத்தே அறம் பொருள் இன்பம் என்ற மூன்றைத் தவிர அந்தமிலின்பந்தரும் வீட்டைக் கோவலனோ கண்ணகியோ அடைந்ததாகக் கூறப்பெறவில்லை. மணிமேகலை வீட்டுப் பேற்றை அடைய முயன்றமை தவிர, அறம் பொருள் இன்பம் அனுபவித்ததாக நூல் கூறவில்லை. இந்நூலின் பதிகத்தில் இந்நூலை 'மணிமேகலை துறவு' என்று பெயரிட்டு அழைப்பதிலிருந்தே, இந்நூல் மணிமேகலை துறவையே தனியாக எடுத்துக் கூறுகின்றதென்பது புலனாகும். நீலகேசி என்னும் சிறு காப்பிய உரையிலும் இந்நூலை 'மணிமேகலை துறவு' எனக் குறித்திருத்தலை நோக்குக. எனவே அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கினையும் அடிப்படையாகக் கொண்டு, மற்றைய வருணனைகளையும் கொண்டு வருதலே பெருங்காப்பியமென அழைக்கப்படும் தன்மையையுடைத்து.

அடியார்க்கு நல்லாரும் சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதுமிடத்து, உலகத்துக்காப்பியஞ் செய்வோன் அறமும் பொருளும் இன்பமும் வீடும் கூறவேண்டும் என்றும், சிலப்பதிகாரமென்னும் நாடகக்காப்பியத்தை இயற்றிய ஆசிரியர் அறமும் பொருளும் இன்பமும் கூறிச் சிறிதாயினும் வீடு கூறிற்றிலர் என்றும், அதனால் சிலப்பதிகாரத்தைப் பெருங்காப்பியமெனக் கூறலாமோவென்றும் ஐயுறுகின்றனர். இளங்கோவடிகள் "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்று சாத்தனார்க்குக் கூற, சாத்தனார் "நீரே அருளுக" என்று

இளங்கோவடிகளை வேண்ட, அடிகளும் அறமும் பொருளும் இன்பமுங் கூறி, மணிமேகலை துறந்தாள் என்பதை உணர்ந்து, அத்துறவினைப் பின்வைத்து அதனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக்கருதி, சாத்தனுருக்கு இவ்வுரையை உரைத்தவிடத்த, அவர் மணிமேகலை பெயரால் அவள் துறவைப்பொருளாகக் கொண்டு ஒரு காப்பியம் செய்தமைத்தனரெனக் கேட்டு, இருநூல்களும் ஒரு காப்பியமாக உலகின்கண் நிலவவேண்டும் என்று விரும்பிய போதும், இருவர் செய்தலின் இருகாப்பியங்களாக நடந்தனவென இதற்குச் சமாதானம் கூறுவர் அடியார்க்கு நல்லார்.

இதுநிற்க, தொல்காப்பியச் செய்யுளியலின் கண்ணே அம்மை முதலிய வனப்பெட்டும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணமென்று கூறுமிடத்து "ஞகாரை முதலாய் னகார வீற்றுப் புள்ளியிறுதி இயைபெனப்படுமே" என்னும் சூத்திர உரையில், "ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொருபுள்ளி ஈற்றினுள் ஒன்றை இறுதியாகச் செய்யும் செய்யுள் பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்வது இயைபெனப்படும். இயைபென்றதனாலே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து. சீத்தலைச் சாத்தனாற் செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன;" என்று உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பதால், தொல்காப்பியர் காலத்துக்கு முன்பும் பின்பும் பல இயைபு நூல்கள் இயற்றப்பட்டன என்றும் அவ்வகை நூல்களுள் இப்போது எமக்குக் கிடைத்துள்ளன மணிமேகலையும் பெருங்கதையுமேயென்றும் கொள்ளுதல் பொருத்தமுடைத்தே. மேலும் தொல்காப்பியச் செய்யுளியலின் கண்ணே, "தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என்று கூறுமிடத்து, "தொன்மை என்பது உரைவிராய பழமையாகிய கதை பொருளாகச் செய்யப்படுவன. அவை

பெருந்தேவனார் செய்த பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன. சிலப்பதிகாரமும் அதன்பாற்படும்." என்று நச்சினார்க்கினியர் இயம்புகின்றார், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துப் பதிகத்தின் உரையின் கண்ணே சிலப்பதிகாரம் 'தோல்' என்பதன் பாற்படும் என்பர். ஆகவே தொல்காப்பியர் காலத்திலும் அதற்குப் பின்பும், இயைபு, தோல், தொன்மை முதலிய நூல்வகையிற் பலநூல்கள் இயற்றப்பட்டனவென்றும், அவற்றுட்சில இப்போது எமக்குக் கிடைத்துள்ள மணிமேகலை, சிலப்பதிகாரம், பெருங்கதை ஆகியனவென்றும் கொள்ளுதல் இழுக்கன்று.

இம்மூன்று நூல்களையும் உண்மையான பெருங்காப்பியங்கள் என்று அழைத்தல் ஒவ்வாது. 'காப்பியம்' என்ற மொழி சங்கதச்சொல்லாகிய 'காவிய' என்பதிலிருந்தே அமைக்கப்பட்டதனால், சங்கதக்காவிய இலக்கணங்கள் அமைய எழுதியவற்றையே காப்பியங்கள் என்று அழைத்தல் பொருத்தமுடைத்து. இவ்வுண்மைபற்றியே மயிலைநாதருக்கு முன் தோன்றிய உரையாசிரியர்களாகிய பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் முதலியோர், மணிமேகலை பெருங்கதை சிலப்பதிகாரம் ஆகிய இம்மூன்று நூல்களையும் இயைபு நூல்களென்றும் தொன்மை நூல்களென்றும் அழைந்தனர் போலும்.

மேலும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் நாட்டு வருணனை, நகர்வருணனை, முதலியவற்றிற்குத் தனித்தனிப் படலங்கள் அமையவில்லை. இயல்கள் சருக்கமென்றோ, இலம்பகமென்றோ, பரிச்சேதம் என்றோ சங்கதக்காவிய முறைப்படி அமையவில்லை. இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் தத்தம் நூல்களை இயற்றும்பொழுது பெருங்காப்பிய இலக்கணங்களைமுன் வைத்து நூல்களை இயற்றவில்லை. அவ்வாசிரியர் காலத்திலே வடமொழியிலுள்ள நூல்வகைகள் தமிழில் இடம்பெறவில்லை. அவ்வாறாயினும் பிற்காலத்து வாழ்ந்த தமி

முறிஞர்கள் அந்நூல்களிற் பெருங்காப்பியங்களுக்குரிய சில இலக்கணங்கள் அமைந்திருத்தலைக்கண்டு தமிழிலேயும் பெருங்காப்பியங்கள் முற்காலத்திலிருந்தனவெனப் பெருமை கொள்ளுதற் பொருட்டு, இவ்விருநூல்களையும் பெருங்காப் பியங்களெனக் கொண்டிருத்தல் வேண்டும்.

சீவகசிந்தாமணியே சங்கதக்காவிய முறையைப் பின் பற்றி முதன்முதல் தமிழ்மொழியில் எழுதப்பட்ட பெருங் காப்பியமாகும். சங்கதக்காவியங்களுக்குரிய இலக்கணங்களை நுண்ணிதாகத் தழுவி இந்நூலியற்றப் பெற்றது. தொடர் நிலைச் செய்யுட்கள் பாடுவதற்கு விருத்தம் இவ்வாசிரியராலே யே முதன்முதல் கையாளப்படுகின்றது. இந்நூலாசிரியராகிய திருத்தக்கதேவரை முன்மாதிரியாக வைத்தே பிற்காலத்தில் காவியங்களும் புராணங்களும் பாடியவர்கள் விருத்தத்தில் பாட்டுக்களை யாத்தனர். பெருங்காப்பியத்திற்கு உரியதாகக் கூறிய இலக்கணங்களுக்கிணங்க, இவரே முதன் முதல் ஒவ்வொரு இயலையும் இலம்பகம் எனப்பெயரிட்டு நூலைப் பதின்மூன்று இலம்பகங்களாகப் பிரித்தனர். மேலும் நாட்டு வளம் நகர்வளமெனத் தனியாகப் பிரிவுகளும் அமைத்தனர். சிந்தாமணிக்கு முன் இயற்றப்பட்ட நூல்களில் இப்படி நாட்டு வளம் முதலியவற்றைப் புறம்பாக எடுத்து அவைக்கென இயல்கள் வகுத்து ஓதிற்றிலர். ஆங்காங்கு ஏற்ற இடங் களிலே இவ்வளங்களைக் கூறிச் சென்றனர். மேலும் பெருங் காப்பியத்திற்குரிய இன்றியமையாத இலக்கணமாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கினையும் கதைத்தலைவனாகிய சீவகன் அடைந்தான் என இந்நூல் கூறும். வீட்டுநெறி யைக் கூறுமிடத்து முத்தி இலம்பகம் என்று ஓர் இயலும் அமைத்தனர். ஆகவே பெருங்காப்பியத்திற்குரிய இலக் கணங்களெல்லாம் இதில் அமைந்திருக்கின்றனவெனத் துணி வாகக் கூறலாம். சமணசமயத்தவரொருவரால் இயற்றப்பட்ட போதும் இப்பெருங்காப்பியம் தமிழ்நாட்டிலுள்ளவர் அனை வராலும் பாராட்டப்பட்டு வருகின்றது. இந்நூல் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியது.

பெருங்காப்பியங்களாகக் கருதப்படும் குண்டலகேசி வளையாபதி ஆகியவற்றின் அமைப்பைக் குறித்து ஒன்றுங் கூறமுடியாது. அவை இப்போது எமக்குக் கிடைத்திலாமையால் அவை உண்மையாகப் பெருங்காப்பியங்களோ என்று துணிய முடியாது. குண்டலகேசி ஒரு பௌத்த காவியம். இது குண்டலகேசி என்னும் ஒரு வணிகக் கன்னிகையின் கதையைக் கூறுவது. அவள் பௌத்த மதத்தை அருக்க சந்திரன் என்பவனிடம் கற்று, தன்னுடன் வாதுசெய்ய வந்தோரை வாதில் வென்று, பௌத்தராக்கி வந்தனள். ஆவணம் என்னும் நகரில் நாதகுத்தனார் என்னும் சமணர் ஒருவரையும் வாதில் வென்றனள். அவர் சமணசமயக் கொள்கைகளில் மேம்பட்டவராக இருந்தமையால் அவர் தோல்வி சமணசமயத்திற்கு மிக்க இகழ்ச்சியை உண்டாக்கியது. சமணர்கள் நீலகேசி என ஒரு காப்பியத்தை இயற்றி, அதில் குண்டலகேசியையும் அவளுக்குப் புத்தமதத்தைக் கற்றுக் கொடுத்த அருக்க சந்திரனையும் அருகர் வாதித்து வென்றதாகக் கூறினர்.

வளையாபதி ஒரு சமணகாவியம். இந்நூலும் இன்ன காலத்திற்குரியதெனக் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. இந்நூலிற் சில செய்யுட்களே இப்போது கிடைத்துள்ளன. இந்நூலும் குண்டலகேசி இயற்றப்பட்ட காலத்தில் தோன்றியதெனச் சிலர் கருதுகின்றனர். இவ்விரு நூல்களும் சீவக சிந்தாமணி காலத்தையொட்டித் தோன்றியிருக்கலாம். சிறப்பு வாய்ந்த இந்நூல்களையெல்லாம் இயற்றித் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்த சமண பௌத்த ஆசிரியருக்குத் தமிழ் உலகு என்றுங் கடமைப்பட்டுள்ளது.

4

இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு

தமிழ் மொழியை வைதிக சமயத்தவரல்லாத வேறு பல சமயத்தவரும் பற்பல காலங்களிற் பேணி வளர்த்து வந்தனர். சமண பௌத்த ஆசிரியர் ஆற்றிய தொண்டினலே தமிழ் மொழியில் திருக்குறள் சிலப்பதிகாரம் மணிமேகலை பெருங்கதை சீவகசிந்தாமணி போன்ற சிறந்த இலக்கிய நூல்களும், தொல்காப்பியம் யாப்பருங்கலம் வீரசோழியம் நேமிநாதம் நன்னூல் போன்ற இலக்கண நூல்களும் இயற்றப்பட்டன. கிறித்தவருக்கும் தமிழருக்கும் ஏற்பட்ட தொடர்பினல் தமிழில் தனிவசன நூல்கள், விஞ்ஞான சாத்திர நூல்கள், அகராதிகள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் முதலியன தோன்றின. இவ்வாறே இஸ்லாமிய ஆசிரியர்களும் தமிழிற் பல செய்யுள் நூல்களையும் வசன நூல்களையும் இயற்றிச் சென்றனர்.

இன்று தமிழ் நாட்டில் இஸ்லாமியர் தூய்மையாகவும் தெளிவாகவும் தமிழிற் பேசினல் அல்லது எழுதினல் அது மதிப்புக்குரியதெனத் தமிழர் கொள்கின்றனர். மேனட்டவர் தமிழ் நாட்டில் வந்து தங்கித் தமிழை நன்ருகக் கற்றுக் கொண்டால் எவ்வளவுக்கு அவர்களைப் பாராட்டலாமோ அவ்வாறே மேற்குறித்த இஸ்லாமியரையும் பாராட்டுகின்றனர். இதற்குக் காரணம் அறியாமையே. தமிழ் நாட்டு இஸ்லாமியரின் தாய்மொழி உருது என்பது அவர்களின் கொள்கை. ஆனல் தமிழ் நாட்டு இஸ்லாமியரின் தாய்மொழி தமிழே. தமிழ் நாட்டு சைவ வைணவ ஆசிரியரால் தமிழை எவ்வளவு நன்ருகக் கற்று அதிலே பேசி எழுத முடியுமோ அவ்வளவு நன்ருகப் பேசவும் எழுதவும் இஸ்லாமியராலும் இயலும்.

ஆகையால் மதத்தை அடிப்படையாகக்கொண்டு மொழிப் புலமைக்கு மதிப்புக் கொடுப்பது ஏற்றதன்று.

கடந்த சில நூற்றாண்டுகளாக எண்ணிறந்த இஸ்லாமியர் தலைசிறந்த புலவராக விளங்கினர். மிகச் சிறந்த தமிழ் நூல்கள் பலவற்றை அவர்கள் இயற்றி இருக்கிறார்கள். நூல் அமைப்பு முறையிலும், நடையிலும், போக்கிலும் இந்த இஸ்லாமியரின் நூல்களுக்கும், பேர் பெற்ற தமிழ் இலக்கியங்களுக்கும் அடிப்படையான வேறுபாடு அதிகம் இல்லை. அவர்களின் நூல்களுக்குத் தலைவராக அமைவோர் வேறு வேறாக இருப்பினும், தமிழ் மரபுக்கு ஒத்தனவாகவும், தமிழ்ப் பண்புக்கு இயைந்தனவாகவும் அவர்களுடைய இலக்கியங்கள் அமைந்திருக்கின்றன. கற்பனைத் திறத்திலும் பொருட் சிறப்பிலும், சொல்லழகிலும், கவியமைப்பிலும் இஸ்லாமியப் புலவரின் நூல்களும் சிறப்புடன் விளங்குகின்றன.

இத்தகைய புலவர் இயற்றிய தமிழ் நூல்கள் இஸ்லாமியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் நாட்டு இஸ்லாமியருக்குப் பயன்படக்கூடிய முறையில் இயற்றப்பட்டன. இந்நூல்கள் பெரும்பாலும் அறபு மொழியிலுள்ள இஸ்லாமியரின் முதனூல்களைப் பின்பற்றியே எழுந்தன. தமிழ் நாட்டு இஸ்லாமியரின் (ஈழநாட்டு இஸ்லாமியரும் இவருள் அடங்குவர்) தமிழ் நூல்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இஸ்லாமிய கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல்கள் முதற் பிரிவில் அடங்கும். இரண்டாம் பிரிவுக்குரிய நூல்கள் இஸ்லாமியப் புலவர் எழுதிய சமயத்தொடர்பற்ற நூல்கள்.

இஸ்லாமியக் கோட்பாடுகளைக் கொண்டு எழுந்த நூல்கள் பல. இந்நூல்களையும் பலவாறாகப் பிரிக்கலாம். இஸ்லாமியத் தமிழ் நூல்களுள் தலைசிறந்தது சீறாப் புராணம் என்னும் காப்பியமே. முகம்மது நபி அவர்களின் வாழ்க்கை வரலாற்

றைக் கூறுவது இந்நூல். இது தமிழ் இலக்கிய மரபுகளைத் தன்னிடத்தே கொண்டு திகழ்கின்றது. நாட்டு நகர வருணனை யாவும் தமிழ் நாட்டைப் பற்றியவையே. 5, 027 பாடல்கள் கொண்ட இந்நூல் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. நூலில் 92 படலங்கள் அடங்கியிருக்கின்றன. நூலை இயற்றியவர் உமறுப் புலவர். இவர் பதினேழாம் நூற்றாண்டுக்குரியவர்.

இவ்வாசிரியர் எட்டயபுரத்துச் சமத்தான வித்துவான் களுள் ஒருவர். அச்சமத்தானத்தில் பெயர் பெற்ற கடிகை முத்துப் புலவரின் மாணாக்கனாகக் கொள்ளப்படுவர். அக்காலத் தில் வடதேசத்திலிருந்து எட்டயபுரத்துக்கு வந்த வாலை வாரிதி என்ற பண்டித சிகாமணியோடு வாக்கு வாதம் செய்து, வெற்றி அடைந்தவர். வள்ளலாகிய சீதக்காதி மரைக்காய ருடன் அடுத்துப் பழகி நட்புற்று அவரைப் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்றுவந்த கந்த சுவாமிப் புலவர் படிக் காசுப் புலவர் முதலிய புலவர் கூட்டத்தில் இவர் புலமை மிக்கவர்.

சீறா என்ற அறபுச் சொல்லிற்கு வாழ்க்கை வரலாறு என்பது பொருள். ஆகவே, இது திரு நபி வாழ்க்கை வரலாற்றைக் கூறும் புராணமாகும். நூலின் மூன்று காண்டங் கள் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜறத்துக் காண்டம் என்பன. முதற்காண்டம் கடவுள் வாழ்த்து உட்பட 24 படலங்களையும் 1, 240 விருத்தங்களை யும் கொண்டது. இரண்டாவது காண்டத்தில் 21 படலங் களும் 1, 104 விருத்தங்களும் உண்டு. மூன்றாவது காண்டம் 47 படலங்களையும் 2, 683 விருத்தங்களையும் கொண்டது. இப்புராணத்தின் கவிநயம் நடை முதலியன கம்பராமாயணம் போன்றவற்றோடு பெரும்பாலும் ஒத்திருக்கின்றன.

தமிழில் இஸ்லாமியரால் இயற்றப்பட்ட வேறு பல பிரபந்த நூல்களும் உள். இவர்கள் செய்த ஆற்றுப்படை

நூல்களிற் சிறந்தது மதுரைச் சங்கத்துப் புலவர் ஆற்றுப்படை பரிசில் பெற்ற புலவன் ஒருவனால் இன்னொரு புலவன் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளான். நூலை இயற்றியவர் குலாம் காதிறு நாவலர். இந்நூலில் தமிழ் நாட்டின் பழமையும், மதுரையின் பெருமையும், மதுரைக்குச் செல்லும் வழியும், இடையே கிடைக்கும் ஊர்திகளும், தமிழ்ச் சங்கத்தின் சிறப்பும், ஆங்கு அமரும் புலவரின் பெருமையும், பாண்டித்துரைத் தேவரின் புகழும் கற்பனை நயத்துடன் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பிள்ளைத் தமிழ் நூல்களையும் இஸ்லாமியர் இயற்றினர். அவை பெரும்பாலும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களாகவே இருக்கின்றன. அவற்றுள் தலைசிறந்தது நபிநாயகம் பிள்ளைத் தமிழ். இது நபிகள் நாயகம் அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளது. நபிகள் நாயகத்தைக் குழந்தையாகக் கொண்டு பத்துப் பருவங்களில் பாடப்பட்டது. செய்பிது அனபியா சாகிபு என்பவர் இதன் ஆசிரியர். இவர் தென்காசியைச் சேர்ந்த வடகரையூர் சையிது மீரு லெப்பையின் மகன். இப்பிள்ளைத் தமிழ், அல்லாஹ் ஒருவனையே புகழ்ந்து அவனது அருளையே நாடுகின்றது. மக்கமா நகரின் இயற்கைக் காட்சிகளை ஆசிரியர் அழகுற வருணித்துள்ளார்.

இன்னொரு பிள்ளைத்தமிழ் நூல் முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ். முகியித்தின் ஆண்டவரைக் குழந்தையாக வைத்துப் பாடப்பட்டது இந்நூல். நூலை இயற்றியவர் செய்யிது முகியித்தின் கவிராயர். இப்பிள்ளைத்தமிழில் அல்லாஹ், நபிநாயகம், கலீபாக்கள், வலிமார் முதலிய பலர் சிறப்பிக்கப்படுகின்றனர், அவர்களின் அருள் இந்நூலிற் பாடப்பட்டுள்ள குழந்தைக்குக் கிடைக்கும்படியாக வேண்டப் பட்டுள்ளது. குலாம் காதிறு நாவலரின் மகன் ஆரிபு நாவலர் இயற்றியது நாகூர் பிள்ளைத் தமிழ். இது, நாகூர் ஆண்டவர் எனப் புகழ் பெற்ற சாகுல் கமீது ஆண்டவரைக்

குழந்தையாகக் கொண்டு பாடப்பட்டது. பெண்பாற்பிள்ளைத் தமிழ் இலக்கணங்கள் ஒருங்கே அமைந்த நூல் பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ். நபிகள் நாயகத்தின் மகள் பாத்திமா நாயகியைக் குழந்தையாகக் கொண்டு இந்நூல் பாடப்பட்டது.

தமிழ்ப் பிரபந்த வகைகளுள் ஒன்று அம்மானை. அம்மானையிலுள்ள ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் அம்மானை என்ற சொற்றொடரைப் பெரும்பாலும் காணலாம். அம்மானை என்னும் விளையாட்டிலிருந்தே இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்த விளையாட்டு பெண்களுக்கே உரியது. அம்மானை என்பது சிலம்புகள் என்னும் இரண்டு காய்களை வைத்து ஒன்றை மேலே செலுத்திக் கீழே விழாமல் கையிற் பிடித்துக் கொள்ளும் விளையாட்டு.

இஸ்லாமியரின் தமிழ்நூல்களில் அம்மானைப் பாக்களும் பல இருக்கின்றன. அவற்றுள் ஒன்று நபி அவதார அம்மானை. இந்நூலில் ஆசிரியர், நபிகள் நாயகம் முகம்மது அவர்களின் பிறப்பைக் குறிப்பிடுகின்றார்.

சீறாப் புராணத்திலுள்ள நபி அவதாரப் படலத்தை அடிப்படையாகக் கொண்டே இவ்வம்மானை எழுந்தது. சீறாப்புராணம் இயற்றிய உமறுப் புலவரின் மகன் கவிக் களஞ்சியப் புலவர் இந்நூலை யாத்து 1713ம் ஆண்டில் வெளியிட்டனர். அம்மானை இலக்கணங்கள் அமையப் பாடப் பட்ட இன்னொரு நூல் பப்பரத்தியார் அம்மானை. இந்நூல் முகம்மது நபியின் மருமகனாகிய கலீபா அலியின் வலிமை யைப் புகழ்ந்து பாடுகின்றது. மதுரையைச் சேர்ந்த உசை நயினாரின் மகன் செய்யிது மீறாப் புலவர் இவ்வம்மானையை 1704ல் எழுதினர். தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்கள் இதில் கூறப்பட்டுள.

இஸ்லாமியரின் தமிழ் நூல்களிலே அந்தாதி இனத்தைச் சேர்ந்த நூல்கள் பல இருக்கின்றன. அவற்றுள் திருமதீனத் தந்தாதி தலைசிறந்தது. இவ்வந்தாதி மதீன மாநகரைப்

பொருளாகக் கொண்டது. இஸ்லாமிய அரசரின் முதலாவது தலைநகராய்த் திகழ்ந்தது, இந்நகர். இந்நகரிலிருந்தே இஸ்லாம் உலகெங்கும் பரவியது. ஆ. கா. பிச்சை இபுறுகீம் புலவர் இந்நூலை இயற்றினர். இவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்தவர். இவரின் ஆற்றலுக்கும் அறிவுக்கும் 'இலக்கணக்கடல்' எனச் சான்றோர் இவரைப் போற்றுதல் சான்றாகும். நூலில் நாட்டு நகரக் காட்சிகளை விரிவாக வருணிக்கின்றார். ஏனைய இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்களைப் போலல்லாது இதிலுள்ள அரபுச் சொற்கள் மிகக்குறைவு.

அந்தாதி இனங்களில் ஒன்று திரிபந்தாதி. முதலெழுத்து மட்டும் திரிய இரண்டு முதலிய பலவெழுத்துக்கள் ஒன்றிப் பொருள் வேறுபட வரும் செய்யுளாலாகிய அந்தாதிப் பிரபந்தம் திரிபந்தாதியாகும். திருமக்காத் திரிபந்தாதி நாகூர் வித்துவான் வா. குலாம் காதிறு நாவலரால் இயற்றப்பட்டது. புலவராற்றுப்படை ஆசிரியரும் இவரே; இவ்வாசிரியர் பாண்டித்துரைத் தேவரால் மதுரையில் நிறுவப்பட்ட தமிழ்ச்சங்கத் தலைவராக கடமை ஆற்றினார். திருமக்கா நகரைப் போற்றிப் பாடும் இந்நூல் யாழ்ப்பாணத்தில் வச்சிர அச்சகத்தில் 1895 ம் ஆண்டில் வெளிவந்தது. பெரும் பான்மையான செய்யுட்களில் நபிகள் நாயகத்தின் திருப் போதனைகள் பொதிந்திருக்கின்றன. ஏனைய அந்தாதி நூல் களுக்கு உரை உண்டு. ஆனால் இதற்கு உரை இல்லை.

இஸ்லாமியர் திருத்தலங்களுள் நாகூரும் ஒன்று. இது நாகை எனவும் வழங்கும். ஒவ்வோராண்டும் பல நாடுகளி லிருந்தும் இஸ்லாமியர், இந்துக்கள் ஆகியோர் இங்கு வந்து, இவ்விடம் நடைபெறும் 'கந்தூரி'த் திருவிழாவில் கலந்து கொள்வர். நாகூர்ப்பள்ளியில் கல்லறை ஒன்று உண்டு. அக்கல்லறையில் சாகுல் கமீது ஆண்டவர் என்ற இஸ்லாமியப் பெரியார் அடங்கியிருக்கிறார். அவரை நாகூர் ஆண்டவர் என்றும், சாகுல் கமீது ஒலியுல்லா என்றும் பலவாறு பலரும்

வழங்குவர். இந்நாகூர் ஆண்டவரைப் பற்றியும் நாகூரைப் பற்றியும் செய்கு அப்துல் காதிறு நயினார் ஆலீம் என்பவர் நாகையந்தாதியைப் பாடினர். இவரே மஸ்தான் சாகிபு பாடலுக்கு ஒருபாவொருபஃதும், வாயுறை வாழ்த்தும் தோத்திரப் பாவும் இயற்றினர்.

இசைத்தமிழின் தொடர்புடைய பிரபந்தங்களையும் இஸ்லாமியத் தமிழர் பாடினர். இலகுவான நடையில் அமைந்துள்ள இப்பிரபந்தங்களை மக்கள் எளிதில் படித்து இன்புறுவர். அவற்றுட் சில, திருப்புகழ், மாலை, கும்மி, தாலாட்டு, சிந்து ஏசல், கீர்த்தனை, ஆனந்தக் களிப்பு முதலியன. கடவுளைப் புகழ்ந்து பாடப்படும் பாடல்கள் திருப்புகழ் என வழங்கும். திருப்புகழ்ப் பாக்கள் பண்ணமைந்தவை. ஒவ்வொரு பாடலும் குறிப்பிட்ட ஒருசந்தத்திற் பாடப் பெறும். முருகக் கடவுளைப் புகழ்ந்து அருணகிரிநாதர் பாடிய நூலே திருப்புகழ் எனத் தமிழ் இலக்கிய வரலாற்றில் வழங்கும். ஆனால் இஸ்லாமியரிடையேயும் பல திருப்புகழ் நூல்கள் வழங்குகின்றன. நபிகள் நாயகத்தின் மேற் பாடப்பட்ட திருப்புகழை முஸ்லிம் மக்கள்திருப்புகழ் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். இதன் ஆசிரியர் காயற் பட்டணத்தைச் சேர்ந்த காசீம் புலவர். இந்நூலில் இப்புலவரின் கவித்திறன், சொல்லாட்சி, பொருட்செறிவு, சந்தப்பாவன்மை முதலியவற்றைக் காணலாம். பெரும்பான்மையான பாடல்களில் திருமக்க மாநகரையும் திருமதீன மாநகரையும் திருத்தலங்களாகக் கொண்டு பாடுகின்றார். ஏனைய பாக்களில் புனித கஃபா, பாவா ஆதமலை, (*Adam's Peak*), குபைசுமலை, உகுதுமலை, தவுறுமலை முதலிய இஸ்லாமிய திருத்தலங்களைப் பாராட்டுகின்றார். இந்நூலுக்கும் அருணகிரிநாதரின் திருப்புகழுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

நபிகள் நாயகம் மீது பாடப்பட்ட இன்னொரு நூல் நவரத்தினத் திருப்புகழ். இதை இயற்றியவர் யாழ்ப்பாணத்து

சு. அசனுலெப்பை என்பவர். இவர் தமிழ் ஆங்கிலம் அறபு ஆகிய மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றவர். இயற்கையே மாறுபட்டாலும் மாறுபடாத, உவமைகளால் வருணிக்க முடியாத, நபி பெருமானின் பண்புகளை ஓசை நயம் பொருந்திய சந்தப் பாக்களினுலே திறம்படப் பாடியிருக்கின்ருர். முகியித்தீன் ஆண்டவர் பெயரிலும் முகியித்தீன் கவிராயர் என்பவர் ஒரு திருப்புகழ் பாடியிருக்கின்ருர்,

பெண்கள் வட்டமாக நின்று விளையாடும் பொழுது கைகுவித்துக் கொட்டிப் பாடியாடுவர். இது கும்மியாடல் எனப்படும். இக்கும்மியாடலுக்கு ஏற்ற முறையிற் பாடப்படும் பாட்டே கும்மிப்பாடல். இப்பாடல்கள் தாளம் சந்தம் முதலியவற்றுடன் பாடுதற்குரியன. முஸ்லிம் ஞானிகள் ஞானத்தைப் பொருளாகக் கொண்டு பல கும்மிப் பாடல்கள் பாடியிருக்கின்றனர். இவையேயன்றிப் பெண்கள் பாடும் கும்மிப் பாடல்களும் உள. பெண்கள் தாம் செய்யும் வேலையைக் களைப்புத் தோன்ருமற் செய்வதற்காகக் கும்மிப்பாடல்கள் பாடுவர். நெல் குத்தும்பொழுது இருவர் மாறி மாறிப் படிக்குப் பாடல்களும் அவ்வகையில் அடங்கும். இவற்றுடன் நில்லாது இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் முஸ்லிம் பெரியாரின் வாழ்க்கையைப் பொருளாக வைத்துப் பாடிய கும்மிப் பாடல்கள் பல. இவை சீவிய சரித்திரக் கும்மி எனப் பெயர் பெறும்.

இவற்றுள் முகியித்தீன் நாவலர் இயற்றிய மாப்பிள்ளை லெப்பை ஆலீம் சீவிய சரித்திரக் கும்மியும் ஒன்று. கீழ்க்கரையைச் சேர்ந்த செய்யிது லெப்பை ஆலிம் என்பவரே மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்பவர். இவர் அறபு மொழியிலுள்ள பல நூல்களைத் தழுவித் தமிழிற் பல நூல்களை அளித்தவர். இத்தமிழ் நூல்கள் அனைத்தும் அறபு எழுத்துக்களாலேயே எழுதப்பட்டன. இத்தகைய பெரியாரின் தொண்டினை எடுத்துக் கூறுவதே மேலே குறித்தகும்மிப் பாடல். இலங்கை வேருவிலையைச் சேர்ந்த செய்கு முஸ்தபா

ஒலியுல்லாவின் வாழ்க்கையையும் அரும் பெருஞ் செயல் களையும் பொருளாகக் கொண்டு காலி நகர் முகம்மது காசீம் புலவர் செய்கு முஸ்தபா ஒலியுல்லாக் காரண அலங்காரக் கும்மி என்னும் நூலைப் பாடினர்.

குழந்தைகளைத் தொட்டிலிலிட்டு உறங்கச் செய்யத் 'தாலேலோ' என்று முடியும் பாக்களை மக்கள் பாடுவர். இவை தாலாட்டுப் பாடல்கள் என வழங்கும். இத்தகைய பாக்கள் பிள்ளைத் தமிழ் நூல்களில் அடங்கும். இவற்றை ஒருவகைப் பிரபந்தமாகவும் கொள்வர். தாலாட்டுதற்கு ஏற்றதாய் அமைந்த பல கண்ணிகளைக் கொண்டது இப்பிர பந்தம். பிரபந்தத் தலைவனுடைய அல்லது தலைவியினுடைய சிறந்த செயல்களையும் புகழையும் இப்பிரபந்தம் கூறும். இஸ்லாமியத் தாய்மார் தமது குழந்தைகளை உறங்கச் செய்வதற்குத் தமிழ்த் தாலாட்டுப்பாட்டுப் பாடுவர்.

இத்தகைய இஸ்லாமியத் தாலாட்டுப் பாடல்களுள் ஐந்து தாலாட்டுப் பாடல்களைக் கொண்ட பஞ்சரத்தினத் தாலாட்டும் ஒன்று. இதை இயற்றியவர் பேலைப் பாளையத்துக் காளை அசனலிப் புலவர். இந்நூலில் அடங்கியுள்ள தாலாட் பாடல்கள் உடற்கூறறியும் ஞானத் தாலாட்டு, சுகானந்தத் தாலாட்டு, மணிமந்திரத் தாலாட்டு, மீரான் தாலாட்டு, பாலகர் தாலாட்டு என்பன. உடலின் கூறுகளை அறியும் ஞானத்தினைக் கூறுவது உடற் கூறறியும் ஞானத் தாலாட்டு. இத்தாலாட்டு இஸ்லாமியரல்லாத சித்தரால் பாடப்பட்ட பாடல்களை ஒத்திருக்கின்றது. பட்டினத்தடிகள் பாடிய உடற் கூற்று வண்ணம் என்ற பாடலுடன் இது ஒற்றுமை உடையது. பாத்திமா நாயகியைப் போற்றிப் புகழ்கின்றது சுகானந்தத் தாலாட்டு. அம்மானைக் கண்ணிகளாலான இத் தாலாட்டு ஒவ்வொரு கண்ணியின் இறுதியிலும் 'அம்மானை' என்பதற்குப் பதிலாகப் 'பாத்திமத்தே' என்ற சொல்லைக் கொண்டுள்ளது. முகியித்தீன் அப்துல் காதிறு பேரில்

மணி மந்திரத் தாலாட்டும், சாகுல் ஹமீது ஆண்டகையைப் புகழ்ந்து மீறன் தாலாட்டும் பாடப்பட்டன. குழந்தைகளைப் போற்றி இயற்றப் பெற்ற பாலகர் தாலாட்டுக் கண்ணிகள் 'உறங்கி முழி' என்ற சொற்றொடரைக்கொண்டு முடிகின்றன. அறபு எழுத்தில் எழுதிய தாலாட்டுப் பாடல்களும் உண்டு. அவற்றுள் ஒன்று செய்கு அப்துல் காதிறு லெப்பை ஆலிம் சாகிபு இயற்றிய மஅரிபத்தின் தாலாட்டு. தென் காசியைச் சேர்ந்த இப்புலவர் செய்த இத்தாலாட்டும் ஞானத்தையே பொருளாகக் கொண்டது. பிள்ளைத் தாலாட்டு என ஒரு தாலாட்டுப் பாடலும் உண்டு. அதனை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

பாக்கள் மாலை போற் கோக்கப்பட்டுள்ள நூல், மாலைப் பிரபந்தம் எனப்படும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் மாலை இனத்தைச் சேர்ந்த நூல்கள் பல உள. இவற்றைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். நபிகள் நாயகத்தின் புகழைக் கூறும் மாலை நூல்கள் முது மொழி மாலை எனப் பெயர் பெறும். இஸ்லாமிய விழாக்களில் ஓதப்படுவன இறசூல் மாலை போன்றவை. சில, முஸ்லிம் மக்களின் சமய அறிவை வளர்க்கும் பொருட்டு எழுதப்பட்டவை. மக்கள் கடைப் பிடிக்கவேண்டிய நன்னெறிகளைப் போதிக்கும் மாலைநூல் களும் உண்டு. முஸ்லிம் பெரியாரின் வாழ்க்கை வரலாறு களைக் கூறுகின்ற இத்தகைய நூல்களும் சில உள. வேறு சில, இழவு வீடு போன்ற இடங்களிற் குழுமி இருப்போர் முன்னிலையில் படிக்கப்படுகின்றன.

முது மொழி மாலை என்னும் நூலை இயற்றியவர் சீறாப் புராணம் பாடிய உமறுப் புலவர். இம்மாலையிலுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் நபிகள் நாயகம் அவர்கள் பலவாறு கப் புகழப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு செய்யுளிலும் சொற் சுவை பொருட்சுவை அமைந்திருப்பதாக அறிஞர் கூறுவர். இஸ்லாமிய நீதி நெறிகளை நிலைநாட்டிய இணையற்ற அரசர்

இருவரின் சிறப்பினைக் கூறும் நூல்கள் அபூஷகுமா மாலையும் பலுலூன் அசுகாபிமாலையும். இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாவாகிய உமறு இபுனுகத்தாபு என்பவர் உயரிய நீதி முறைகளை உலகிலே நிலைநாட்டுவதற்குத் தனது அருமை மகன் அபூஷகுமாவைத் தண்டித்த வரலாற்றினைக் கூறு கின்றது அபூஷகுமாமாலை. இதனைத் திருப்பாலைக்குடி செய்தக்காதிப்புலவர் இயற்றினர். அறபு மொழியிலிருந்த இவ்வரலாற்றினைச் செய்தக்காதிப்புலவருக்குத் தமிழில் மொழிபெயர்த்து உதவியவர் பீரு முகம்மது என்பவர். நபிகள் நாயகத்தின் தோழருள் ஒருவராகிய பலுலூன் அசுகாபியின் தூய தன்மையை நிலைநாட்ட எழுந்த நூலே பலுலூன் அசுகாபி மாலை. இதனை வேதாளையூர்க் கப்பல் நயினரின் மகன் கொத்தலகான் புலவர் இயற்றினர்.

இழவு வீட்டினை முஸ்லிம்கள் 'மையத்து வீடு' என்பர். இறந்த (மௌத்தான) ஒருவரை நல்லடக்கம் செய்தபின், அன்றிரவு தொடங்கி மூன்று நாள்வரை அவரின் உற்றார் அயலார் முதலியோர் ஒன்று கூடுவர். இவ்வாறு கூடி யிருத்தல் 'துக்கங் கொண்டாடுதல்' அல்லது 'துக்கங் காத்தல்' என அவர்களிடையே வழங்கும். இவர்கள் இவ்வாறு மையத்து வீட்டில் விடியற்காலைவரையும் துக்கங் கொண்டாடி விழித்திருக்கும் போது நேரம் வீணுய்க் கழியாமல் இருத்தற் பொருட்டுச் சமய போதனை நடை பெறும்; நன்னெறிகள் புகட்டப்படும்; அல்லது முஸ்லிம் பெரியார்களின் சீரிய வாழ்க்கை வரலாறுகள் சுட்டிக் காட்டப்படும்; சீருப்புராணம் முதலிய நூல்கள் படிக்கப் படும்.

இவ்விழவு வீடுகளிற் படிக்கும் மாலைகளும் உண்டு. அவற்றுள் பெரும்பாலும் படிக்கப்படுவது ஒசியத்து மாலை என்பதே. இறக்கும் தறுவாயிலிருக்கும் ஒருவரின் கடைசி மொழிகள் 'ஒசியத்து' எனப்படும். தான் இறந்தபின்

தன்னுடைய பொருட்களை எவ்வாறு பிரித்துக் கொடுத்தல் வேண்டும், பிள்ளைகள் எவ்வாறு நடத்தல் வேண்டும் என்பனவற்றைக் கூறுதல் 'ஒசியத்துச் சொல்லல்' எனப் பெயர் பெறும். அறபு எழுத்திலிருக்கும் இவ்வொசியத்து மாலையின் ஆசிரியர் பெயர் காலம் முதலியன தெரியவில்லை. நபிகள் நாயகம் தமது மகள் பாத்திமா நாயகியிடம் கூறிய ஒசியத்துக்களை இதில் அடங்கியிருக்கின்றன. அவர் இறக்குமுன் அவரின் மகள் கட்டிலின் தலைமாட்டிலிருந்து கேள்வி கேட்க, அவற்றிற்கு அவர் அளிக்கும் பதில்களை இம்மாலை கூறுகின்றது.

இராஜமணி மாலையைப் பக்கீர் மதாறுப் புலவர் இயற்றினார். இவர் இயற்றிய இன்னொரு நூலாகிய முக்யத்தீன் மாலை முகியத்தீன் ஆண்டவரின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுகின்றது. இஸ்லாமிய சமயத்தைப் பரப்பி இதனை நல்ல நிலைக்குக் கொண்டுவர இவர் செய்த தொண்டுகளை இந்நூலிற் பரக்கக் காணலாம்.

இசைத் தமிழில் அடங்கும் இன்னொரு நூல்வகை ஏசல். ஏசல் என்பது ஒருவரை ஒருவர் ஏசிக் கூறும் பாட்டு. எட்டிகுடி ஏசல், வள்ளி தெய்வயானை ஏசல் என்னும் ஏசல் பாட்டுக்கள் காதலையே அடிப்படையாகக் கொண்டன. ஆனால் இஸ்லாமியர் பாடிய ஏசல் பாட்டுக்கள் காதலைப்பற்றியன அல்ல. இவை இஸ்லாமியரின் சமயக் கோட்பாடுகளை எடுத்துக் கூறுவன. காயற் பட்டணத்து நெய்னா லெப்பை ஆலிம் சாகிபுவின் மகன் அகுமது லெப்பை ஆலிம் சாகிபு என்பவர் தாய் மகள் ஏசல் ஒன்று இயற்றியுள்ளார். நபிநாயகம் பேரில் ஏசற் கண்ணிகள் எனப் பெயர் பெற்ற இவ்வேசல் பாட்டில் இரு பெண்களுக் கிடையே பேச்சு நடைபெறுகின்றது. அவர்கள் இருவரும் நபிகள் நாயகத்தின் சிறந்த குணங்களைப் புகழ்கின்றனர். இவ்வாசிரியர் முகியித்தீன் ஆண்டவர் பேரில் தாய் மகள் ஏசல்

என்று இன்னுமோர் ஏசற் பாட்டை இயற்றியுள்ளார். இவ்வேசலில் முகியித்தீன் ஆண்டவரின் சிறந்த குணங்களும் புகழும் போற்றப்படுகின்றன.

சிந்தும் இசைத் தமிழில் அடங்கும் ஒரு பாவினம். இஸ்லாமியப் புலவரும் பல சிந்தப் பாடல்களைப் பாடியிருக்கின்றனர். அவற்றுள் ஒன்று நவரீதரத்நாலங்காரச் சிந்து. நயினு முகம்மது ஒலியுல்லாவைப் புகழ்ந்து சீனிக் காதிறு முகியித்தீன் இதனைப் பாடினர். பலமெட்டுக்களிற் பாடக்கூடிய பாக்கள்இதில் உள. அத்தகைய மெட்டுக்களில் ஒன்று ஒட்ட நாடக மெட்டு. தெலுங்கு நாட்டில் வாழும் மக்களில் ஒரு பகுதியினர் ஒட்டர். கிணறு தோண்டல், அணைகட்டல் முதலிய தொழில்களைச் செய்யும் இம்மக்கள் கள்குடித்து ஆடிப்பாடுவர். இவர்கள் பாடும் மெட்டுத்தான் ஒட்ட நாடக மெட்டு எனப்படும்.

இந்நூலில் நொண்டிச் சிந்தும் உண்டு. நொண்டிச் சிந்து நொண்டி நாடகத்தில் இடம் பெறும். படையிலுள்ள குதிரை ஒன்றைத் திருடக் கள்வன் ஒருவன் முயலும் பொழுது அவன் கால் தறியுண்டு பின் நல்வழி பெறுவதைச் சிந்துச் செய்யுளாற் புனைந்து கூறுவதே நொண்டி நாடகம் எனப்படும்

பாசிப்பட்டணத்து அவுலியாவின் அரிய செயல்களை எடுத்துக் கூறுவது நவரீதரத்நாலங்காரத்திலுள்ள நொண்டிச் சிந்து. சிங்காரக் கும்மி, கண்ணி, சோபனப் பதம், ஆநந்தக் களிப்பு முதலியனவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பல விருத்தங்களும் இந்நூலில் உண்டு. பெரும்பான்மையான விருத்தங்களைத் தொங்கல் என வழங்குவர். ஒரு சிலர் இப்பாக்களைத் தொங்கல் என வழங்கும் அறுசீர் கழில் நெடிலாசிரிய விருத்தம் என்பர். அந்தாதித் தொடராக இவ்விருத்தங்கள் அமைந்திருப்பதால் அந்தாதியே இஸ்லாமியப் புலவரிடைத் தொங்கல் என்று வழங்கியதெனக் கொள்ளலாம்.

பூவடிச்சிந்து என்பது காலை அசனலிப் புலவர் இயற்றிய நூல். நபி நாயகத்தின் மீது பாடிய பூவடிச் சிந்தும், மீறான் சாகிபு ஆண்டவர் மீது பாடிய பூவடிச் சிந்தும் இந்நூலில் அடங்கியுள்ளன. இப் பெரியார்களின் சமயத் தொண்டினை இச்சிந்துக்கள் கூறுகின்றன. இப்புலவர் தமது குருவாகிய செய்கு செய்யிது முகம்மது ஒலியுல்லா பேரிலும் சிந்து ஒன்று பாடினார். இச் சிந்தும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இந்துமக்களுக்கிடையே பெருவழக்கிலிருந்த காவடிச்சிந்துக்குப் பதிலாக முஸ்லிம் மக்களுக்குப் பூவடிச் சிந்து பாடப்பட்டது. காவடிச் சிந்திலுள்ள மெட்டுக்களைக் கொண்டே பூவடிச்சிந்துப் பாக்களைப் பாடுதல் வேண்டும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கே உரிய பிரபந்தங்களும் உள. அவை தமிழ் நாட்டு இஸ்லாமியருக்கே தனிச் சிறப்பாய் அமைந்துள்ளன. படைப்போர் என்னும் பிரபந்த வகை அவற்றுள் முதன்மையானது. தமிழ்ப் பெயரை உடைய இப்பிரபந்தம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திலேயே உண்டு. முனாஜாத்து, கிஸ்ஸா, மசலா, நாமா முதலியனவும் இஸ்லாமியருக்கே உரிய பிரபந்தங்கள். ஆங்கிலத்தில் ***War Ballad*** என்பதே படைப்போர். அசனலிப் புலவர் ஐந்து படைப்போர் பாடியுள்ளார். அவையாவன இபுனியன் படைப்போர், உச்சிப் படைப்போர், வடோச்சிப் படைப்போர், தாகிப் படைப்போர், இந்திராயன் படைப்போர் என்பன. குஞ்சு மூசுப்புலவர் செய்தத்துப் படைப்போரையும், காலை அசன் அலிப்புலவர் ஹுசைன் படைப்போரையும் இயற்றினர். இவற்றுள் ஹுசைன் படைப்போரிற் கூறப்படும் ஹுசைன், முகம்மது நபியின் மகள் பாத்திமாவின் இரண்டாவது மகனாவர்.

முனாஜாத்து என்றால் கடவுளுக்கு விண்ணப்பம் என்று பொருள்படும். முனாஜாத்து மாலை என்பது பன்னிரண்டு முனாஜாத்து நூல்களைக் கொண்டது. இதை இயற்றியவர் செய்யிது முகம்மது ஆலிம். கிஸ்ஸா என்பதன்

பொருள் கதை கூறுதல் என்பதே. யூசுபு நபி கிஸ்ஸா என்பது நபி யூசுபின் வரலாற்றைக் கூறும் நூல். நூலை எழுதியவர் மதாறு சாகிபுப் புலவர். கேள்வி அல்லது பிரசினம் மசலா எனப்படும். நூறு மசலா என்னும் நூல் நூறு கேள்விகளையும் விடைகளையும் கொண்டது. நூலை இயற்றியவர் யாரெனத் தெரியவில்லை. இந்நூல் தமிழிலுள்ள ஆயிரந்தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணியுடன் ஒப்பிடத் தக்கது. வண்ணப்பரிமளப் புலவர் ஆயிரமசலா அல்லது அதிசய புராணம் என்பதையும் செய்கு அப்துல் காதிறு லெப்பை வெள்ளாட்டி மசலா என்பதையும் பாடினர்.

மேலே கூறப்பட்ட முனாஜாத்து, கிஸ்ஸா, மசலா ஆகிய நூல் வகைகள் அறபுப் பெயர் பெற்ற பாவகைகள். நாமா என்பது பாரசீகப் பெயருடன் வழங்கும் பாவகை. கதை, நூல், வரலாறு என்பன இதன் பொருள். மிஃறாஜு நாமா என்னும் நூல் முகம்மது நபியின் அரும் பெருஞ் செயல்களைக் கூறுவது. இதை இயற்றியவர் மதாறு சாகிபுப் புலவர். நூறுநாமா என்னும் நூல் செய்யிதகமது மரைக் காயரால் பாடப்பட்டது.

தமிழ் நாட்டிலே இஸ்லாமிய ஞானிகள் பலர் வாழ்ந்த னர். இவர்கள் தமிழில் பத்தி ததும்பும் பாக்களைப் பாடிச் சென்றனர். இனிமை, சொற்சுவை, பொருட்சுவை செறிந்தன வாக உள்ளன இப்பாக்கள். இவற்றிற்கும் இந்துமதச் சித்தரின் பாடல்களுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமையைக் காண லாம். தமிழ் இஸ்லாமிய ஞானியருள் தலைசிறந்தவர் மூவர். அவருள் குணங்குடியைச் சேர்ந்த சுல்தான் அப்துல் காதிறு லெப்பை ஆலிம் என்ற பெயரையுடைய மஸ்தான் சாகிபு முதன்மையானவர். மஸ்தான் சாகிபு பாடல்கள் தாயு மானவரின் பாடல்களைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. இருவரும் ஒரே நிலையிலிருந்து தமது பாடல்களைப் பாடி யிருக்கலாம். இவர் பாடல்கள் மஸ்தான் சாகிபு பாடல்கள்

என வழங்கும். அடுத்ததாகக் காலங்குடி மச்சரேகைச் சித்தன் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் செய்யிது அப்துல் வாரிது ஆலிம் மவ்லானா ஐதுரூஸ் என்பவரின் பத்தி ததும்பும் பாக்கள் உள்ளத்தினை உருக்கும் தன்மையன. தென்காசியிலே பிறந்து தக்கலையிலே மறைந்த தக்கலை பீர் முகம்மது சாகிபு என்பவரும் பல பாமாலைகள் பாடி, தமிழ் நாட்டு இஸ்லாமியரிடையே சமயப்பற்றை உண்டாக்க முயற்சித்தார். இவரின் பாமாலைகள் ஞானப்பாடல்கள் என வழங்கும். அவையாவன ஞானமணிமாலை, ஞானக் குறம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞானசர நூல், ஞானப்பால், ஞானப் பூட்டு, ஞான நடனம் முதலியன.

மேலும் அப்துல் கனி சாகிபுவின் ஞானரந்தரத்தினமும், செய்யிது முகம்மது காதிறுவின் ஞானப்பிரசன்னகரத்தினமும் வாலை மஸ்தான் சாகிபுவின் ஞானவாக்கியமும், செய்கு முகம்மது அப்துல்லா சாகிபுவின் மெய்ஞான மனதலங்காரப் புகழ்ச்சியும், செய்யிது அலிவாலை குருமஸ்தானின், ஞான ஒப்பாரியும், இலங்கை வேருவிலையைச் சேர்ந்த செய்கு முஸ்தபாவின் மெஞ்ஞானத் தூதும் தமிழ் நாட்டு இஸ்லாமிய ஞானியர் பாடலில் அடங்கும். இந்து சமயச் சித்தரின் பாடல்களையே பெரும்பாலும் கொண்ட சித்தர் ஞானக் கோவை முதலிய நூல்களிலும் இத்தமிழ் நாட்டு இஸ்லாமிய ஞானியரின் பாடல்களைக் காணலாம்.

ஒவ்வொரு முஸ்லிமும் தனது வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் ஒழுக்க நூல்களும் தமிழில் எழுந்தன. இத்தகைய நூல்களிற் பெரும் பாலானவை மாலை நூல்கள். அவற்றுள் சிறப்புற்று விளங்குவது அதபு மாலை என்னும் நூலே. 'அதபு' என்னும் அறபுச் சொல் ஒழுக்கம் எனப் பொருள்படும். எனவே ஒழுக்கத்தைக்கூறும் மாலை அதபுமாலை எனப் பெயர்பெற்றது. இந்நூலை இயற்றியவர் காயற்பட்டணத்துக் காமில் ஒலி என்ற அறபுச் சிறப்புப் பெயர் பெற்ற சாமு நைனு லெப்பை

ஆலிம் என்பவர். 'கலிமா'வின் வரிசை, ஈமான் கொள்ளும் இயல்பு, தொழுகையின் இன்றியமையாமை, 'சக்காத்' என்ற கொடையின் சிறப்பு, நோன்பின் பயன், வீட்டு விலங்குகளை நடத்தும் முறைகள் முதலியன இந்நூலில் விரிவாகக் கூறப்படுகின்றன.

இஸ்லாமிய கோட்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் மக்கள் உள்ளம் தெளிவு பெறக் கூறும் நூல் அகந்தெளியு மாலை எனப் பெயர் பெறும். இந்நூலாசிரியர் குருவித்துறை முகம்மது கம்சா லெப்பை என்ற பெரியார். இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளையும் ஈமானின் (நம்பிக்கையின்) அறு பெரும் கோட்பாடுகளையும் ஆசிரியர் விளக்கமாக எடுத்து இயம்புகின்றார். மரணத்தை எவராலும் தடுக்கமுடியாது, அது உலக இயற்கை என்பதை எடுத்துக் கூறுவது மரணத்துலக்கமணி மாலை. இதனை ஈழத்துப் பதுறுத்தீன் ஹுசைன் என்பவர் பாடினார். இஸ்லாத்தின் கோட்பாடு களில் முதன்மையான 'கலிமா' என்னும் மூலமந்திரத்தை இயம்பும் நூல் மணிமுத்துமாலை. இந்நூல் மனக்கலக்கத்தைத் தெளிவிப்பதாகிய மங்சா தீபம் எனவும் வழங்கும். இதனை இயற்றியவர் தென்காசி மெய்ஞ்ஞானக்குரு செய்கு முகம்மது அப்துல் காதிறு செய்னுத்தீன்சா அன்சா ஆலிம் சாகிபு என்பவர். முஸ்லிம் மக்களின் அஞ்ஞான இருளைப் போக்கும் பொருட்டு செய்கு சுலைமானுல் காதிரிய்யி என்பவர் தங்கப் பாட்டுமாலையை இயற்றினர். இந்நூல் மெய்ஞ்ஞானத்தங்கப்பாட்டு மாலை எனவும் வழங்கும். இம்மாலையிலுள்ள செய்யுட்கள் மும்மூன்று அடிகளாலானவை. இரண்டாமடியின் முற் பகுதியிற் கூறியதையே திருப்பி மூன்றும் அடியிலும் ஆசிரியர் கூறுவர்.

இஸ்லாமிய ஒழுக்க நெறியினைக் கூறும் தமிழ் இலக் கியங்களுள் ஆசாரக் கோவை தலைமை வாய்ந்தது. இஸ்லாமிய சமய ஆசாரங்களும் ஒழுக்க முறைகளும் இந்நூலில் மலிந்து கிடக்கின்றன. கீழக்கரை அப்துல் மஜீது இந்நூலை இலங்கைக்

கல்பிட்டி முகம்மது தம்பி மரைக்காயரின் வேண்டுகோளுக் கிணங்கிப்பாடினர். இஸ்லாமிய ஒழுக்க நெறிகளைக் கூறும் இன்னொரு நூல் திரு நெறி நீதம். இதனைப்பாடியவர் பீர் முகம்மது சாகிபு.

இஸ்லாமியச் சமயத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டும் நூல்களும் உண்டு. இந்நூல்கள் எழுந்திராவிட்டால் தமிழ் நாட்டு இஸ்லாமியர் இஸ்லாமியச் சமய அறிவு இல்லாது தவிக்க வேண்டி நேர்ந்திருக்கும். இச்சமய நூல்களுள் வேதபுராணத்தைப் பெரிய நூஹு ஒலியுல்லாவும், சு அபில் ஈமான் என்னும் நூலை ஜமாலுத்தீன் புலவரும், அரிபத்து மாலையைப் பீர் முகம்மது சாகிபுவும், மீசான்மாலையை இலங்கை வேருவிலையைச் சேர்ந்த செய்கு முஸ்தபாவும் இயற்றினர்.

இஸ்லாமியக் கோட்பாடுகளை மேற்கொண்டு இயற்றப் பட்ட தமிழ் வசன நூல்களும் பல உள. இலக்கிய உரையாடல்களின பயனாகவும் வசன நூல்கள் எழுந்தன. இஸ்லாமியச் சட்டங்களை எடுத்துக் கூறும் வசன நூல்களையும் பலர் இயற்றினர். இவற்றுள் பெரும்பாலானவை அறபு மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டவை. இன்னும் சில, பாரசீக முதனூல்களின் உறுது மொழிபெயாப் புக்களைத் தழுவி எழுதப்பட்டவை.

முஸ்லிம் அத்வைத மூலமொழி என்னும் நூல் சமய வாதங் களுக்கு முதற்காரணமாய் விளங்கியது. நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்த முகம்மது அப்துல் றகுமான் இந்நூலை இயற்றினர். 'கலீபத் றல் ஹறத்தி' என்னும் அறபு நூலைத் தழுவி இது எழுதப்பட்டது. இதேபோன்று செய்பது அகமது கபீர் என்பவர் உலூமுத்தீன் என்னும் நூலை இயற்றினர். முஸ்லிம் அறபு அறிஞர்கள் (ஆலிம்கள்) ஒரு பகுதியினர் இவ்விரு நூல்களையும கண்டித்து வேறு பல நூல்களை இயற்றினர்.

பஞ்சா வரலாற்று விளக்கம் என்னும் நூலைக் காதிறு கனிப்புலவர் இயற்றினர். முகறம் விழாவில் (முகறம் இஸ்லாமிய

ஆண்டின் முதல் மாதம்) சியா முஸ்லிம்கள் எடுத்துச் செல்லும் கைக்குறி 'பஞ்சா' எனப்படும். பஞ்சா வழிபாடே இந்நூலிற் கூறப்படுகின்றது. இந்நூல் அறபு முதனூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். கிறிஸ்து மத திரியேகத்துவ மறுப்பு என்னும் நூலை முகம்மது சம்சுதீன் சாகிபு இயற்றினர்.

சீறப்புராண உரைபற்றியும் வாதம் நடைபெற்றது. இப்புராணத்திலுள்ள நபியவதாரப் படலத்துக்குக் குலாம் காதிறு நாவலர் உரை எழுதினர். இதை மறுத்துக் காதிறு அசனு மரைக்காயர் சீறு நபியவதாரப்படல உரைக்கடிலகம் இயற்றினர். இவ்வுரையை மறுத்து குலாம் காதிறு நாவலர் எழுதிய உரை நபியவதாரப்படல உரைக்கடிலக நிராகரணம் எனப்படும்.

அறபு மொழியில் பொழுதுபோக்குக் கதைகள் பல எழுதப்பட்டன. அவற்றுட்சில தமிழில் மொழிபெயர்க்கப் பட்டன. இத்தகைய நூல்களில் ஒன்று முகம்மது அப்துல்ல லெப்பை மொழிபெயர்த்தெழுதிய காளியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா என்பது.

இஸ்லாமிய ஞானபோதம், மௌலானா ரூமி சீவியசரித்திரம், சீறுவசனம், முகியித்தீன் ஆண்டவர் சரித்திரம், ஹாரூன்முஜ் கதை முதலிய வசன நூல்களும் இஸ்லாமியப் புலவரால் எழுதப்பட்டன.

இஸ்லாமியச் சட்டத்தை எடுத்துக்கூறும் வசன நூல்களும் தமிழில் இயற்றப்பட்டன. கபீபு முகம்மது ஆலிம் இயற்றிய பைலுல் றகுமான், கீழ்க்கரை செய்யது முகம்மது ஆலிம் இயற்றிய பத்தஹுல் தய்யான், முகம்மது இபுறுகீம் ஆலிம் எழுதிய பத்தஹுல் மன்னான், சாகுல் கமீது ஆலிம் இயற்றிய தன்பீஹிஸ் ஸாலிக்கீன் ஆகியன அறபு எழுத்தில் எழுதப்பட்ட இஸ்லாமியத் தமிழ்ச்சட்ட நூல்கள். அறபு மொழியில் பாண்டித்தியம் பெற்ற அறபு அறிஞர்கூடத் தமது மத போதனைகளில் இந்நூல்களை எடுத்து ஆளுகின்றனர்.

அறபுமொழி விளங்காத, அறபு மொழியை வாசிக்கக்கூடிய மக்களுக்கு இஸ்லாத்தைப்பற்றி அறிவதற்கு இந்நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன. **தறீக்குல் ஜன்னா** என்னும் நூல் நாகூர் செய்யிது அப்துல் வஹாபு ஆலிம் என்பவரால் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்து மீரான் முகியித்தீன் என்பவர் ஆறுமுகநாவலரின் நடையைப் பின்பற்றிச் **சன்மார்க்க இலகுபோத வினாவிடை** என்னும் நூலை இயற்றினர்.

இவ்வாறு காப்பியங்கள், பிரபந்தங்கள், சமயப்பாடல்கள், உரைநடை நூல்கள் முதலியவற்றை இயற்றி இஸ்லாமியத் தமிழர் தமிழ் மொழியை வளம்படச் செய்தனர். இவர்களின் அரும்பணியைத் தமிழ்நாடு அறியாதிருத்தல் வருந்தத்தக்கதே. இஸ்லாமியத் தமிழருக்கே தமது மக்கள் தமிழ் மொழிக் காற்றிய தொண்டு எத்தகையதெனத் தெரியாதிருத்தல் வியப்பிற்குரியது.

5

ஈழநாட்டுப் பெரியார் தமிழ் மொழிக்காற்றிய தொண்டு

தமிழ் நாடு சேர சோழ பாண்டிய நாடுகளைத் தன்னகத்தே கொண்டதோடு அமையாது, ஈழநாட்டையும் சேதுவினால் அணைத்துக்கொண்டு விளங்குகின்றது. ஆதலினால் ஈழநாடு மற்ற மூன்று நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு உடையதாய் இலங்குகின்றது. ஈழநாட்டை ஐரோப்பியர் கைக்கொள்ளுவதற்கு முன் ஈழத்தில் ஆண்ட அரசருட் பலர் தமிழ் நாட்டரசர் பரம்பரையினரே. ஈழ நாட்டு மக்களுட் பலரும் தமிழ் நாட்டினின்றும் அங்கு சென்று குடிகொண்டவரே. எனவே ஈழநாடும் ஈழநாட்டு மக்களும் தமிழ் நாட்டோடும் தமிழ் நாட்டு மக்களோடும் என்றென்றும் தொடர்பு உடையவரென்பது வெளிப்படை.

இத்தொடர்பு வாணிக வகையிலும், வாழ்க்கைத் துறையிலும், வழிபாட்டு முறையிலும் தோற்றம் அளிப்பதோடு அமையாது, கலையறிவிலும் காட்சியளிக்கின்றது. ஈழநாடும் தமிழ் மொழியைப் பேணி வளர்த்து வந்திருக்கின்றது. தமிழ் மொழி வளர்ச்சியிற் பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியாரே இந்தியாவில் வாழ்கின்ற தமிழருக்கு வழிகாட்டி உதவியுள்ளார்கள் எனில் மிகையாகாது. ஈழத்துப் பெரியார் பலர் தமிழுக்குப் புத்துயிர் கொடுத்தலையே தமது குறிக்கோளாகக் கொண்டு பெரிதும் உழைத்து வெற்றி கண்டனர்.

சங்க காலத்துக்குப் பின் செந்தமிழ்ச் சங்கம் நிறுவியவர் ஈழத்து அரசரே. இறக்கும் நிலையிலிருந்த ஏட்டுச்

சுவடிகளுக்கு உயிர் கொடுத்தவர் ஈழநாட்டவரே. தெளிவான நடையில் வசன நூல் பல எழுதியும், பழந்தமிழ் நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தும் வழிகாட்டியவர் ஈழநாட்டுத் தமிழ்ப் பெரியாரே. தமிழ் மக்களின் பண்டை நாகரிகச் சிறப்பை முதன் முதல் புலப்படுத்தித் தமிழ் இலக்கியப் பெருமையைத் தெளிவாக உணர்த்தித் தமிழர் வரலாற்று ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் ஈழநாட்டுப் புலவர் ஒருவரே. தமிழில் முதன் முதல் வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்தின் ஆசிரியர் யாழ்ப்பாணத்தவர். மேனாட்டு முறையில் முதன் முதல் தமிழ் அகராதி இயற்றிய தமிழர் ஈழநாட்டவர் ஒருவரே. இசைத்தமிழ் வரலாற்றை தமிழ் உலகிற்கு வழங்கியவர் மட்டக்களப்பு அடிகளே. பேச்சு வழக்குத் தமிழை எழுத்திற் பொறித்து முதன் முதலாக நாடகங்கள் எழுதியவர் ஈழநாட்டுப் பேராசிரியர் ஒருவரே. இதுபோன்ற பலதுறைகளில் வழிகாட்டித் தமிழ் அன்னைக்கு ஊன்றுகோல் போலக் கைகொடுத்து அவளைத் தாங்கி வந்திருக்கின்றது ஈழநாடு.

சங்க காலத்திலேயே ஈழநாட்டுப் புலவர் பலர் தென்னிந்தியாவுக்குச் சென்று அங்கு நிறுவப்பட்ட சங்கங்களில் பாக்களை அரங்கேற்றினரெனச் சங்க நூல்கள் வாயிலாக அறிகிறோம். இவ்வாறு ஈழத்திலிருந்து பாண்டிநாட்டிற்குப் போய் அங்கு தமிழ்ப் புலமை நடத்திய புலவருள் ஒருவர் ஈழத்துப் பூதந்தேவனார் என்பவர். இவரின் செய்யுட்களை நற்றிணை குறுந்தொகை அகநானூறு என்னும் மூன்று தொகை நூல்களிற் காணலாம்.

சங்ககாலத்துக்குப் பின் சங்கமருவிய காலத்திலோ பல்லவர் காலத்திலோ அன்றேல் சோழர் காலத்திலோ ஈழநாட்டுப் பெரியார் இயற்றிய நூல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் ஆரியச்சக்கரவர்த்தியால் யாழ்ப்பாண அரசு நிறுவப்பட்ட பின்னர் பல தமிழ் நூல்கள் தோன்றின. முன்னாள் மூன்று சங்கங்கள்

கொண்டு தமிழ் வளர்த்த பாண்டியர் போல் யாழ்ப்பாணத்தில் சங்கம் நிறுவியவர் ஆரியச் சக்கரவர்த்திகள். இவ்வாரியச் சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராக்கி அரசு புரிந்தனர். இவருடைய அரசமாளிகையும் பிறவும் இருந்தவிடம் இப்பொழுது 'சங்கிலித்தோப்பு' என்னும் பெயரால் வழங்கும் நிலப்பரப்பாகும். இங்கே பழைய அரண்மனை வாயிற் கோபுரமும், பாழடைந்த பழையமாளிகைகளின் சுவர்களும், 'யமுனு ஏரி' என்னும் பாண் கிணறும் பிறவும் உள. இவ்வரசரின் வரலாறு முதலியன கைலாசமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் முதலிய பழைய வரலாற்று நூல்களிலே காணப்படுகின்றன.

இவ்வரச மரபிலே தோன்றிய பரராசசேகரன், செகராசசேகரன் என்பார் செந்தமிழ்ச் சங்கமொன்று நிறுவித் தமிழ்க் கல்வியை விருத்தி செய்தனர். இவர் காலத்திலே யாழ்ப்பாணம் செந்தமிழ் அணங்கிற்குத் திருவரங்காயிற்று என்பர். இவ்விருவரும் அக்காலத்திலிருந்த சங்கப் புலவரைக் கொண்டு நூல்கள் பல இயற்றுவித்ததோடு தாமும் பரராசசேகரம் செகராசசேகரம் என்று தத்தம் பெயரால் ஒவ்வொரு நூல் இயற்றினர். பரராசசேகரம் மிகச் சிறந்த வைத்திய நூல். இதிற் சில பாகங்களே யாழ்ப்பாணத்தில் உள்ள சில பரம்பரை வைத்தியரிடம் இருக்கின்றன. மற்றைய செகராசசேகரம் சோதிட நூல், இது அச்சில் வெளிவந்துள்ளது. செகராசன் காலத்தில் வரதராச பண்டிதர் என்பவர் தட்சிணகைலாச புராணம் என்னும் நூலை யாத்தனர். ஏனைய சங்கப் புலவர் இயற்றிய நூல்களும் சமத்தான வித்துவான்கள் இயற்றிய நூல்களும் யாழ்ப்பாணம் போத்துக்கேயர் கைப்பட்டபின் அன்னவர் கொடுங்கோன்மையாற் சிதைந்துபோயின. இவ்வாரியச் சக்கரவர்த்திகளின் அமைச்சரும் மிகுந்த தமிழ்ப்புலமை உடையவர். யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலில் இவர்களுள் ஒருவர் பாடிய வெண்பாக்கள் சில அடங்கி

புள்ளன. அடியார்க்கு நல்லாரும் இவ்வமைச்சருள் ஒருவ ரெனக் கொள்வர்.

பரராச சேகரனின் மருகர், அரசகேசரி என்னும் அரசிளங்குமாரன். இவர் குடியிருந்த இடம் 'அரசகேசரி வளவு' என வழங்குகின்றது. இவர் மகாகவி காளிதாசன் பாடிய இரகுவமிசம் என்னும் காவியத்தைத் தமிழிலே பாடினர். இந்நூலில் சொல்லணிகளும் பொருளணிகளும் மலிந்துகிடக்கின்றன. அரிதிற் பொருள் கொள்ள வேண்டிய சொற்களும் சொற்றொடர்களும் கொண்டது இந்நூல். எனவே யாவரும் கற்றுச் சுவைக்கக்கூடிய முறையில் நூல் அமைய வில்லை. அரசமாளிகைக்கு அண்மையிலுள்ள செந்தாமரைக் குளத்தின் அருகே புதிதாகக் கட்டப்பட்ட ஓர் அழகிய மண்டபத்தில் வீற்றிருந்து இந்நூலைப் பாடினர் என்பர். நாயன்மார்கட்டு என்னுமிடத்திலுள்ளது இக்குளம்.

ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியதும் யாழ்ப் பாணத்திலும் கொழும்பிலும் பாடசாலைகளை அமைத்துக் கிரேக்கு, இலத்தின், தமிழ் முதலிய மொழிகளைப் படிப்பித் தனர். மேலும் ஓர் அச்சியந்திரமும் நிறுவினர். யாழ்ப்பாணத் துக் தமிழராகிய மெல்லோ பாதிரியார் (*Philip De Mello*) ஒல்லாந்தர் கலாசாலையிற் கற்றுத் தேர்ந்தவருள் ஒருவர். இவர் கிரேக்க மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு (விவிலிய வேதம்) 1749 ம் ஆண்டில் ஒல்லாந்த ருடைய அச்சுக்கூடத்தில் வெளியாயிற்று. மருதப்பக்குறவஞ்சி என்னும் நூலையும் இவர் யாத்தனர். சூடாமணி நிகண்டுக் குப் பல செய்யுட்களையும் கூட்டினர்.

இவருடன் தொடர்பு பூண்டிருந்தவர் இலக்கண இலக்கியங்களில் வல்லுநராகிய கூழங்கைத் தம்பிரான். தஞ்சைமான் வட்டத்திலுள்ள ஒரு மடத்தைச் சேர்ந்தவர் இப்பெரியார். இவருக்கும் மற்றத்தம்பிரான்களுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கால் இவர் அவ்வூரை விட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். கூழங்கைத்தம்பிரானிடம் பலர் இலக்கண

இலக்கியம் கற்றுத் தேர்ச்சி அடைந்தனர். யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கம் செட்டியார், யாழ்ப்பாண வைபவமாலை பாடிய மயில்வாகனப் புலவர் முதலியோர் இவரிடம் கற்றவர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலே ஈழநாட்டுப் பெரியார் தமிழ்மொழியைப் பல துறைகளில் வளர்த்தனர். யாழ்ப்பாணத்து நல்லூரிலே இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர் வில்லவராயமுதலியார் என்பவர். இவர் ஒல்லாந்த அரசினரால் **தேசவளமை** என்னும் நியாயப் பிரமாண நூலைத் திருத்தி அமைக்கும் வண்ணம் நியமிக்கப் பட்ட அறிஞருள் ஒருவர். இவருடைய மகன் சின்னத் தம்பிப் புலவர் என்பவர். இவர் இளமையிலேயே கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தார். ஒருநாள் இவர் தெருவிலே விளையாடிக்கொண்டிருந்த பொழுது தமிழ் நாட்டுப் புலவர் ஒருவர் வில்லவராய முதலியார் மீது ஒரு பிரபந்தம் பாடி வந்தார். அப்புலவர் முதலியாரின் மகனை நோக்கி வில்லவ ராயரின் இல்லம் எங்கே உளது எனக் கேட்டனர். உடனே இவ்விளைய புலவர் கொன்றை மரம் நிற்கும் வீடே அவருடைய இல்லம் என்பதைப் 'பொன்பூச்சொரியும்' எனத் தொடங்கும் பாட்டின் மூலம் கூறினர்.

சிறுவயதிலேயே இவருக்குப் புலமைத் திறன் இருந்தது என்பதற்குப் பல வரலாறுகள் உண்டு. இளமைக் காலத்தில் இவர் பள்ளிக்கு ஏகாது பசுநிரை காக்கும் இளைஞரோடு காலத்தைக் கழித்து வந்தனர். ஒருநாள் வில்லவராயர் ஓர் அந்தாதி பாடத்தொடங்கி முதல் இரண்டடியையும் முடித்து, மற்ற இரண்டடியையும் செவ்வனே பாடிமுடிக்க இயலாது, எழுத்தாணியையும் ஓலையையும் வைத்துவிட்டு வெளியே ஏகினர். சிலநாளிகைக்குப் பின் அவ்விடம் சென்று சின்னத்தம்பியார் ஈற்றடி இரண்டையும் நயம்பெற முடித்து ஓலையை இருந்த இடத்து வைத்துச் சென்றார். பாட்டினை முடிப்பதற்கென அங்கு வந்த வில்லவ

ராய முதலியார் பாட்டுச் சுவைமிக முடிந்திருத்தலைக் கண்டு, அதைச் செய்தவன் தனது மகன் என அறிந்து மகனிடம் மிகுந்த அன்பு கொண்டார். கணேசையர் என்னும் அந்தணர் வீட்டில் வித்துவமணிகள் ஒன்று சேர்ந்து கம்ப ராமாயணத்திற்குப் பொருள் செய்து வந்தபோது, ஒரு முறை ஓரிடத்தில் ஏற்ற பொருள் சொல்ல இயலாது தத்தளித்தனர். அப்பொழுது இவ்விளைஞர் தக்க உரை சொல்லி அவர்களின் இடைஞ்சலை நீக்கினார். இதனால் இவருக்குப் பண்டாரக் குளம் என்னும் வயல் பரிசாகக் கணேசையரால் கொடுபட்டது.

சின்னத்தம்பிப்புலவர் செய்த நூல்கள் **மறைசை அந்தாதி, கல்வளையந்தாதி, கரவைவேலன் கோவை, பறாளைப் பள்ளு** என்பன. மறைசையந்தாதியை வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது பாடினர். கல்வளையந்தாதியை யாழ்ப்பாணத்துச் சண்டிருப்பாயில் உள்ள கல்வளை யென்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் மீது பாடினர். கரவெட்டியிலே செல்வராய் வாழ்ந்த வேலாயுத பிள்ளை என்பவரைப் புகழ்ந்து பாடப்பட்டது கரவை வேலன் கோவை. இக்கோவையிலுள்ள நானூறு செய்யுட்களில் ஒவ்வொரு செய்யுளும் புலவர் முன்னிலையிற் படித்து அரங்கேற்றி முடிந்ததும் ஒவ்வொரு பொற்றேங்கா யாக நானூறு பொற்றேங்காய்கள் பரிசுபெற்றனர் எனக் கூறுவர். பறாளைப்பள்ளு யாழ்ப்பாணத்துப் பறளாய் என்னும் இடத்திலுள்ள பிள்ளையார்மேல் பாடிய நூல்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் சேனாதிராய முதலியார் என்பவர். இவர் தமது தகப்பனாகிய நெல்லைநாத முதலியாரிடமும், கூழங்கைத் தம்பிரானிடமும், மாதகல் சிற்றம்பலப் புலவரிடத்தும் தமிழ்க் கல்வி கற்றனர். நீதி மன்றத்தில் வழக்கறிஞராகவும், இரு மொழியாளராகவும் வேலை பார்த்து வந்தனர். இவர் தாம் வாழ்ந்த காலத்துக் கலைவாணருள் சிறந்து விளங்கினர்.

நல்லூர்ச் சரவணமுத்துப் புலவர், தென் கோவை அம்பலவாண பண்டிதர், நீர்வேலிப் பீதாம்பரப் புலவர், நல்லூர் ஆறுமுகநாவலர் முதலியோர் இவரிடத்துக் கற்றுத் தேர்ச்சி பெற்ற மாணவர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே தமிழை வளர்ப்பதற்கு ஒப்பற்ற தொண்டு புரிந்தார் இவர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் முதன்முதல் புராண விரிவுரை ஆற்றியவர் இவரே. இவரைப்பின்பற்றியே சரவணமுத்துப் புலவர், ஆறுமுக நாவலர், பொன்னம்பலப் பிள்ளை முதலியோர் அவ்விரிவுரைகளை நடத்திவந்தனர். இவருக்கு நல்லூர்க் கந்தசுவாமியார் மீது அதிக பற்று உண்டு. எனவே அக்கடவுளைப் பாராட்டி **நல்லை வெண்பா, நல்லை அந்தாதி, நல்லைக்குறவஞ்சி** ஆகிய பிரபந்தங்கள் பாடினர். மேலும் இவர் நீராவிப் பிள்ளையார்மீது ஒரு கலி வெண்பாவும் பல தனிப்பாடல்களும், மாவிட்டபுரச் சுப்பிரமணியக் கடவுள்மீது ஊஞ்சற் பதிகம் முதலியனவும், வேறு பல தலங்கள் மீது பதிகங்களும் பாடினர். இன்னும் மானிப்பாயில் அச்சிடப்பட்ட அகராதி தொகுத்தபோது இவரே முதல்வராயிருந்து தொகுத்தனர்.

சங்கத்தின் இறுதிக்காலத்திற்குப்பின் தமிழ்நாட்டில் சமணமும் பௌத்தமும் ஆதிக்கம் பெற்றுச் சைவ சமயம் தளர்ச்சியுற்ற காலத்தில் அதை மீண்டும் உயர்ந்த நிலையில் வைத்துச் சமண பௌத்த சமயங்களின் செல்வாக்கைக் குறைப்பதற்குப் பல்லவர் காலத்திலே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய சைவ குரவர் தோன்றினர். இதனைப் போலவே மேனாட்டிலிருந்து கிறித்த சமயம் தமிழ்நாட்டிற் பரவி ஆதிக்கம் பெறத் தொடங்கிய காலத்திலே சைவ சமயத்தை அதற்குரிய நிலையில் வைப்பதற்குத் தோன்றினர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர். ஈழநாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டதும், அதன் வடபாகமாகிய யாழ்ப்பாணத்தில் கிறித்த சமயத்தை நிலை நாட்டும் நோக்கத்தோடு அமெரிக்கா தேசத்திலிருந்து

பாதிரிமார் பலர் வந்து சேர்ந்தனர். அக்கால யாழ்ப்பாண மக்கள் சைவசமய வழிபாட்டினராக விளங்கினர். இவர்களைக் கிறித்தவராக்கும் முயற்சியில் பாதிரிமார் பெரிதும் ஈடுபட்டனர். இந்நோக்கத்துடன் சமயத்தைப் பற்றிய விரிவுரைகள் நிகழ்த்தியும், கிறித்த கோயில்களைக் கட்டியெழுப்பியும், பள்ளிக்கூடங்களை நிறுவியும் கிறித்த சமயக் கொள்கைகளைப் பரப்பினர். தமிழ் மக்களுக்கு ஆங்கிலக் கல்வி அறிவூட்டுவதற்கு வட்டுக்கோட்டையில் கல்லூரி ஒன்று நிறுவி, அக்கல்லூரியிலே தங்கள் சமயத்தைத் தழுவிய மாணவருக்கு இலவசக் கல்வி அளித்தும், பின்பு அரசாங்க அலுவலகங்களில் அவர்கள் வேலை பெற அவர்களுக்கு உதவி செய்தும் வந்தனர்.

இவர்களது விடாமுயற்சியின் பயனாகத் தமிழர் பலர் மதம் மாறிக் கிறித்தவர் ஆயினர். இதைக் கண்ணுற்ற சைவப்பெருமக்கள் செய்வதென்னவென அறியாது தத்தளித்தனர். அவ்வேளையிலே தோன்றினர் ஆறுமுக நாவலர். இவர் தமிழ்க் கல்வி அறிவு சான்றவர். இலக்கண இலக்கியங்களும் சைவசமய நூல்களும் நன்கு கற்று ஆராய்ந்தவர். சங்கதமும் ஆங்கிலமும் கற்று அவ்விரு மொழியிலும் பயிற்சி பெற்றார். யாழ்ப்பாணத்திலிருந்த பாதிரியாராகிய பீற்றர் பேசிவேல் என்பவருக்குத் தமிழ்ப் பண்டிதராய் இருந்தனர். இவ்வாறு இருக்கும் பொழுதே கிறித்த வேத நூலாகிய பைபிளின் தமிழ் மொழிபெயர்ப்பைத் திருத்தி அமைத்தார். தமிழ்க் கல்வி நிலைகுலைந்து தள்ளாடுவதைக் கண்டு, தமிழருக்கு அவரின் மேன்மையினையும் தொன்மையினையும் விளக்கிக்காட்டி, அவர்களைத் தட்டி எழுப்பினர். தமிழ் நாட்டிற் சைவ சமயம் தலையோங்கா வண்ணம் பலவாறு முனைந்து நின்ற பாதிரிமாரைப் போருக்கு இழுத்தார்.

ஆறுமுகநாவலர் துண்டுக்கட்டுரைகளையும் சிறு நூல்களையும் எழுதியும், சொற்பொழிவு பல ஆற்றியும் கிறித்தவப்

பாதிரிமாரைக் கண்டித்துச் சைவரைத் தட்டி எழுப்பினர். சைவசமயப் பற்றையும், தமிழ்க் கல்வி வளர்ச்சியையும் தமிழ் நாடெங்கணும் பரவச் செய்தனர். மாணவர் தமிழ்க் கல்வியு சைவ சமய அறிவும் பெறுதற்பொருட்டுப் பல கல்வி நிலயங்களை நிறுவி, அப்பிள்ளைகளுக்காகவே அச்சு நிலயங்களை உண்டாக்கித் தமிழ் நூல்களைப் பிழையறத் திருத்தி அச்சிடத் தொடங்கினர். இவர் இவ்வாறு திருத்தி அச்சிட்ட நூல்களைப் பின்பற்றியே பிற்காலத்தில் பலர் தமிழ் நூல் அச்சிட முன்வந்தனர். ஆகவே தமிழ் நூல்களைப் பிழையறத் திருத்தி அச்சிட நாவலரே பிறருக்கு வழிகாட்டினர் என்பது மிகையாகாது.

தமிழில் உணர்ச்சி ததும்ப விரிவுரையாற்றலாம் என்பதைச் செயலிலே தமிழ் நாட்டவருக்கு எடுத்துக்காட்டியவரும் ஈழத்து ஆறுமுகநாவலரே இவர் காலத்திற்குமுன் விரிவுரை நிகழ்த்துவது கோயில்களிற் படிக்கும் புராண இதிகாசங்களுக்கு விரிவுரை கூறுவதாகும். இவற்றைத் தவிரப் புறம்பான பொருள் ஒன்றைப்பற்றித் தமிழில் விரிவுரை ஆற்றும் வழக்கம் தமிழ் நாட்டில் இருக்கவில்லை. ஆனால் நாவலரே கிறித்த மதப் பாதிரிமாரின் ஆங்கிலச் சொற்பொழிவுகளை முன்மாதிரியாகக் கொண்டு புராண இதிகாசங்களல்லாத வேறு பொருள் பற்றி விரிவுரை ஆற்றத் தொடங்கினர். இதில் இவர் திறம்பெற்றதனலேயே 'நாவலர்' என்ற பட்டத்தினை இவருக்குச் சிறப்பாக வழங்கினர். நாவலர் இத்துறையில் ஆற்றிய பணியின் பயனாகவே தமிழ் மொழியும் மேனாட்டு மொழிகள் போல விரிவுரை ஆற்றச் சிறந்த ஒரு மொழியாக விளங்குகின்றது. பிற்காலத்தில் தமிழில் விரிவுரை ஆற்றிச் சிறப்பொடு விளங்கிய அறிஞருக்கு நாவலரே வழிகாட்டினர் எனலாம்.

நாவலரே, கல்லாதவரும் எளிதில் விளங்கக் கூடிய தெளிவான முறையில் முதன்முதல் செந்தமிழ்ச் சொல் அமைந்த வசன நடையைக் கையாண்டனர். இவருக்கு

முன் வசன நடையில் எழுதிய ஆசிரியர்கள், பொருள் மயக்கத்தை உண்டாக்கும் கடுஞ் சொற்களை வழங்கினர். சங்கதச் சொற்களை மிகுதியாக அமைத்தும், இலக்கணப் புணர்ச்சிகளைப் போற்றியும், பிறருக்குப் பொருள் விளங்காத வண்ணம் எழுதி வந்தனர். அத்தகைய கட்டுரைகள் பொது மக்களுக்கு எவ்வகைப் பயனும் அளிக்கவில்லை. ஆனால் நாவலர், பொதுமக்கள் சைவ சமய உண்மைகளைத் தெளிவாக உணர வேண்டுமென்ற குறிக்கோளுடன் கல்லாதவரும் எளிதில் விளங்கக்கூடிய தெளிவான வசனநடையைக் கையாண்டனர். மேலும் பொருட்டெளிவு கருதி மேனாட்டார் வழங்கி வந்த முற்றுத்தரிப்புப் போன்ற குறியீடுகளைத் தமது உரைநடையிற் கையாண்டனர்.

இவர் திருத்தி அச்சிட்ட நூல்கள், கந்த புராணம், பெரிய புராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவை உரை, தொல்காப்பியச் சேனாவரையர் உரை, இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பிரயோகவிவேகம், தருக்கசங்கிரக உரை, நன்னூல் விருத்தியுரை ஆகியன. இவர் புதிதாக இயற்றி வெளியிட்ட நூல்களுட் சில முதற் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம், முதற் சைவ வினாவிடை, இரண்டாம் சைவ வினாவிடை, இலக்கணச் சுருக்கம், பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சிதம்பர மான்மியம், கோயிற் புராணஉரை, சைவ சமய நெறி உரை, நன்னூற் காண்டிகை உரை முதலியன.

தமிழ்ப் புலவருடைய வீடுகளிற் பனையோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டு வெளியேற இயலாது தத்தளித்துக் கொண்டிருந்த தமிழை அச்சு ஊர்தியில் ஏற்றி, நாடெங்கும் பரவச் செய்வதிற் பெரிதும் முயன்றவர் தாமோதரம் பிள்ளை. யாழ்ப்பாணத்துச் சிறுப்பிட்டியில் கி. பி. 1832 ம் ஆண்டிற் பிறந்த இப்பெரியார் சென்னைக்குச் சென்று தினவர்த்தமானி என்ற தமிழ்ப் பத்திரிகையை நாள்தோறும்

பதிப்பித்தார். சென்னை இராசதானிக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராயும் அமர்ந்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் முதன்முதலாக 1858ம் ஆண்டில் நடாத்தப்பட்ட கலைமாணிப்பட்டத் தேர்வுக்குத் தோன்றியவருள் இவரே முதலாவதாகத்தேர்ச்சியடைந்தார். பனையோலைச்சுவடிகளைப் பரிசோதித்துப் பல நூல்களைப் பதிப்பித்தனர். அவற்றுட் பெரும்பாலன இலக்கண நூல்கள். இலக்கண நூல்கள் விலைபோவது மிகவும் அருமையாக இருந்த போதும் அவற்றை இவர் அச்சிட்டது போற்றற்குரியதே.

அங்ஙனம் அவர் வெளியிட்ட இலக்கண நூல்கள் தொல்காப்பியம் நச்சினார்க்கினியம், தொல்காப்பியம் சேனாவரையம், வீர சோழியம், இறையனார் அகப்பொருளுரை, இலக்சண விளக்க உரை என்பனவாம். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகை, திரிசொற்களால் ஆக்கப் பெற்ற தணிகைப் புராணம், ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகிய சூளாமணி ஆகிய இலக்கியநூல்களும் இவர் பதிப்பித்தவையே.

இவருடைய இலக்கிய அறிவிற்கும், புத்திக்கூர்மைக்கும், ஆராய்ச்சித் திறனுக்கும் இவர் பதிப்பித்த இந்நூல்கள் தக்க சான்று பகருகின்றன. இவர் இறக்குங்காலத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய அகநானூற்றினைப் பரிசோதித்து வந்தனர் என்றும், அது வெளிவரவில்லையென்றும் அறிஞர் கூறுவர். இவர் நூல்களைப் பதிப்பித்ததோடு அமையாது பல இலக்கண இலக்கிய நூல்களையும் எழுதினர். கட்டளைக் கலித்துறை என்னும் இலக்கண நூல், வசனசூளாமணி யெனப் பெரிய உரைநடை நூல், சைவ மகத்துவ போதம் என்னும் சமய நூல், சிறு பிள்ளைகளுக்கென வகுக்கப்பட்ட ஆறும் வாசகப்புத்தகம், ஏழாம் வாசகப் புத்தகம் என்னும் நூல்கள் இவர் இயற்றியனவே. இவ்வாறு இந்நூல்களை இயற்றியும், இறக்கும் நிலையிலிருந்த பழஞ்சுவடிகளுக்கு உயிர் கொடுத்து வழிகாட்டியும் தொண்டாற்றினார் ஈழநாட்டுத் தாமோதரர்.

தென்னிந்திய வரலாறு, திராவிட நாகரிக வரலாறு ஆகியவற்றிற்கு அடிகோலி வழிகாட்டியவர் ஈழநாட்டுப் பெரியார் கனகசபைப் பிள்ளை. இவர் யாழ்ப்பாணத்து மல்லாகத்தைச் சேர்ந்த விசுவநாத பிள்ளையின் மகன். சென்னை அரசாங்கக் கல்லூரியிற் கற்று இளம் வயதிலேயே கலைமாணிப்பட்டத் தேர்வில் தேர்ச்சியடைந்தார். தமிழ் அறிவிலும் சான்றவராகத் திகழ்ந்தார். தபாற் களரியில் மேலதிகாரிப் பதவி விரைவில் இவருக்குக் கிடைத்தது. இப்பதவியிலிருந்து கடமையாற்றும் முறையில் தமிழ் நாட்டிலுள்ள இடங்கள் பலவற்றிற்குச் சென்றார். இவ்வாறு செல்லும் பொழுது தமிழ் ஆராய்ச்சிக்குரிய வசதிகள் சில இவருக்குக் கிடைத்தன.

இவர் தாம் சென்ற இடங்களிலே தமக்குக் கிடைத்த அச்சில் வராத, அரிய தமிழ் ஏட்டுப் படிகளைச் சேர்த்து, வைத்திருந்தார். அப்படிகளைக் கடிதத்திற் பெயர்த்து எழுதுவதற்கு ஒருவரை ஒழுங்கு செய்து தம்முடன் இருபது ஆண்டுகளாக வைத்திருந்தார். தாம் இடர்ப்பட்டுத் தேடிப்பெற்ற ஏட்டுப்படிகளைப் பதிப்பாளருக்குக் கொடுத்தனர். கலாநிதி உ. வே. சாமிநாதையருக்குப் பத்துப் பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம், முதலிய பண்டைக்கால இலக்கிய நூல்களின் ஏட்டுப் பிரதிகளைக் கொடுத்து உதவினர்

சாசனங்களைக் கற்கத் தொடங்கிப் பல கோயில்களிலுள்ள சாசனங்களைக் குறித்துத் தொகுத்து எழுதி வந்தார். அத்துடன் சாசனங்கள் பலவற்றின் படிகளையும் ஆக்கிவந்தனர். மக்களின் வாழ்க்கைப் பண்பு, சிறப்பியல்புகள், சரித்திரவரலாறு ஆகியவற்றையும் ஆராய்ந்து வந்தார். இவற்றின் பயனாக ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர் (*The Tamils One Thousand Eight Hundred Years Ago*) என்னும் நூல் இவரால் இயற்றப்பெற்று வெளியாகியது. இந்நூலிலே தமிழ் நாட்

டின் நிலை, அதன் எல்லைப் புறத்து நாடுகளின் நிலை, தமிழ் நாடு வேற்று நாடுகளுடன் நடத்திய வாணிபத்தின் பெருக்கு, தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றை விரிவாக ஆராய்ந்து கூறுகின்றார். பொதுமறை நூலாகிய திருக்குறள், பெருங் காப்பியங்கள் எனச் சிலர் கருதும் சிலப்பதிகாரம் மணி மேகலை ஆகிய இவற்றின் காலம் முதலியன, சங்கப் புலவர் வரலாறு, சைவ வைணவ சமயங்களின் நிலை, தமிழ் மக்களின் பண்பாடு ஆகியனவற்றையும் ஆராய்ந்து விளக்கியிருக்கின்றார். இவர் கையாண்ட ஆராய்ச்சி வழியைப் பின்பற்றியே பிற்கால ஆராய்ச்சிகள் நடந்தன. இவர் இயற்றிய இந்நூல் இன்னும் தமிழ் ஆராய்ச்சி உலகில் சிறந்த இடம் வகிக்கின்றது. தமிழுக்கு அழியாப் புகழை அளித்த இவ் வரிய நூலைத் தமிழ் உலகிற்கு ஈந்த இப்பெரியார் தமது ஐம்பத்தாறாவது வயதில் திடீரென்று உயிர் நீத்தார். இவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய பணி என்றும் நிலைத்திருக்கும். பழந்தமிழரின் பண்பாட்டுச் சிறப்பினை முதன்முதற் புலப் படுத்தித் தமிழ் நூல்களின் மேன்மையை உலகறியச் செய்து, தமிழ் ஆராய்ச்சித்துறையில் வழிகாட்டித் தமிழ் அன்னையைச் சிறப்புறச் செய்தார் இந்த ஈழநாட்டுப் பெரியார்.

நா. கதிரைவேற்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் புலோலியில் வாழ்ந்தவர். இளமையிலேயே மிகுந்த கூரிய புத்தியும் ஞாபக ஆற்றலும் பெற்று விளங்கி னர். வறிய குடும்பத்துப் பிள்ளையாகையால் நீண்ட காலம் பள்ளிக்கூடத்திற் கல்வி பயில்வில்லை. ஆறாம் வகுப்புப் படிப்புடன் புலோலியூர் நொத்தாரிசு சிதம்பரப்பிள்ளை என்ப வரிடம் லிகிதராகக் கடமை பார்த்தார். இருபத்திரண்டாவது வயதிலே இந்தியாவுக்கு மரக்கலம் மூலம் ஒளித்தோடினர். சென்னையிற் சங்கதத்திலும் தமிழிலும் திறமை வாய்ந்த புலவரை அடைந்து அவர்களிடம் தமிழும் வடமொழியும் கற்றுப் புலமையுடன் விளங்கினர்.

சென்னையில் வாழ்ந்த காலத்திலே பல ஊர்களுக்குச் சென்று ஆங்கெல்லாம் விரிவுரைகள் ஆற்றி வந்தனர். ஒப்பற்ற நாவன்மை உடையவராதலின் பல அறிஞர் கூடிய அவைகளில் சிறிதேனும் அஞ்சாது பேசிவந்தனர். இடையிலே தடைப்படாது விரைவிற் பலமணிநேரம் நின்று ஒருவித இடர்ப்பாடுமின்றிப் பேசும் ஆற்றல் படைத்தவர் இவர். எவராயினும் எதிர்ப்பட்டு ஒரு பொருள் வினவின், உடனே அவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் விடை கூறும் அறிவும் உடையவர். தொன்மை இலக்கணமாகிய தொல்காப்பியத்தையும், உலகப் பொதுமறையாகிய திருக்குறளையும் நன்கு படித்திருந்தார்.

இவர் மாயாவாதத்தை நிராகரித்துப் பேசுந்தன்மை வாய்ந்தவர். எனவே, "மாயாவாத கம்சகோளரி" என்னும் சிறப்புப் பெயர் பெற்றனர். இவர் இயற்றிய நூல்களாவன, கூர்ம புராண விரிவுரை, பழனித்தல புராணவுரை, சைவ சந்திரிகை, சைவ சித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம் என்பன. இவர் ஓர் அகராதியும் தொகுத்தெழுதி அச்சிட்டுள்ளார்.

சிவசம்புப் புலவர் கி.பி. 1830 ல் யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையைச் சேர்ந்த உடுப்பிட்டியிலே பெரும் புலவராயிருந்த அருளம்பல முதலியாருக்கு மகனாகத் தோன்றினர். நல்லூர்ச் சரவணமுத்துப்புலவர், சம்பந்தப்புலவர் முதலியோரிடத்து இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுணர்ந்தார். இளமையிலேயே கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தனர். ஈழ நாட்டில் பிரபந்தம் பாடியவருள் இவரே அதிகமான பிரபந்தம் பாடியவர். இராமனாதபுரம் இரவிகுலமுத்து விஜய இரகுநாத பாஸ்கர சேதுபதி மகாராசாவின்மீது கல்லாடக் கலித்துறையும், நான்மணிமாலையும், இரட்டை மணிமாலையும் வேறு தனிக் கவிகளும் பாடிச் சென்று, அவர் முன்னிலையில் புலவர் பலர் கூடிய அவையில் அரங்கேற்றினர். பொன்னுச்சாமித் தேவர் அவர்களின் மகனும்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவருமாகிய பாண்டித் துரைத் தேவர் மீதும் ஒரு நான்மணிமாலை பாடியுள்ளார். மேலும் தமிழ் நாட்டிலும் ஈழத்திலுமுள்ள சில கோயில்கள் மீதும் பல பிரபந்தங்கள் பாடினர். வேறு பிரபுக்கள் மீதும் சில பிரபந்தங்கள் யாத்துள்ளார். இவர் பாடிய பிரபந்தங்கள் அறுபது வரையில் உள்ளன. இவர், நூல்கள் சிலவற்றிற்கு உரையும் எழுதினர். அவற்றுட் சில: மறைசை அந்தாதி உரை, யாப்பருங்கலக்காரிகை உரை, கந்த புராணத்து வள்ளியம்மை திருமணப்படல உரை முதலியன.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல கிறித்தவர் தமிழைப் பலதுறையில் வளர்த்தனர். ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின் 1821 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்து நல்லூரில் சர்ச் மிசன் சபையார் ஓர் அச்சியந்திரம் நிறுவினர். 1870 ம் ஆண்டில் கத்தோலிக்கச் சபையார் அச்சியந்திரம் ஒன்றைக் கொழும்பில் ஏற்படுத்தினர். இது, பின்பு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கிறித்த மதத்தைப் பரப்பிய பெரியார் தமிழில் விஞ்ஞான நூல்கள் பல எழுதித் தமிழ் மொழியைப் பல துறையில் விருத்தி செய்தனர். சாதாரண இதிகாசம் (*History*) என்னும் வரலாற்று நூலை ஆர்னல்டு (*J. R. Arnold*) என்பவர் எழுதினர். இது 1858 ம் ஆண்டில் அமெரிக்க மிசன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தவரான காரல் என்பவர் (*D. L. Carroll*) வீசு கணிதம் (*Elementary Algebra*) என்னும் நூலை 1885 ம் ஆண்டில் எழுதி யாழ்ப்பாணத்தில் அச்சிட்டார். வில்லியம் நெவின்சு (*William Nevins*) என்பவர் நியாய இலக்கணம் என்னும் தருக்க சாத்திர நூலை எழுதி அச்சிட்டனர். கிறீன் என்பவர் (*Dr. S. F. Green*) அங்காதி பாதம் (*Human Anatomy*) என்னும் அரிய சிறந்த நூலொன்றை 1872ம் ஆண்டில் எழுதினர். கெமிஸ்தம் (*Chemistry*) என்ற நூலும் இவர் இயற்றியதே. வானசாத்திரம், சுகரணவாதம்,

உற்பாலனம் என்னும் நூல்களும் யாழ்ப்பாணத்தில் வெளி வந்தன.

ஈழநாட்டுக் கிறித்தவப் பாதிரிமார் தமது சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்குப் பத்திரிகைகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் தமிழ் வசன நடையையும் வளர்த்தனர். **உதய தாரகை** என்பது யாழ்ப்பாணத்து அமெரிக்க மிசனால் 1841 ம் ஆண்டு முதல் வெளியிடப்படும் மாத வெளியீடு. **பாலியர் நேசன்** என்பது மாணுக்கரின் பொருட்டு 1859 ம் ஆண்டு முதல் நடைபெற்ற வெளியீடு **கத்தோலிக்கப் பாதுகாவலன்** என்பது ஈழத்தில் கத்தோலிக்கக் கிறித்த மதத்திற்குத் தலைவராய் இருந்த கிறித்தோபர் பொன்சீன் என்பவர் 1876 ம் ஆண்டில் தொடங்கிய மாத இருமுறை வெளியீடு. இவ்வாறு பத்திரிகைகளை வெளியிட்டும் பல நூல்களை எழுதி அச்சிட்டும் தமிழ் மொழியை வளர்த்து வந்தனர் ஈழத்துக் கிறித்தவப் பெரியார்.

மொழிக்கு இன்றியமையாத கலைக்களஞ்சியத்தைத் தமிழில் முதன் முதலாக வகுத்தவரும் யாழ்ப்பாணத்தவரே. யாழ்ப்பாணம் நாவலர் கோட்டத்து ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் 1902 ம் ஆண்டில் **அபிதான கோசம்** என்னும் நூலை அரங்கேற்றினர். தமிழிலே கலைக்களஞ்சிய நூலை இயற்றுவதற்கு வழிகாட்டியாக விளங்கியவர் இவரே. அகராதிக் கலைக்கு இருப்பிடமாகத் திகழ்ந்ததும் யாழ்ப் பாணமே. முதன்முதல் மேனாட்டு முறையில் எழுந்த அகராதி சதுரகராதி. ஆனால் இதை எழுதியவர் வீரமா முனிவர் என்னும் மேனாட்டவர். இதன் பின்னர் அகராதி ஆக்கும் துறையில் பெரிதும் உழைத்தவர் ஈழநாட்டவரே. யாழ்ப்பாணத்தில் இயற்றப்பட்ட அகராதிகளுள் குறிப்பிடத் தக்கவை **மானிப்பாய் அகராதி, கதிரைவேற் பிள்ளை மதுரைத் தமிழ்ச்சங்க அகராதி, பேர்சிவல் அகராதி, வின்சிலோ அகராதி, முத்துத்தம்பிப்பிள்ளை அகராதி** முதலியவை. இவ்வகராதிகளைப் பின்பற்றியே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி எழுந்தது.

சென்ற சில ஆண்டுகளுக்குள் ஈழநாடு முப்பெருந் தமிழ் மணிகளை இழந்துவிட்டது. பன்மொழி அறிஞரும் தமிழ் மொழியே உலகம் தோன்றிய பொழுது உண்டான மொழி என வாதாடியவருமாகிய நல்லூர்ச் சுவாமி ஞானப் பிரகாசர், யாழ் நூலாசிரியர் உயர்திரு விபுலானந்த அடிகள், செந்தமிழ்ச் செல்வியைப் பாடிய பாவேந்தன் நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் ஆகிய மூவரும் மறைந்துவிட்டார்கள். "தமிழே உலகத் தாய்மொழி என்று பறைபடித்தோதிய பன்மொழிப் பண்டிதன்" என்று சுவாமி சுத்தானந்தராற் பாராட்டப் பெற்றவர் சுவாமி ஞானப்பிரகாசர். தமிழ் மொழி ஆராய்ச்சிக்கும் சரித்திர வரலாற்றிற்கும் அரும் பணி புரிந்த வர் இப்பெரியார். நல்லூர்ச் சுவாமி என்ற அடைமொழி யொடு கூறப்படும் இவ்வறிஞர் 1875ம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் மானிப்பாயில் பிறந்தார். இவருக்குப் பதினெண் மொழிகளில் ஞானம் இருந்ததாகக் கூறுவர். தமக்கிருந்த பரந்த அறிவின் துணையால் தமிழ் அமைப்புற்ற வரலாறு என்னும் நூலை யாத்தனர். சொற் பிறப்பு ஆராய்ச்சி என்ற நூலையும் தன்னந்தனியாக எழுதி வந்தார். சொற்கலை ஆக்கத்திற்கு இவர் செய்த அரிய தொண்டுகளை வியந்து பெரியோர், 'சொற்கலைப் புலவர்' என்று பட்டமளித்தனர். வரலாற்றுத் துறையில் யாழ்ப்பாண வைபவ விமர்சனம், யாழ்ப்பாண அரசர்கள் என்ற இரு நூல்களை எழுதி வெளி யிட்டனர். இவர் எழுதிய ஆங்கில தமிழ் அகராதி ஒன்று இன்னும் அச்சில் வெளிவரவில்லை.

மேனாட்டுக் கலைகளைத் தமிழில் அறிவுறுத்தி விஞ்ஞானத்தினையும் செந்தமிழாய்த்தய்க்க உதவியவர் உயர்திரு விபுலானந்த அடிகள். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக நான்கு ஆண்டுகள் கடமை பார்த்து வந்தார். அன்னார் இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியாராக வரமுன் தில்லையின் எல்லையிலுள்ள பல்கலைக் கழகத்து முதல் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து

தமிழ் மொழிக்குப் புத்துயிர் கொடுத்தார். இவர் 1892ம் ஆண்டில் ஈழநாட்டிலேயுள்ள மட்டக்களப்புப் பகுதியில் காரை தீவு என்னும் ஊரிற் பிறந்தார். மயில்வாகனம் என்பது இவருடைய பிள்ளைப் பெயர். துறவு பூண்டபின் 1924ம் ஆண்டிலிருந்து சுவாமி விபுலானந்தர் எனப் பெயர் பெற்றார். வடமொழி, தென்மொழி, ஆங்கில மொழி ஆகிய மூன்று மொழிகளிலும் ஆன்ற புலமை உடையவர். எண்ணூல் பூதநூல் வேதிநூல் முதலியன இவர் கற்று நிறைந்த பகுதிகள்.

செந்தமிழ், தமிழ்ப் பொழில் முதலிய திங்கள் வெளியீடுகளில் தமிழைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வரைந்துள்ளார். மகாமகோபாத்தியாய பண்டித மணி கதிரேசன் செட்டியார் அவர்கள் மணிவிழா மலரில் ஆங்கில வாணி என்ற தலைப்பில் ஆங்கில நாட்டின் கலைச் செல்வத்தை விளக்கிக் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். மாயாவதி ஆச்சிரமத்தில் தங்கியிருந்த போது பிரபுத்த பாரதம் என்னும் திங்கள் வெளியீட்டின் ஆசிரியப் பதவியை ஏற்றுக்கொண்டு அரிய கட்டுரைகள் எழுதி வந்தார். தமிழரின் தலையாய சங்க இலக்கியங்களைப் பற்றி முதிர்ந்த அறிவுடன் ஆங்கிலத்தில் சிறந்த கட்டுரைகள் எழுதினார். நாடகத் தமிழ் பற்றி இவர் இயற்றிய நூல் மதங்க சூளாமணியென வழங்குகின்றது. ஆங்கில நாடக ஆசிரியர் செகசிற்பியார் வரைந்த நாடக வகையின் நயமும், தசரூபகம் முதலிய சங்கத நூல்களின் நாடக அமைப்பும், நாடகத் தமிழின் இயல்பும் இந்நூலில் தெளிவுறக் கூறப்பட்டுள்ளன.

பன்னெடுங் காலமாகத் தமிழிசையையும் தமிழ் இசைக் கருவியையும் தமிழ் மக்கள் கையாண்டிருந்தனர் என்பதை இவர் தாம் இயற்றிய யாழ் நூலில் பல சான்றுகள் கொண்டு நிறுவியுள்ளார். வடிவு கூடத் தெரியாதபடி மறைந்த பண்டைய யாழின் நுட்பங்களையெல்லாம் உலகறிய வைத்தது இவர் செய்த தொண்டாகும். இசைத் தமிழிற்குப்

புத்தம் புதிய இலக்கணம் அமைத்து அதனை விஞ்ஞான முறையில் எடுத்துக் காட்டிய விபுலானந்த அடிகளுக்குத் தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டிலே கவிக்குயிலாகத் திகழ்ந்தவர் நாவலியூர்ச் சோமசுந்தரப் புலவர். செந்தமிழ்த்தாயைத் தெய்வக்கோலத்திற் கண்டு உள்ளம் உருகிப் பாடிய பெருமை இப்புலவருக்கு உரியதென அறிஞர் கொள்வர். இவர் பாடிய ஆடிப்பிறப்பும் கத்தரித்தோட்ட வெருளியும் பிறர் பாடாத புதிய ஆக்கங்கள். இலங்கை வளமும் தால விலாசமும் என்றும் நிலைக்கக்கூடிய இலக்கியங்கள். யாழ்ப்பாணத்துக் கற்பக தருவாகிய பனையைப்பற்றி அழகுபெறப் பாடிய புலவர் இவரே. முருகன்மீது உள்ள அன்பினால் நல்லை முருகன் திருப்புகழ், கதிர்காம வேலர் பதிகம் முதலிய பல பிரபந்தங்களைப் பாடினர். இவருக்கிருந்த சைவ சித்தாந்த அறிவை இவர் இயற்றிய உயிரிளங்குமரன் நாடகம் நன்கு புலப்படுத்தும். நாமகள் புகழ்மாலை செந்தமிழ்த் தாயைத் தேடிக் கூவி, உள்ளம் குழைந்து பாடிய நூல். குழந்தை உள்ளத்துடன் எழுதப்பட்டது சிறுவர் செந்தமிழ். பதினைந்தாம் வயதிலே பாடத்தொடங்கிய இப்புலவர் பதினையாயிரம் பாக்கள்வரை பாடியுள்ளார்.

இவர் இயற்றிய நூல்களுள் இப்பொழுது அச்சிடப்பட்டவை உயிரிளங்குமரன் நாடகம், கந்தவனக்கடவை, நான்மணிமாலை, கந்தபுராண நுண்பொருள் விளக்கம், நல்லை முருகன் திருப்புகழ், நல்லையந்தாதி, சுகாதாரக்கும்மி, மருதடி விநாயகர் பாமாலை, கந்தவனநாதர் திருப்பள்ளியெழுச்சி, கல்லுண்டாய் வைரவர் பதிகம், கதிரைமலை வேலவர் பதிகம், செந்தமிழ்ச் செல்வி ஆற்றுப்படை, சிறுவர் செந்தமிழ், நாமகள் புகழ்மாலை, இலங்கை வளம், தாலவிலாசம் முதலியன.

பேச்சு வழக்கில் வழங்கும் தமிழை எழுத்தில் பொறித்து முதன்முதல் நாடகநூல்களை இயற்றியவர்

யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையைச் சேர்ந்த பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களே. யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குத் தமிழில் இவர் எழுதிய உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை என்னும் நான்கு நாடகங்கள் நானாடகம் என்னும் பெயருடனும், பொருளோ பொருள், தவறான எண்ணம் என்னும் இருநாடகங்கள் இருநாடகம் என்னும் பெயருடனும் வெளிவந்துள்ளன. இந்நாடகங்கள் இலங்கைப் பல்கலைக் கழக நாடக அரங்கிலும் வேறு இடங்களிலும் நடிக்கப்பட்டு புகழ் பெற்றுள்ளன. இவற்றைப் பின்பற்றியே பல நாடக ஆசிரியர்கள் பேச்சுத்தமிழில் நாடகங்கள் இயற்றினர். இவர் இயற்றிய காதலியாற்றுப்படை புதிய முறையில் எழுதப்பட்ட நூலென்று கற்றோர் போற்றுவர். தமிழிலுள்ள மற்றும் ஆற்றுப்படை நூல்களுக்கு இது சற்றேனும் இளைத்ததில்லை.

மாணிக்கமாலை என்னும் நாடக நூலும், பூஞ்சோலை எனப் பெயரிய உரைநடை நூலும் இவர் இயற்றியவை. சங்கிலி, வாழ்க்கையின் விநோதங்கள் முதலிய நூல்கள் இன்னும் அச்சில் வரவில்லை. இவர் தமது சாசன அறிவையும் மொழிநூலறிவையும் பயன்படுத்தி ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ்ச் சாசனங்களின் இலக்கணத்தை ஆராய்ந்து அரிய நூலொன்று எழுதியுள்ளார். இத்துறையில் வழிகாட்டிய பெருமையும் இவருக்கேயுரியது. இவ்வாராய்ச்சி நூலைப் பின்பற்றியே பிற திராவிட மொழிச் சாசனங்களை ஆராய்ந்தவரும் இவரது முடிபுகளை மேற்கோளாகக் கொண்டு நூல்களை வெளியிட்டனர்.

இவ்வாறு தமிழ் மொழி முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியார் தமிழ் நாட்டவருக்கு வழிகாட்டினர். தமிழ்நாடு தமிழின் உயர்வினை மறந்த காலங்களில் அதனை நினைவூட்ட ஈழத்திலிருந்தே அறிஞர் தோன்றினர். வருங்காலத்திலும் பல துறைகளில் ஈழத்துத் தமிழர் வழிகாட்டுவர் எனத் தமிழ் நாடு எதிர்பார்க்கும்.

6

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை

சங்ககாலத்துக்குப் பின் ஏற்பட்ட களப்பாளர் குழப்பத்தால் பழைய தமிழ்க் கவிமரபு தடைப்பட்டு ஆதரிப்பாரில்லாது தமிழ் மொழி வளர்ச்சி குன்றியது போலவே, சோழ பாண்டியரின் குலங்கள் அழிவுற்ற பதினைந்தாம் நூற்றாண்டு தொடக்கம் தமிழ் மொழியின் வேகமும் ஆற்றலும் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கின. இந்நிலையிலே தமிழ் மொழிக்கு இனி மீட்சியில்லை என்று பலர் கருதினர். இவ்வாறு, கட்டுக்கிடையாக, உய்ய வழியின்றி, பேணி வளர்க்கத் தகுந்தோரில்லா திருந்த தமிழ் மொழியை விடுதலை செய்து, வளம்படுத்தி, அதனை மீண்டும் ஆற்றலுடனும் பொலிவுடனும் விளங்கச் செய்யத் தோன்றினர் சுப்பிரமணிய பாரதியார்; தமிழ் நாட்டில் மக்கள் கவிஞர் பரம்பரையையும் தொடக்கி வைத்தார்.

பாரதிகாலத்திற்குமுன் பல நூற்றாண்டுகளாக மக்கள் கவிஞர் இருக்கவில்லை. பல கவிஞர் வாழ்ந்தனர் என்பது உண்மையே; அதுவும் அளவுக்கு மிஞ்சியே இருந்தார்கள். ஆனால், அவர்கள் பாடியவை கடவுளரைக் குறித்த தோத்திரங்களும், பிரபந்தங்களும், புராணங்களுமே. அந்நூல்களில் இலக்கியச் சுவையோ கவியாற்றலோ கிடையாது; ஆழ்ந்த கருத்துக்களும் இல்லை. மேலும் பலர் தாமோ பிறரோ கூறியவற்றையே திரும்பத் திரும்பச் சொன்னார்கள். புராண நூல்களில் பலவகைப் புனைந்துரைகளும் பொய்வரலாறுகளும் இடம் பெற்றன. பொய்யின் பேரெல்லையை இந்நூல்களிற்

காணலாம். இவை தோன்றியதன் பயனாக மக்களிடையே யிருந்த கடவுட்பற்று, தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று முதலியன அழிந்தன.

இங்ஙனம் பாரதிகாலத்திற்கு முன் இருந்த புலவர்கள் மக்களுக்காக, மக்களைப்பற்றி, மக்களிடையே வழங்கும் மொழியில் கவிதை இயற்றவில்லை. மக்கள் உள்ளத்திற் செறிந்த கருத்துக்களை, அவர்கள் மனத்தில் குமுறும் சீரிய எண்ணத்துடிப்புக்களை எடுத்தியம்பக் கவிஞர் முயலவில்லை. இதனால் அக்காலப் புலவர் தாம் கண்டதையோ, அனுபவ வாயிலாகப் பார்த்ததையோ எழுதவில்லை. அவர்களுக்கே தாம் பாடுகின்ற பொருளைப்பற்றி ஒன்றும் தெரியாது. இவற்றின் பயனாகப் புலவர் மக்களை விட்டு வேறோர் உலகில் உலவி வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சமயமே அறிவு விஷயங்களில் முதலிடம் பெற்றிருந்தது. நாடெங்கும் சமயப் போர்கள் நிகழ்ந்த வண்ணமிருந்தன; இறைவன் இயல்பும் உயிர்களின் இயல்பும் புலவர்களால் அவர்கள் இயற்றிய நூல்களில் ஆராய்ந்து கூறப்பட்டன. இவ்வாறு கவிதை உலகிற் சமயம் கொடுங்கோலாட்சி செய்துகொண்டிருந்த காலத்திலே தோன்றினார் சுப்பிரமணிய பாரதியார். புரட்சி முளைத்துக்கொண்டிருந்த காலம் அது. சமுதாயம் பழைய முறையில் புதிய அமைப்பு முறை நுழைவதைப் பார்த்துக்கொண்டிருந்தது. பழம் உலகிற்கும் புது உலகிற்கு மிடையே நடக்க இருந்த போராட்டத்தில் தானும் ஒரு வீரனாகப் பங்குகொள்ள முன்வந்தார் பாரதியார்.

இந்நிலையில் தமிழ் நாட்டில் தேசிய இயக்கம் தோன்றியது. சமுதாய உணர்ச்சியும் தேசபக்தியும் எங்கும் பரவின. தமிழ் மக்கள் தங்கள் பண்டைக்கால நாகரிகத்தின் சிறப்பினையும் கலைகளின் வளத்தினையும் அறியத் தொடங்கினர். இதன் விளைவாக அவர்களிடையே நாட்டன்பும் சுதந்திர உணர்ச்சியும் உறுதிபெற்றன. அரசியல் துறையில் முற்றான சுதந்

திரம் அடையவேண்டும் என்ற விருப்பம் குடிகொண்டது. இத்தகைய புத்துணர்ச்சிகளை வளர்த்துத் தொண்டாற்றும் பணியில் ஈடுபடுவதற்கு வெளிவந்தார் பாரதியார்; மக்கள் கவிஞராக விளங்கினர். இவரைப் பின்பற்றிப் பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை ஆகியோரும் இருபதாம் நூற்றாண்டில் மக்கள் கவிஞராகத் திகழ்ந்தனர்.

பொதுமக்கள் உள்ளத்தில் தம்முடைய கருத்துக்கள் விரைவில் அமையவேண்டுமென்பதே இக்கவிஞர்களின் நோக்கம். ஆகவே இவர்கள் பொதுமக்கள் பேசும் இயற்கையான சொற்களையே தமது கவிகளுக்குச் சொற்களாக மேற்கொண்டனர். இதனால் இவருடைய பாக்கள் எளிய நடையில் பாடப்பட்டன. அகராதி நிகண்டுகளிலிருந்து பொதுமக்களுக்கு விளங்காத சொற்களைப் பொறுக்கியெடுத்து, மோனை எதுகை முதலிய அணிவகுத்து, நாலுபக்கமும் வேலியடைத்து, எட்டாத அளவுக்கு எழுப்புச்சுவர் எழுப்பிப் பாடிய புலவர் மரபுக்குத் துணிந்து முற்றுப்புள்ளியிட்டார் சுப்பிரமணிய பாரதியார். பழகுந்தமிழில் மக்களின் இயற்கைக் குணங்களை யும் உள்ள நிலையையும் ஒட்டிப்பாடுவதே தமிழ்க்கவிதை என்று வழிகாட்டி நின்றார்.

பாரதியைப் பின்பற்றிப் பாரதிதாசன் உணர்ச்சி ததும்பும் கவிதைகளை எளிய சொற்களில் அமைத்துப் பாடினர். இவருடைய பாடல்களைப் படிக்க இலக்கணம் தேவையில்லை; இலக்கியம் படித்திருக்கவேண்டும் என்ற விதி இல்லை; நிகண்டு தேவையில்லை; பேராசிரியர் உதவி வேண்டியதில்லை. பாரதிதாசனைப்போலவே தேசிக விநாயகம் பிள்ளையும் மக்களுக்காக, மக்களைப்பற்றி, அவரிடையே வழங்கும் மொழியில் கவிதை இயற்றினர். பாடலுக்கு அழகு படித்தவுடன் விளங்காதிருத்தல் என்றும், புலமைக்கு அறிகுறி பாடலைக்கண்டு பிறர் அஞ்ச வேண்டியதென்றும் அவர் கருதவில்லை. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை தமிழன் உள்ளத்தை நன்றாக உணர்ந்

தவர். பொதுமக்களும் படித்து விளங்கிக்கொள்ளும் நிலையில் எளிய இனிய தமிழ் நடையில் அமைந்திருக்கின்றன, அவர் பாக்கள்.

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடீ.
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா
உன்மத்த மாகுதடீ.

என்ற பாரதியார் பாடலும்,

தமிழரின் சிர்தனைக் குறைத்துத்
தனியொரு சொல் சொன்னாலும்
பார்ப்பான் தன்னை
உமிழ்ந்திடுக மானத்தை
ஒருசிறிது மிழக்காதிர்.

என்ற பாரதிதாசன் பாட்டும்,

கூவிப் பறக்குமொரு—கிளியினைக்
கூட்டில் அடைத்து வைத்தால்
தேவர் உலகமெல்லாம்—அது சினத்
தீயை எழுப் பிடுமே.

என்ற தேசிக விநாயகம் பிள்ளை பாட்டும்,

நாதமெனும் பிரமத்தைப் பணிவோம்; ஆனால்
நாமறியா மொழியில் நமக்கேது நாதம்
கீதமென்று புரியாத பாட்டைக் கேட்டுக்
கிளர்ச்சிபெறு உணர்ச்சியிலே கீதம் ஏது.

என்ற நாமக்கல் கவிஞர் பாட்டும் இக்கவிஞர்கள் கையாண்ட எளிய நடைக்குச் சான்று பகரும்.

கடவுளர்க்குப் பாமாலைப் பதிகங்கள் பாடுவதோடு மட்டும் நின்று விட்டாற் போதாது; மண்ணாளும் அரசர்க்குப் புகழ் மாலை சூட்டுவது உண்மைக் கவிதையல்ல; எப்பொழுதும் வானையும் மலரையும், காலைக் கதிரவனையும், மாலைச் செவ்வானத்தின் நிறத்தினையும், அதன் ஒளியினையும், அந்த ஒளியிற் காயும் பெண்ணையும், அப்பெண்ணின் துகிலையும்,

அத்துகிலுட் காணும் உடலினையும், அவ்வுடலின் வனப்பை யும், உடலுக்குள் ஆடும் உள்ளத்தையும், அதன் நினைப்டையும் பற்றியே கவிவாணர் கவி புனைந்துகொண்டிருக்க வேண்டு மென்பது தவறு என்ற உண்மைகளை உலகறிய எடுத்துக் காட்டினார்கள் இப்புலவர்கள். மாடத்தின் முற்றத்திலே, நிலா வொளியிலே, காதல் உரையாடிக்கொண்டிருக்கும் தலைவ னும், அவன் காதற்குரிய தலைவியுமே கவிதைப் பாத்திரங் களாக அமைந்தாற் போதாது; அதே மாடியின்கீழ், தெரு வோரத் திண்ணையிலே, நாள் எல்லாம் ஆண்டியாய் அலைந்து திரிந்து, அரைச்சாண் வயிற்றை நிரப்ப வழியில்லாது, உடல் தளர்ந்து, உள்ளம் கொதித்துக்கொண்டிருக்கும் ஏழையும், அவனுடைய பரிதாபமான நிலையும், ஏக்கமும், அவனிடத் துச் சமூகம் காட்டும் கொடுமையும் கவிதைப் பொருளாக அமைய வேண்டுமென்பதை இவர்கள் தங்கள் கவிதைகள் மூலம் காட்டியுள்ளார்கள்.

சமுதாயச் சூழ்நிலைக்குக்கவிஞன் தனது உள்ளத்தையும் உணர்ச்சியையும் பறிகொடாதிருக்கமுடியாது. சமுதாயம் இருண்ட வீட்டில் முட்டிக்கொண்டிருக்கும். சமுதாயத்தில் கொடுமைகள் செறிந்திருக்கும். சமுதாயம் முயற்சி செய் யாது பிணம் போல உறங்கிக்கிடக்கும். இந்நிலையில் சமுதா யத்தை உறக்கத்திலிருந்து எழுப்ப வேண்டிய கடமை கவிஞனுக்குரியது. கவிஞனின் உள்ளமும் உணர்ச்சியும் சமுதாயச் சூழ்நிலைகளால் மாறுதல் அடைந்தே தீரும். அம்மாறுதலுக்கு ஏற்ற முறையில் கவிஞன் உள்ளத்தி லிருந்து கவிகள் பிறக்கும். இஃது இருபதாம் நூற்றாண்டுப் புலவர்க்கு முற்றாகப் பொருந்தும்.

இமயம் சென்றவன், வங்கம் சென்றவன், யவனம் சென்றவன் என்றெல்லாம் புகழப்பட்ட தமிழன், ஆண்மை குன்றி ஆண்டியாகிவிட்டான்; மடமையில் மூழ்கிக் கிடக் கின்றான். பிறநாடுகளுக்கு உணவு ஏற்றுமதி செய்த தமிழ னுக்கு உண்பதற்கு உணவில்லை; வாழ்வினிற் சுகமில்லை;

சிலர் சுரண்டுகிறார்கள்; பலர் சுரண்டப்படுகின்றார்கள். ஈழத்தில், இமயத்தில், கடாரத்தில் வெற்றிக்கொடி நாட்டிய தமிழர்மீது அன்னியர் ஏறிச் சவாரி செய்கின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பான்மையுடன் வாழ்ந்த தமிழனைச் சாதி, சமயம், உயர்வு, தாழ்வு, மூடப் பழக்க வழக்கங்கள் என்று பல இன்னல்கள் வாட்டுகின்றன. நாயும் வாழ நாணும் சேரியிலே, ஓட்டைக் குடிசையிலே, உடுக்க உடையும் உண்ண உணவுமின்றி, உணர்விழந்து, மெய்தளர்ந்து, பொருளும் நல்வாழ்வும் யாதென அறியாது, வறுமையின் மறுகாட்சியாய், நோயின் இருப்பிடமாய் எங்கிக் கிடக்கும் தமிழனை உயர்த்த வேண்டுமென இக் கவிஞர் உள்ளங்கள் துடிக்கின்றன.

மக்களுக்கிடையே சாதி வேற்றுமை யாது? யாவரும் ஒரே குலத்தவரே; உயர்ந்த சாதியென்றும் தாழ்ந்த சாதி யென்றும் வேறுபாடில்லையெனப் பதறுகின்றார், புதுமைக் கவி பாரதியார்:

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர் விலை.
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

என்றும்,

ஜாதி மதங்களைப் பாரோம் உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே

என்றும் அவர் கூறுகின்றார். சாதலினால் உயர்வு தாழ்வு கற்பித்து, உண்டு கொழுத்து, உறங்கித் திரியும் கூட்டத்தை யும், அவர்களுக்கு உழைத்துப் போட்டு உடம்பு இளைத்து, எலும்பும் தோலுமாகக் காட்சியளித்துப் பிணம் போலக் கிடக்கும் மற்றக் கூட்டத்தையும் கண்ட பாரதிதாசன் பொறுக்கமுடியாது,

கொலை வாளினை எடடா
மிகுகொடியோர் செயலறவே
குகை வாழ் ஒரு புலியே
உயர் குண மேவிய தமிழா

எனக் கொடுமை அகற்றுவதற்கு வாளேந்திப் போர் புரியத் தமிழருக்கு அறிவுறுத்துகின்றார். "பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை-இந்தப் பிழை நீங்குவதே உயிர் உள்ளாரின் கடமை" என்று வேறோரிடத்தில் இயம்புகின்றார்.

தேசிக விநாயகம் பிள்ளை மக்கள் மக்களுக்கு இழைக்கும் இன்னல்களை எடுத்துக்கூறுவதோடு நின்றுவிடவில்லை. குதிரையின் புலம்பல் என்னும் பாட்டில் மக்களுக்கு ஏவல் செய்யும் உயிர்களுக்கு மக்கள் தாம் அறியாதே செய்கின்ற கொடுமைகளை எடுத்துக்காட்டிக் கல்நெஞ்சையும் கரைத்து இரக்க உணர்ச்சியை எழுப்பி விடுகின்றார். கிடைத்த உணவைப் பிறருக்கும் கொடுத்து உண்ணவேண்டுமென்பதை "அப்பம் திருடின எலி" என்னும் பாட்டில் புலப்படுத்திக் காட்டுகின்றார்.

மேலும் தமிழர் வேறெந்தச் சாதியினர்க்கும் தாழ்ந்தவர் அல்லர் என்று அழுத்தமாகப் பாடித் தமிழர் இனத்திற்குஅளவிடற்கரிய சிறப்பினை அளித்துள்ளார்கள் இருபதாம் நூற்றாண்டுப் புலவர். தமிழர் என்னும் உணர்ச்சி தமிழ்நாடெங்கும் குன்றிவிட்டது, தமிழர் சீர் குலைந்துவிட்டனர்; தமிழரைக் கவிஞர் தட்டி எழுப்புகின்றார்கள். தமிழர் வீழ்ச்சியுற்ற காரணத்தையும், அவ்வீழ்ச்சி இன்று மீட்சி பெறும் அவசியத்தையும், வழியையும், உயர்ந்த நோக்கம் வாய்ந்த கவிகளால் எடுத்தோதுகின்றனர். பாரதியார் தமிழரின் கலைவளத்தின் சிறப்புக்களையும் வரலாற்றின் மாண்பினையும் 'செந்தமிழ் நாடு' என்னும் பாட்டில் அமைத்துப் பாடியிருக்கின்றார். "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என உணர்ச்சி ததும்பப் பாடுகின்றார்:

சிங்களம் புட்பகம் சாவக மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி-அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியு நின்று
சால் புறக் கண்டவர் தாய்நாடு

எனச் சிறப்புப் பெற்ற நாட்டிலே வாழும் தமிழருடைய பழம் புகழையும் இக்கால நிலையையும் எண்ணி, நாட்டன்பு கொண்டு, "எந்தையும் தாயும்" "மன்னுமிமயமலை" "நளிர் மணி நீரும் நயம்படு கனிகளும்" என்ற முதலடிகளையுடைய பாக்களைப் பாடியிருக்கின்றார். பாரத வீரர் நலிந்த நன்னாடு, நல்லனயாவும் நாடுறு நாடு, பூரண ஞானம் பொலிந்த நன்னாடு இன்று சீர் கெட்ட நிலையில் இருப்பதை எண்ணி யெண்ணி நெஞ்சு நோகின்றார் பாரதி. இந்த நிலைகெட்ட மனிதர்,

அஞ்சி யஞ்சிச் சாவார் இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்கள் என்பார் இந்த
மரத்தி லென்பார்; அந்தக் குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டிலென்பார் மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்

என்று வருந்துகின்றார் அவர்.

இதே பொருள் பற்றிப் பாரதிதாசன் பாடிய பாக்கள் உணர்ச்சியின் ஆழத்திற் பிறந்து, கற்பனையில் இன்பமாய் விழிக்கின்றன. "தெள்ளு தமிழில் இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத் தின்னும் தமிழ் மறவர் யாம்" "புலி ஆளப் பிறந்தவன் தமிழன்" "நமை வென்ற நாட்டினர் இல்லை இதை நாற்றிசை முற்றும் முழக்கு" என்பன இவர் கூற்றுக் கள். "வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம், அன்னார் உள்ளத்தால் ஒருவரே, மற்று உடலாற் பலராய்க் காண்பார்", "பொங்கு தமிழர்க்கு இன்னல்

விளைத்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு''
போன்ற வீர உரைகளை வழங்கியுள்ளார்.

''தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள்
தமிழினும் வெறெங்கும் யாங்கண்டதில்லை''
''தமிழென்று தோள் தட்டி ஆடு நல்ல
தமிழ் வெல்க வெல்கஎன்றே தினம் பாடு''

''தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்''
''உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே''
என வரும் அடிகள் தமிழ் உணர்ச்சி ஊட்டுவன.

தாயின் மேல் ஆணை! தந்தை மேல் ஆணை
தமிழக மேல் ஆணை!
தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே

பாரதிதாசன் பின்வருமாறு உரைக்கின்றார்:

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை, என்
தாய் தடுத் தாலும் விடேன்
எமை நத்துவாயென எதிரிகள் கோடி
இட்டழைத்தாலும் தொடேன்.

மேலும்,

நாயினும் கீழாய்ச் செந்தமிழ்நாட்டார்
நலிவதை நான் கண்டும்
ஓய்தல் இன்றி அவர் நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்

என்னும் மொழிகள் தமிழரின் உள்ளத்தில் ஏறுமற்
போகுமா?

பெண்கள் விடுதலைக்கும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் உரியவகையில் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் பல அமைந்துள்ளன. பெண்களுக்கு நல்ல கல்விபுகட்ட வேண்டும்; விவரம் தெரிந்து மணஞ் செய்யவேண்டும் பிடிக்காவிட்டால் மணத்தினைத் தள்ளிக்கொள்ளப் பெண்ணுக்கும் உரிமை உண்டு; கணவனை இழந்த பெண் மீண்டும் மணஞ்செய்தலைத் தடுத்தல் கூடாது; பயத்தாலும் பொறுமை

யாலும் வேறு ஆண்களுடன் பெண்கள் பேசக் கூடாது என்கின்றனர்; அந்தச் சந்தேகம் ஒழிய வேண்டும். இத்தகைய உரிமைகளை எல்லாம் பெண்களுக்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார் பாரதியார்.

உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக் குயிரா யின்ப மாகிடும்
உயிரினு மிந்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள் ஆடுகளி கொண்டே

என்று பெண்ணைப் பாராட்டுகின்றார்.

எட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ
மென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்

என்பது பாரதி பாடிய பெண்கள் விடுதலைக்கும்மியில் ஒன்று.

கஞ்சியையும் பறித்துக் காதலையும் பறித்துவிட்டாரே ஆடவர் எனக் கலங்குகின்றார் பாரதிதாசன். ஆடை அணி வகைகள் அணிவதும், ஆசைக்கு வாசமலர் தேடுவதும், ஆடவர்க்குப் பணி செய்து இருப்பதும், அவர்களுக்கு அஞ்சுவதும், ஆமைபோற் கெஞ்சுவதுமாகக்கிடக்கும் மகளிர் குலம் மானிடர் கூட்டத்தில் வலியற்ற ஒரு பகுதி என இரங்குகின்றார் கவிஞர். "மாதர் தம் உரிமை மறப்பது மாண்பா, மாதர் தம் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா, ஆராய்ந்து பார்" என முழங்குகின்றார். அரிவையர் அறிவுளர் என்பதை,

அரிவையர் கூட்டமெல்லாம்
அறிவிலாக் கூட்டமென்பாய்
புரிவரோ விசயராணி புரிந்த இச்
செயல்கள் மற்றோர்

என்று 'வீரத்தாய்' எனும் பாட்டிற் கூறுகின்றார். கல்வி பயிலாத பெண் பெரிய இடும்பை என்பதை இருண்ட

வீட்டிலும் கல்வியுடையவள் பேரின்பம் அளிப்பாளென்பதைக் 'குடும்ப விளக்கிலும்' சுவையுற எடுத்தியம்புகின்றார். காதலில் ஆடவருக்கும் பெண்களுக்கும் வேற்றுமை கொள்கின்றனர்; மனைவியை இழந்த வயது முதிர்ந்த ஆடவன் மீண்டும் மணம் செய்துகொள்கின்றான்; பெண்கள் மாத்திரம் கணவன் இறந்தால் மறு மணம் செய்தல் தீது என்பார்கள். இதனை ஒரு செய்யுளில்,

> ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
> அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
> பேடகன்ற அன்றிலைப் போல் மனைவி செத்தால்
> பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்
> வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
> மணவாளன் இறந்தால் பின்மணத்தல் தீதோ
> பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
> பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ

என்று அழகாக மொழிகின்றார்.

பெண்கள் படுந்தொல்லைகள், மாமியார் ஆட்சியால் மருமக்கள் அனுபவிக்குந்துன்பங்கள் முதலியவற்றை நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மாண்மியம் என்னும் நூலில் விரிவாகச் சித்தரிக்கின்றார் தேசிக விநாயகம்பிள்ளை. மாமி அரசியற் படலத்தில் அவள் கொடுமைகளைக் குறிப்பிடும் பகுதிகளில் ஒன்று பின்வருமாறு:—

> அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்
> நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்
> கொல்ல மிளகைக் குலுக்கி வைப்பாள்
> உப்பில் புளியை உருட்டி வைப்பாள்
> கறிக்குத் தேங்காய் சுருக்கி வைப்பாள்
> கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு வைப்பாள்.

'இம்' என்றால் சிறை வாசம் 'ஏன்' என்றால் வனவாசம் என்னுங் கொடுங்கோலாட்சி புகையாகி, ஏழைத் தொழிலாள

ருக்கு மீட்சி ஏற்பட்டுப் பொதுவுடமைச் செங்கொடி உயர்ந்தது, உருசியாவில். இப்பொதுவுடமைக் கொள்கை இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளிற் பரந்திருப்பதைக் காணலாம்.

"முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது வுடமை"
"தனியொருவனுக்குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"
"எல்லாரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்
எல்லாரு மிந்நாட்டு மன்னர்"

என இவ்வாறு பொதுவுடமையைப் பாராட்டிக் கூறுகின்றார் பாரதியார்.

பாரதியைப் பின்பற்றிப் பாரதிதாசனும் பொது உடமை நிலவும் புத்துலகைப் பற்றிக் கவிபாடிப் புரட்சிக் கவியாக விளங்கினார்.

"ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்
உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்"
"ஏழை முதலாளியென்ப தில்லாமற்செய்"
"வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்"
"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"
"பொதுவுடைமைக் கொள்கை திசை
யெட்டும் சேர்ப்போம்"

என்பன போன்ற அடிகளில் இக்கொள்கைகள் பொதிந்திருப்பதைக் காணலாம்.

இதுவரை கூறியவற்றிலிருந்து இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் தமிழுக்குப் புத்தொளி அளித்துள்ளன என்பது புலனாகின்றது. இக்கவிதைகளைப் பற்றிச்சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது இவற்றின் எளிய நடையே. உழவு சால் ஓட்டும் சாதாரண உழவனுக்கு இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்

பாட்டுப் பாடினர்; தொட்டிலாட்டும் தாய்மார்க்கும், விளையாட்டு வெளிகளிலே ஓடிவிளையாடும் குழந்தைகளுக்கும் கவிதை இசைத்தார்கள். இவர்கள் ஆற்றிய தொண்டினால் படித்துப் பட்டம் பெற்றவர் தான் கவிதைகளைப் படித்துச் சுவைக்கமுடியும் என்ற எண்ணம் காற்றினிலே மறைந்து விட்டது. இவர்களுடைய கவிதையின் எளிமையையும் இனிமையையும் கண்ட பொது மக்களும் கவிதைச் சுவையைப் பருகத் தொடங்கிவிட்டனர். மேலும் இவர்கள் கவிதைகளில் நாம் புதிய உண்மைகளை, புதிய ஒளி வெள்ளத்தினை, புதிய வாழ்க்கை அமைப்பினைக் காண்கின்றோம். தமிழ்மொழி இப்புலவர் கையில் உணர்ச்சிக் கடலை அளக்கும் அளவு கோலாக மாறியது. மக்கள் உள்ளத்தில் உறையும் எண்ணத் துடிப்புக்களையும் சமூகத்தில் பரவியுள்ள மூடப் பழக்க வழக்கங்களையும் எடுத்து விளக்குவன இவரின் கவிதைகள். சுருங்கக்கூறின், மக்களுக்கு, மக்களைப்பற்றி, மக்களிடையே வழங்கும் மொழியில் இயற்றப்பட்ட கவிதைகள் இருபதாம் நூற்றாண்டுக்கவிதைகள் எனக் கூறுதல் மிகையாகாது.

பொதுவாக நோக்குமிடத்துத் தமிழ் இலக்கிய உலகிற்குப் பாரதியார் ஒரு புதிய ஒளியையும், ஆற்றலையும், இக்காலச்சுவையையும் திரட்டி அளித்துள்ளார்; மக்கள் கவிஞர் பரம்பரையையும் தொடக்கிவைத்தார். தேசிய இயக்கத்தின் பயனாக ஏற்பட்ட புதிய பண்பாட்டுப் போக்கையும் எண்ணக் கருத்துக்களையும் அழகுறக் கலந்து, தமிழ்த் தாயைப் பாமாலைகள் சூடிப் போற்றினார். ஆனால் பாரதி தேசியக் கவிஞர் மட்டும் அல்லர். அவர் தேசியக் கவிகள் பாடுவதுடன் மட்டும் நின்றிருந்தால் அவருக்கு என்றுமழியாப் புகழ் நேர்ந்திராது. அவர் இயற்றிய பாஞ்சாலி சபதம், குயிற் பாட்டு, கண்ணன் பாட்டு முதலியவை தமிழ் மொழி உள்ளவரை நிலைத்திருக்கும். பாஞ்சாலி சபதம் காவிய உருவமாகப் பாரதி இயற்றிய நூல். துரியோதனன் முதலான கௌரவர் பாண்டவரை வஞ்சகமாகச் சூதுக்

கிழுத்து அவர்களை அவமானப்படுத்திய பகுதியை, எளிய நடையில் கவிதைச் சுவையுடனும், நாடகச் சுவையுடனும் புதிய கருத்துக்களுடனும் பாரதி எழுதிய சிறந்த காவியம் இது. இதனை ஓர் எரிமலையென்றும், தமிழர் பண்பாடு நோக்கு இழந்து நெறிதவறிக் கால் தள்ளாடிவிட்டதே என்ற கொதிப்பால் பிறந்த காவியம் என்றும் அறிஞர் கொள்வர்; மிக எளிய சொற்களைக்கொண்டு, பொதுமக்களும் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில், கற்பனை நிறைந்த ஓசை இன்பம் மலிந்த காவியம் இயற்றுவோர்க்கு இந்நூல் வழிகாட்டியாக உள்ளது. பாரதியாரே பாஞ்சாலி சபத முன்னுரையில் பின்வருமாறு கூறுகின்றார்: "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகின்றான்." இந் நோக்கத்தை ஓர் இடத்திலேனும் கைவிடாது பாஞ்சாலி சபதத்தை இயற்றியிருக்கின்றார்.

பாரதி தமது அளவற்ற கற்பனையாற்றலின் துணைகொண்டு, காவிய அமைப்பில் தீட்டிய சிறந்த சித்திரங்களுள் ஒன்று குயிற்பாட்டு. கவிஞர் திடீரென்று தம்மை மறந்து, கற்பனைச் சிறகுகள் பெற்று எழுந்து, இன்பக்கனவுலகெய்தி, நீலக்கடலோரமுள்ள ஒரு மாஞ்சோலையினுட் சென்று, அங்கிருந்த ஒரு குயிலைக் கண்டு, மயங்கிக் காதல்கொண்டு, அதன் பாட்டைக் கேட்டுப் பின் நிகழ்ந்தனவற்றைக் கற்பனைத்திறனுடன் வருணித்திருக்கின்றார். இவர் பாடிய பாக்களுள் மிகச் சிறந்தது இஃதென்பது சிலர் கொள்கை. இவர் பாடிய கண்ணன்பாட்டு இவரின் உணர்ச்சி வேகத்தையும் கற்பனை மேம்பாட்டினையும் நன்கு விளக்குகின்றது. கண்ணனைப் பல நிலைகளிற் படைத்துப் பாடியதுதான் கண்ணன் பாட்டு. இவற்றுள் கண்ணனைக் குழந்தையாகப் படைத்துப் பாடியதே இவருடைய கற்பனையாற்றலின் உச்சநிலையைக் காண்பிக்கின்றது.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை காந்தீயத்தின் பெயரால் கவி என்ற பட்டம் பூண்டவர். இவரிடம் பொதுவான கவித்துவம் இருந்தாலும், பாட்டமைப்பில் திக்கித் திணறு கின்றார். இவருடைய பாக்கள் பொதுமக்களை மகிழ்விக்கும் பண்டாரப் பாக்களெனச் சிலர் கொள்வர். உயர்ந்த கவிப் பண்பினை இவரிடம் அதிகம் காணமுடியாதென்பது அவர் கள் கூற்று.

தேசிக விநாயகம்பிள்ளை, நடை, சந்தம், கற்பனை முதலியவற்றில் பாரதியைப் பின்பற்றியபோதும், இருவருக் குமிடையே வேறுபாடுகளும் உள. பாரதியின் வாழ்க்கை தேசிக விநாயகம்பிள்ளை வாழ்க்கை முறையிலிருந்து அதிகம் வேறுபட்டது. மேலும் இரு கவிஞர்களின் பண்புகளும் மாறுபட்டவை. வேகம், கோபம், ஆத்திரம், இரக்கம், ஆவேசம், பகற் கனவு காணுதல் முதலியன பாரதியிடம் காணப்பட்ட குணங்கள். தேசிக விநாயகம் பிள்ளையிடத்துப் பொறுமை, அடக்கம், அமைதி, இரக்கம், அன்பு முதலியன செறிந்திருந்தன. இவரிடம் இக்குணங்கள் சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம், இவர் பல ஆண்டுகளாகப் பெண்கள் பள்ளிக்கூடத்திற் படிப்பித்தமையே என அறிஞர் கூறுவர்.

இவர்காதலைப்பற்றியோ, கடவுளைப்பற்றியோ, புலியைப் பற்றியோ, குயிலைப்பற்றியோ, சைக்கிளைப்பற்றியோ, எதைப்பற்றிப் பாடினாலும் அதில் உள்ளே பொதிந்திருப் பது இவரின் தூய உள்ளமே. சிறந்த உண்மைகளை எந்தப் பொருளிலும் காண்பர். புல்லை நாம் ஒருபொருளாக மதிப் பதில்லை. ஆனால் அது அவருடன் உரையாடும். அவ்வுரை யைக் கவிமணி புராணமாக விரித்துரைப்பார்.

கல்லின் கதைக ளெல்லாம் இரு
காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சும் அறிவேன் - அதைப்
புராணமாக விரிப்பேன்

என்று பாடுகின்றார். குழந்தை உள்ளம் படைத்தவர் தேசிக விநாயகம் பிள்ளை. இதுபற்றிச் சிறுவருக்கு இவருடைய பாக்களில் அதிக விருப்பமுண்டு. பூவும் புல்லும் இவருடன் பேசுகின்றன. குதிரையும் குருடனும் இவரிடம் தமது குறையைக் கூறிப் புலம்புகின்றன. சிறந்த பெரிய உண்மைகளை இவர் சிறுவர்க்கு எளிதில் எடுத்து இயம்புகின்றார்.

பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவிஞன். "புரட்சி! புரட்சி! புரட்சி! எங்கு நோக்கினும் புரட்சி! எதனிலும் புரட்சி!" என்பதே அவர் போற்றும் மறை. கூர்மழுங்கிப் போயிருக்கும் வாளைக் கூராக்கு என்கிறார்; குள்ள உள்ளத்தைத் தொலை என்கின்றார்; குட்டக்குட்டக் குனியாதே, நிமிர்ந்து நட என்கின்றார்; நேரில் அனுபவத்திலே கண்டறியாதவற்றைப் பாடாதே; கண்டு அனுபவித்ததைப்பற்றி, நாம் வாழும் இவ்வுலகத்தைப்பற்றிப் பாடு என்கின்றார். இக்காரணங்கள் பற்றி இவரைப் புரட்சிக்கவி என்றழைக்கின்றனர்.

இவர் பாடிய **எதிர்பாராத முத்தம், இருண்ட வீடு, குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு** முதலியன விலையேறப் பெற்ற மாணிக்கங்கள். பாரதியின் குயில் பாட்டின் வகையில் எழுதப்பட்ட சஞ்சீவி பர்வதத்தின் சாரல், பாஞ்சாலி சபதத்தையொட்டி எழுதப்பெற்ற புரட்சிக்கவி, வீரத்தாய், காதல், வீரம், கைம்மைத்துயர், தமிழ் நாட்டில் சினிமா முதலிய தலைப்புக்களில் அமைந்த பாடல்கள் போன்றவை உணர்ச்சி ஊட்டுவன. காவியச் சுவையும், கதைச் சுவையும் கலந்த செய்யுள் **பாண்டியன் பரிசு.**

தனித் தமிழ்ச் சொற்களில் தமிழர் இலக்கிய மாண்பு செறிந்திருத்தல் கண்டு மிகுதியான ஆர்வத்துடன் அவற்றை இவர் வழங்குகின்றார். "தமிழராவோர் தனித்தமிழ்ச் சொல்லை அழியாது காக்கும் மரபினரே" என்பது அவர் பாடிய அழகின் சிரிப்பில் ஒரு பகுதி. பாரதிதாசன் தமது உள்ளத்தில் மின்னிப் பறக்கும் உண்மைகளைத் தமிழ் மொழி

யில் ஆவேசத்துடன் அமைத்திருக்கின்றார். இவர் பாரதியின் தாசன் என்றாலும் வெறி கொண்ட மன எழுச்சியைச் சித்திரிப்பதிலும், சொற்களைக் கொட்டும் ஆவேசத்திலும், வாழ்க்கையோடு தொடர்பு உடைய பல உறுப்புக்களையும் குறிக்கோள்களையும் கவிதைப் பொருளாக அமைத்துக் கொள்வதிலும், தமது கருத்து வன்மையிலும் குருவை மிஞ்சி விடுகின்றார்.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரிடையே தனிப்பட்ட பண்புகள் சில காணப்பட்ட போதும், தமிழ் மக்கள் கருத்திற்குத் தக, அவர் தம் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உதவும் வகையில் கவி இயற்றியவர்கள் இவர்களெனக் கொள்ளலாம். பொதுமக்களையும் இலக்கியச் சுவையைக் கவியோடு பருகச் செய்தவர்கள், இருபதாம் நூற்றாண்டுப் புலவர்கள். இவர்களின் தொண்டினால் இலக்கணப் போர்வையை விட்டு வெளியே வர மறுத்த கவிஞர்கள் இன்று வெளிவரவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. கட்டுக்கிடையாக இருந்த தமிழ் மொழி விடுதலை பெற்றுப் பொலிவுடன் உயிர் ஆறாகப் பெருகிப் பாய்கின்றது.

புலவர் அகர வரிசை.

[எண்—பக்க எண்]

அ

அகத்தியனூர் 33, 34, 35, 40, 42.
அகுமது லெப்பை ஆலிம் சாகிபு 79.
அசனலிப்புலவர் 81.
அசனு லெப்பை 75.
அடியார்க்கு நல்லார் 18, 19, 41, 63, 64, 65, 91.
அண்டேசன் 58.
அதிவீரராமபாண்டியன் 22.
அப்துல் கனி சாகிபு 83.
அப்துல் மஜீது, கீழக்கரை 84.
அப்பர் 13, 94.
அம்பலவாண பண்டிதர், தென் கோவை 94.
அமிர்தசாகரர் 18, 43, 53.
அரசகேசரி 91.
அருணகிரிநாதர் 21, 74.
அருணந்தி சிவாச்சாரியார் 19.
அருணசலக் கவிராயர் 26.
அருளம்பலம் 101.
அவிநயர் 42, 49.
அனவரதவிநாயகம் பிள்ளை 31.

ஆ.

ஆடன் 59.
ஆண்டாள் 13, 14.
ஆர்னல்டு 102.
ஆரிபு நாவலர் 71.
ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணம் 28, 55, 59, 87, 94, 95, 96, 97.

இ.

இரட்டையர் 21.
இராசகோபாலாச்சாரியார், சக்கரவர்த்தி 32.
இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் 29, 110, 111, 122.
இராமலிங்கவடிகள் 25.
இராஜமையர் 26, 29.
இலக்கண விளக்க உரை ஆசிரியர் 41, 50.
இளங்கோவடிகள் 63, 64, 65.
இளம்பூரணம் 18, 39, 41, 55.
இறையனூர் 40.

ஈ.

ஈசானதேசிகர் 23, 55.
ஈழத்துப் பூதந்தேவனூர் 89.

உ.

உமறுப் புலவர் 70, 72, 77.
உமாபதி சிவாச்சாரியார் 19.
உரையாசிரியர் 39.

ஐ.

ஐயனரிதனூர் 15, 40, 49.

ஒ.

ஒட்டக்கூத்தர் 17.

க.

கச்சியப்ப சிவாச்சாரியார் 17, 44.
கச்சியப்ப முனிவர் 26.
கடிகை முத்துப்புலவர் 22, 70.

கணபதிப்பிள்ளை, கந்தசாமி, யாழ்ப்பாணத்துப் பருத்தித் துறை 32, 107.
கணேசையர் 93.
கதிரைவேற்பிள்ளை. நா. 28, 100.
கந்தசாமிப் புலவர் 70.
கபீபு முகம்மது ஆலிம் 86.
கம்பன் 17, 31.
கருணைப் பிரகாசர் 23.
கல்கி 31.
கல்லாடனார் 39.
கவிக்களஞ்சியப் புலவர் 72.
கவிசாகரப்பெருந்தேவனார் 44.
கனகசபைப்பிள்ளை 28, 99.
காக்கை பாடினியர் 42.
காசிம் புலவர் 74.
காதிறு கனிப்புலவர் 85.
காரிமாறன் 51.
காரல் 102.
கால்டுவெல் ஐயர் 58
காளமேகம் 20.
காளிதாசன் 91.
காலை அசனலிப்புலவர் 76, 81
கிருஷ்ணபிள்ளை 25.
கிறித்தோபர் பொன்சீன் 103.
கிறீன் 102.
கீழக்கரை செய்யது முகம்மது ஆலிம் 86.
குகப்பிரியை 31.
குஞ்சு மூசப்புலவர் 81.
குணவீரபண்டிதர் 18, 45, 46
குமரகுருபரர் 23.
குமாரசாமி க. நா. 32.
குருவித்துறை முகம்மது கம்சா லெப்பை 84.
குலசேகர ஆழ்வார் 13, 14.
குலாம் காதிறு நாவலர் 26, 71, 73, 86.
கூழங்கைத் தம்பிரான் 91, 93.
கொங்குவேளிர் 64.
கொத்தலகான் புலவர் 78.
கோதைநாயகி, வை. மு. 31.
கோபாலகிருஷ்ண பாரதியார் 26
கௌடிலியர் 35.

ச.

சங்கரநமச்சிவாயர் 23, 46, 47.
சடகோபன் 51.
சடைக்குட்டி 50.
சடையன் 50.
சதாசிவ தேசிகர் 54.
சந்திரகுப்தன் 30
சபாபதி நாவலர் 30.
சம்பந்தப் புலவர் 101.
சம்பந்த முதலியார் 32.
சம்பந்தர் 13, 40, 94.
சரத் சந்திர சட்டர்ஜி 31.
சரவணமுத்துப்புலவர், நல்லூர் 94, 101.
சாகுல் கமீது ஆலிம் 86.
சாமிநாதையர், உ.வே. 30, 99.
சாமு நைனாலெப்பை ஆலிம் 83
சிவசம்புப் புலவர் 28, 101.
சிவஞான சுவாமிகள், திருவாவடுதுறை 54.
சிவஞானமுனிவர் 26

சிவப்பிரகாச சுவாமிகள் 23.
சிவராச பிள்ளை 34, 36.
சிற்றம்பலப்புலவர், மாதகல் 93
சிறுகாக்கை பாடினியர் 42
சின்னத்தம்பிப் புலவர் 28, 92, 93
சீத்தலைச்சாத்தனர் 63, 64, 65
சீனிக்காதிறு முகியித்தீன் 80
சுந்தரர் 13, 94.
சுப்பிரமணிய தீட்சிதர் 22, 54, 55, 56.
சுப்பிரமணிய தேசிகர் 49.
சுப்பிரமணியம், சிதம்பரம் 32.
சுப்பிரமணியம், தி. நா, 31, 32.
சு. வ. வே. ஐயர் 30, 31.
சுத்தானந்தர், சுவாமி 104.
செகராசசேகரன் 90.
செய்கப்துல் காதிர் நயினர் லெப்பை ஆலிம் புலவர் 27.
செய்கு அப்துல் காதிறு நயினர் ஆலிம் 74.
செய்கு அப்துல் காதிறு லெப்பை 82.
செய்கு அப்துல் காதிறு லெப்பை ஆலிம் சாகிபு 77.
செயகு சுலைமானுல் காதிரிய்யி 84.
செய்கு முகம்மது அப்துல் காதிறு செய்னுத்தீன் சாஅன்சா ஆலிம் சாகிபு 84.
செய்கு முகம்மது அப்துல்லா சாகிபு 83.
செய்கு முஸ்தபா 83, 85.
செய்தக்காதிப் புலவர், திருப்பாலைக்குடி 78.
செய்யது அகமது கபீர் 85.
செய்யிதகமது மரைக்காயர் 82
செய்யிது அப்துல் வாரிது ஆலிம் மவ்லானு ஐதருஸ் 83
செய்யிது அப்துல் வஹாபு ஆலிம், நாகூர் 87.
செய்யிது அலிவாலை குருமஸ்தான் 83.
செய்யிது உனபியா சாகிபு 71
செய்யிது மீருப் புலவர் 72.
செய்யிது முகமது ஆலிம் 81
செய்யிது முகம்மது காதிறு 83
செய்யிது முகியித்தீன் கவிராயர் 71.
செயங்கொண்டார் 17.
செல்வக்கேசவராய முதலியார் 30.
செல்வநாயகம் 12.
செவத்த மரைக்காயர், மு 27.
சேக்கிழார் 17.
சேரமான் பெருமாள் நாயனர் 13.
சேனதிராச முதலியார் 93.
சேனவரையர் 18, 19, 39, 54, 55.
சைவநாயன்மார் 13, 17.
சோக்கிரட்டீசு 30.
சோமசுந்தரப் புலவர், நவாலியூர் 104, 106.
சோமசுந்தர பாரதியார் 12

ஞ.

ஞானப்பிரகாசர், சுவாமிகள் 104.

த.

தண்டி 49, 50, 51.
தத்துவபோத சுவாமிகள் 25.
தாகூர் 31.
தாண்டவராய முதலியார் 26.
தாமோதரம் பிள்ளை 27, 97, 98.
தாயுமான சுவாமிகள் 25, 82.
தியாகராச தேசிகர் 54.
திரிகூடராசப்பக் கவிராயர் 26.
திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் 19.
திருக்குருகைப்பெருமாள் கவிராயர் 22, 50.
திருத்தக்கதேவர் 16, 66.
திருப்பாணாழ்வார் 13, 14.
திருமங்கை மன்னன் 13, 14.
திருமழிசையாழ்வார் 13, 14.
திருமூலர் 13.
திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார் 19.
துரைசாமி ஐயங்கார், வடுவூர் 31.
துறைசை அம்பலவாண தேசிகர் 22.
தெய்வச்சிலையார் 39.
தேசிகவிநாயகம் பிள்ளை 29, 110, 111, 113, 114, 118, 122, 123.
தொண்டரடிப்பொடியாழ்வார் 13, 14.
தொல்காப்பியர் 33, 34, 35, 36, 37, 38, 39, 41, 42, 47, 48, 49, 52, 56, 57, 64, 65.

ந.

நக்கீரர் 40.
நச்சினார்க்கினியர் 18, 39, 41, 42, 53, 55, 64, 65.
நம்பியாண்டார் நம்பி 16.
நம்மாழ்வார் 13, 14, 50, 51
நாதமுனி 16.
நாற்கவிராச நம்பி 18, 50, 53.
நிரம்பவழகிய தேசிகர் 21.
நெல்லைநாத முதலியார் 93.

ப.

பக்கிர் மதாறுப் புலவர் 79.
பகுறுத்தீன் ஹுசைன் 84.
பங்கிம் சந்திர சட்டர்ஜி 31.
பட்டினத்தடிகள் 76.
படிக்காசுப்புலவர் 70.
பதஞ்சலி முனிவர் 35.
பரஞ்சோதி முனிவர் 21.
பரத முனிவர் 35.
பரராசசேகரன் 90, 91.
பரிமேலழகர் 18, 19, 41, 56.
பல்காப்பியர் 42.
பல்காயனார் 42.
பவணந்தி 18, 46, 47, 49.
பவானந்தம் பிள்ளை 33.
பனியன், ஜோன் 25.
பாணற்று 34
பாரதம்பாடிய பெருந்தேவனார் 44.

பாரதிதாசன் 29, 110, 111, 113, 115, 116, 117, 119. 123.
பாரதியார், சுப்பிரமணியம் 29. 30, 108, 109, 110, 111, 113, 114, 115, 117, 119. 120, 121, 122, 123, 124.
பிச்சமூர்த்தி 32.
பிச்சை இபுறுகீம் புலவர் ஆ.கா 27, 73.
பிரேம்சந்த் 31.
பிளேட்டோ 30.
பீதாம்பரப் புலவர், நீர்வேலி 94.
பீர்முகம்மது சாகிபு 85.
பீர்முகம்மது சாகிபு, தற்கலை 83
பீருமுகம்மது 78.
புகழேந்தி 17.
புத்தமித்திரர் 18, 44.
புதுமைப் பித்தன் 32.
புறநானூற்று உரை ஆசிரியர் 41,
பூதத்தாழ்வார் 13, 14.
பெயின் 31.
பெரிய நூஹு ஒலியுல்லா 85.
பெரியாழ்வார் 13, 14.
பெருந்தேவனார் 15, 44, 65.
பெரும்பற்றப்புலியூர் நம்பி 17
பெஸ்கி 56.
பேசிவல், பீற்றர் 95.
பேராசிரியர் 18, 40, 65.
பொய்கையாழ்வார் 13.
பொருநற்சேர்ப்பன் 51.
பொன்னம்பலப் பிள்ளை 94.
போப்பையர் 57, 58, 59.

ம.

மகாலிங்கம், மழவை 60.
மதாறு சாகிபுப் புலவர் 82.
மதுரகவியாழ்வார் 13, 14.
மயில்வாகனம் 105.
மயில்வாகனப் புலவர் 92.
மயிலேறும்பெருமாள் பிள்ளை 22.
மயிலைநாதர் 47, 61, 65.
மனவாசகம் கடந்தார் 19.
மஸ்தான் சகிபு 82.
மாணிக்கவாசகர் 13, 16, 94.
மாதவையர் 31.
மாறன் 51.
மீனாட்சிசுந்தரம் பிள்ளை 26.
மீருன் சாகிபு 81.
மீருன் முகியித்தீன் 87.
முகம்மது அப்துல் றகுமான் 85
முகம்மது இபுறுகிம் ஆலிம் 86
முகம்மது காசிம் புலவர் 76.
முகம்மது நெய்னா மரைக்காயர் 27.
முகம்மதுப் புலவர் 27.
முகம்மது அப்துல்லா லெப்பை 86.
முகம்மது சம்சுதீன் சாகிபு 86.
முகியித்தீன் அப்துல் காதிறு 76.
முகியித்தீன் கவிராயர் 75.

முகியித்தீன் நாவலர் 75.
முத்துத்தம்பிப் பிள்ளை, ஆ. 103.
மெய்கண்ட தேவர் 19.
மெல்லோ பாதிரியார் 91.

ர.

ரா, வ. ரா. 31.

ல.

லக்ஷ்மிநாராயணன், ய. 31.

வ.

வச்சநந்தி முனிவர் 45.
வண்ணப்பரிமளப் புலவர் 82.
வரதராச பண்டிதர் 90
வரதுங்கராம பாண்டியன் 22
வாலை மஸ்தான் சாகிபு 83.
வாலைவாரிதி 70,
விசாகப்பெருமாளையர் 59, 60.
விசுவநாத பிள்ளை 99.
விபுலானந்த அடிகள் 104, 105, 106.
வில்லவராய முதலியார் 92
வில்லிபுத்தூராழ்வார் 21.
வில்லியம் நெவின்சு 102.
வீரகவிராசர் 21.
வீரமாமுனிவர் 24, 25, 56, 57, 103.
வீராசாமி செட்டியார் 26, 29.
வெங்கடாசலம் 31.
வெள்ளியம்பலவாண தேசிகர் 23.
வேதநாயகம் பிள்ளை 25, 29
வேலையர் 23.
வைத்தியநாத தேசிகர் 23, 52. 55, 56.
வையாபுரிப்பிள்ளை 10, 35, 37.

ஜ.

ஜகந்நாதன் 32.
ஜமாலுத்தீன் புலவர் 85.
ஸ்ரீநிவாசன் 31.

A

Anderson, Robert 58.
Arden, A. H. 59.
Arnold, J. R. 102.

B

Barnett, L. D. 34.
Beschi 56.

C

Caldwell, Rev. Robert 58.
Carroll, D. L. 102.
Chelvanayakam, V. 12.

D

De Mello, Philip 91.

G

Green, Dr. S. F. 102.

N

Nevins, William 102.

P

Pope, Rev: G. U. 57.

S

Sivarajapillai, K. N. 33, 36.

நூல் அகர வரிசை.

[எண்—பக்க எண்]

அ.

அகத்தியம் 10, 33, 34, 42.
அகந்தெளியமாலை 84.
அகநானூறு 9, 51, 89, 98.
அகப்பொருள்விளக்கம் 50, 53.
அங்காதிபாதம் 102.
அணியியல் 48
அதபுமாலை 83.
அதிசயபுராணம் 82.
அபூஷ்குமாடமாலை 78.
அபிதானகோசம் 103.
அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் 26.
அரிச்சந்திரபுராணம் 21
அரிச்சந்திரன் கதை 26.
அரிபத்துமாலை 85.
அழகின் சிரிப்பு 123.
அன்னையழுங்கல் அந்தாதி 24.
அனுர் கவி 31.

ஆ.

ஆங்கிலத்தமிழ் அகராதி 104.
ஆசாரக்கோவை 84.
ஆடிப்பிறப்பு 106.
ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர் 28, 99.
ஆயிரந்தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி 82.
ஆயிரமசலா 82.
ஆறும் வாசகப்புத்தகம் 98.

இ.

இட்டலிங்க அகவல் 23.
இந்திராயன் படைப்போர் 81.
இபுனியன் படைப்போர் 81.
இரகு வமிசம் 91.
இரட்சணிய மனோகரம் 25.
இரட்சணிய யாத்திரிகம் 25.
இரட்டை மணிமாலை 101.
இரண்டாம் சைவ வினாவிடை 97.
இரண்டாம் திருவந்தாதி 14.
இரண்டாம் பாலபாடம் 97.
இராம நாடகம் 26.
இராமாயணம் 17.
இராமாயணக் கதை 26.
இராஜமணிமாலை 79.
இருண்ட வீடு 117, 123.
இருநாடகம் 32, 107.
இருபா இருபஃது 19.
இலக்கணக் கொத்து 22, 28, 46, 55, 56, 58, 97.
இலக்கணச்சுருக்கம் 59, 97.
இலக்கணச்சுருக்க வினாவிடை 59.
இலக்கணவிளக்கம் 23, 52, 54, 56.
இலக்கணவிளக்க உரை 98.
இலக்கணவிளக்கச் சூறாவளி 26, 54.
இலங்கைவளம் 106.

இறசூல்மாலை 77.
இறையனார் அகப்பொருள் 39, 50.
இறையனார் அகப்பொருள் உரை 9, 33, 35, 98.
இஸ்லாமிய ஞானபோதம் 86.

உ.

உச்சிப்படைப்போர் 81.
உடையார் மிடுக்கு 107.
உண்மை நெறிவிளக்கம் 19.
உண்மை விளக்கம் 19.
உதயணகுமாரகாவியம் 16.
உபதேச வெண்பா 22.
உபாய நிட்டை 22.
உயிரிளங்குமரன்நாடகம் 106.
உலூமுத்தீன் 85.
உற்பாலனம் 103.

ஊ.

ஊசற்பதிகம் 94.

எ.

எட்டிகுடி ஏசல் 79.
எட்டுத்தொகை 9, 19, 98.
எட்டிக்குப்போட்டி 31.
எட்டுத்தமிழ் இலக்கண நூல் 57.
எதிர்பாராத முத்தம் 123.

ஏ.

ஏலாதி 11.
ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ்ச்சாசனங்களின்இலக்கணம் 107.
ஏழாம் வாசகப் புத்தகம் 98.

ஐ.

ஐங்குறுநூறு 9.
ஐஞ்சிறு காப்பியம் 98.
ஐந்திரம் 35.
ஐந்து படைப்போர் 81.
ஐம்பெருங் காப்பியம் 61.

ஒ.

ஒசியத்துமாலை 78.

க.

கட்டளைக்கலித்துறை 98.
கடவுணிருணயம் 25,
கண்ணன் கூத்து 107.
கண்ணன் பாட்டு 120, 121,
கண்ணிநுண் சிறுத்தாம்பு 14.
கத்தரித்தோட்ட வெருளி 106.
கதிர்காம வேலர்பதிகம் 106.
கதிரைமலை வேலவர் பதிகம் 106.
கதிரைவேற்பிள்ளை மதுரைத் தமிழ் சங்க அகராதி 103.
கந்தபுராணம் 17, 28, 44, 97
கந்தபுராண நுண்பொருள் விளக்கம் 106.
கந்தபுராண வள்ளியம்மை திருமணப்படல உரை 28, 102.
கந்தர் அந்தாதி 21.
கந்தர் அநுபூதி 21.
கந்தர் அலங்காரம் 21.
கந்தர் கலிவெண்பா 23.
கந்தவனக்கடவை 106.

கந்தவனநாதர் திருப்பள்ளி எழுச்சி 106.
கம்பராமாயண ரசனை 31.
கமலவிஜயம் 31.
கமலாம்பாள் சரித்திரம் 26.
கரவை வேலன் கோவை 28, 93.
கல்லாடம் 22.
கல்லாடக் கலித்துறை 101.
கல்லுண்டாய் வயிரவர் பதிகம் 106.
கல்வளையந்தாதி 93.
கலிங்கத்துப்பரணி 17.
கலித்தொகை 9, 10, 11, 18, 28, 51, 98.
கலிவெண்பா 94.
களவழி நாற்பது 12.
காசிகாண்டம் 22.
காஞ்சி புராணம் 26.
காதலி ஆற்றுப்படை 107.
கார்நாற்பது 12.
காவியாதரிசம் 48, 49, 51.
காளியாருக்கும் கள்ளனுக்கும் நடந்த கிஸ்ஸா 86.
கித்தேரியம்மாள் அம்மானை 24.
கிறிஸ்துமத திரியேகத்துவ மறுப்பு 86.
கீர்த்தன மஞ்சரி 27.
குட்டித்தொல்காப்பியம் 52
குடியின்கேடு 32.
குடும்ப விளக்கு 118, 123.
குண்டலகேசி 16, 61, 67.
குவாலீர்க்கலம்பகம் 27.
குயிற்பாட்டு 120, 121, 123.
குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் 17
குளத்தங்கரை அரசமரம் 31.
குறிஞ்சிப்பாட்டு 10
குறுந்தொகை 9, 19, 51, 89
கூத்தர் ஆற்றுப்படை 10.
கூர்மபுராணம் 22, 28.
கூர்மபுராண விரிவுரை 28.
கெமிஸ்தம் 102.
கொக்கோகம் 22.
கொடிக்கவி 19.
கோயிற்புராணவுரை 28, 97.

ச.

சகுண நிவாரணம் 25.
சங்கற்பநிராகரணம் 19.
சங்கிலி 107.
சதுரகராதி 25, 103.
சமுத்திரமாலை 27.
சர்வகசமய சமரசக் கீர்த்தனை 25.
சன்மார்க்க இலகுபோத வினு விடை 87.
சன்மார்க்ககசித்தியார் 22.
சாதாரண இதிகாசம் 102.
சாரதையின் தந்திரம் 31.
சித்தர் ஞானக்கோவை 83.
சித்தாந்தப் பஃறொடை 22.
சித்தாந்த மாபுகண்டனகண்டனம் 26.

சித்திரக்கவிகள் 27.
சிதம்பரச்செய்யுட்கோவை 44.
சிதம்பரப்பாட்டியல் 53.
சிதம்பர மான்மியம் 97.
சில தமிழ்ப் பெருமக்கள் வரலாறு 31.
சிலப்பதிகாரம் 12, 16, 19, 41, 51, 61, 62, 63, 65, 68, 98, 99, 100.
சிவஞான சித்தியார் 19.
சிவஞான சித்திஞானபரண விளக்கம் 23.
சிவஞானபாலையர் நெஞ்சுவிடு தூது 23.
சிவஞானபோதம் 19.
சிவப்பிரகாசம் 19.
சிவாலயமகோற்சவ விளக்கம் 101.
சிற்றதிகாரம் 47.
சிறியதிருமடல் 14.
சிறுபாணாற்றுப்படை 9.
சிறுவர் செந்தமிழ் 106
சின்னூல் 18, 45.
சீகாளத்திப் புராணம் 23.
சீவகசிந்தாமணி 16, 18, 61, 66, 67, 68.
சீறாநபி அவதாரப்படலஉரைக் கடிலகம் 86.
சீறாப்புராணம் 69, 72, 77, 78, 86.
சீறாப்புராணவசனம் 27.
சீறாவசனம் 86.
சுஅபில் ஈமான் 85.
சுகரண வாதம் 102.
சுகாதாரக்கும்மி 106.
சுகானந்தத்தாலாட்டு 76.
சுகுணசுந்தரி சரித்திரம் 25.
சூடாமணி நிகண்டு 91.
சூளாமணி 16, 28, 98.
சூறாவளி 54.
செகசிற்பியார் 105.
செகராசசேகரம் 90.
செந்தமிழ்ச்செல்வி ஆற்றுப்படை 106.
செய்தக்துப்படைப்போர் 81.
செய்கு முஸ்தபா ஒலியுல்லாக் காரண அலங்காரக் கும்மி 76.
சேதுபுராணம் 21.
சேந்தன் திவாகரம் 15
சைவசந்திரிகை 101.
சைவசமய நெறியுரை 97.
சைவசித்தாந்தச்சுருக்கம் 101.
சைவமகத்துவ போதம் 98.
சைவ வினாவிடை 28.
சொர்க்க நீதி 27.
சொற்பிறப்பு ஆராய்ச்சி 104.
சோணசைலமாலை 23.

ஞ.

ஞானக்குறம் 83.
ஞான சம்பந்ததேசிகர் சமூக மாலை 23.
ஞானசர நூல் 83.
ஞான சுந்தரி 25.
ஞான தீபிகை 25.
ஞானப்பாடல்கள் 83

ஞானப்பால் 83.
ஞானப் பிரசன்னகரத்தினம் 83.
ஞானப்பூட்டு 83.
ஞானமணிமாலை 83.
ஞானரத்தினக்குறவஞ்சி 83.
ஞானரதம் 29.
ஞான நடனம் 83.
ஞான வாக்கியம் 83.
ஞான ஒப்பாரி 83.
ஞானந்தரத்தினம் 83
ஞானோபதேசகாண்டம் 25.

த.

தக்கயாகப்பரணி 17.
தகடூர் யாத்திரை 65.
தங்கப்பாட்டுமாலை 84.
தசகாரியம் 22.
தட்சிணைகைலாசபுராணம் 90.
தண்டியலங்காரம் 18, 48, 49, 50, 51, 53, 54, 61.
தணிகைப்புராணம் 28, 98.
தத்துவக்கண்ணாடி 25
தமிழ் அமைப்புற்ற வரலாறு 104.
தமிழ்ச்சுடர்மணிகள் 36.
தமிழ்ப்பெருமக்கள் வரலாறு 31.
தருக்கசங்கிரக உரை 97.
தவறான எண்ணம் 107.
தறீக்குல் ஜன்னா 87.
தன்பீஹுறிஸ் ஸாலிக்கீன் 86.
தாகிப்படைப் போர் 81.
தாய்மகள் ஏசல் 79.
தாலவிலாசம் 106.
திராவிடப்பிரகாசிகை 30.
திராவிடமாபாடியம் 26.
திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் 58.
திருக்களிற்றுப்படியார் 19.
திருக்காவலூர்க்கலம்பகம் 24.
திருக்குருகாமான்மியம் 52.
திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி 22.
திருக்குற்றாலக்குறவஞ்சி 26.
திருக்குறள் 11, 19, 24. 28, 41, 51, 56, 68, 100, 101.
திருக்குறள் பரிமேலழகர் உரை 28, 97.
திருக்குறுந்தாண்டகம் 14.
திருக்கைலாயஞான உலா 13.
திருக்கோவையார் 13, 16, 18.
திருக்கோவை உரை 97.
திருச்சந்தவிருத்தம் 14.
திருச்செந்திற்கலம்பகம் 22
திருத்தணிகைப்புராணம் 26 28.
திருநெடுந்தாண்டகம் 14.
திருநெறி நீதம் 85.
திருப்பதிக்கோவை 21.
திருப்பரங்கிரிப்புராணம் 21.
திருப்பல்லாண்டு 14, 16.
திருப்பள்ளி எழுச்சி 14.
திருப்பாவை 14.
திருப்புகழ் 21, 74, 75.

திருமக்காத் திரிபந்தாதி 73.
திருமணிமாலை வசனம் 27;
திருமதினத்திரிபந்தாதி 27.
திருமதீனத்தந்தாதி 72.
திருமந்திரம் 13, 16.
திருமாலை 14.
திருமுருகாற்றுப்படை 9, 10, 11.
திருமுறைகள் 16.
திருவகுப்பு 21.
திருவருட்பயன் 16.
திருவாசகம் 13, 16.
திருவாசிரியம் 14.
திருவாய்மொழி 14, 51.
திருவாரூர்ப்பன் மணிமாலை 23.
திருவானைக்காப்புராணம் 26.
திருவிசைப்பா 16.
திருவிருத்தம் 14.
திருவிளையாடற்புராணம் 17, 21, 28.
திருவிளையாடற்புராண வசனம் 28, 97.
திருவுந்தியார் 19.
திருவெங்கைக்கோவை 23.
திருவெழுக்கூற்றிருக்கை 14.
தீண்டாமை விலக்கு 32.
துண்டி விநாயகர் பதிகம் 23.
தேசவளமை 92.
தேம்பாவணி 24.
தேவாரம் 13, 23.
தொல்காப்பியம் 10, 11, 18, 19, 27, 35, 36, 39, 40, 42, 43, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 56, 59, 64, 68, 101.
தொல்காப்பியம் சேனாவரையம் 27, 98.
தொல்காப்பியம் சேனாவரையருரை 97.
தொல்காப்பியச் சூத்திரவிருத்தி 97.
தொல்காப்பியம் நச்சினார்க்கினியம் 27, 98.
தொன்னூல் விளக்கம் 25, 57.

ந.

நந்தனார் சரித்திரக்கீர்த்தனை 26
நந்திக் கலம்பகம் 15.
நபி அவதார அம்மானை 72.
நபி அவதாரப் படல உரைக் கடிலக நிராகரணம் 86.
நபிநாயகம் பிள்ளைத் தமிழ் 71.
நபிநாயகம் பேரில் ஏசற்கண்ணிகள் 79,
நம்பி அகப்பொருள் 18, 50.
நம்பெருமாள் மும்மணிக் கோவை 52.
நமச்சிவாய லீலை 23.
நல்லுரைக் கோவை 30.
நல்லூர்ப் புராணம் 23.
நல்லை அந்தாதி 28, 94, 106.
நல்லைக் குறவஞ்சி 28, 94.
நல்லைமுருகன் திருப்புகழ் 106.
நல்லை வெண்பா 28, 94.

நவநீத ரத்நாலங்காரச்சிந்து 80.
நவரத்தினத் திருப்புகழ் 74.
நளவெண்பா 17.
நற்றிணை 9, 89.
நன்னூல் 18, 23, 28, 46, 47, 48, 49, 53, 56, 57, 61, 68.
நன்னூல் விருத்தியுரை 97.
நன்னூற் காண்டிகையுரை 28, 97.
நாககுமார காவியம் 16.
நாகூர்க் கலம்பகம் 27.
நாகூர்ப் புராணம் 26, 27.
நாகூர் பிள்ளைத் தமிழ் 71.
நாகை அந்தாதி 27.
நாஞ்சில் நாட்டு மாசுமக்கள் வழி மான்மியம் 118.
நாட்டவன் நகரவாழ்க்கை 107
நாமகள் புகழ்மாலை 106.
நாய்ச்சியார் திருமொழி 14.
நாலாயிரத் திவ்வியபிரபந்தம் 13
நாலேந்திணை 12.
நான் கண்டதும் கேட்டதும் 30
நான்காம் பாலபாடம் 97.
நான்மணி மாலை 101, 106.
நான்முகன் திருவந்தாதி 14,
நானுடகம் 32, 107.
நிகண்டு 15, 24.
நியாய இலக்கணம் 102.
நினைவு மஞ்சரி 30.
நீதிநூல் 25.
நீதிநெறி விளக்கம் 23.
நீலகேசி 16, 63, 67.
நெஞ்சு விடுதூது 19.
நெடுநல் வாடை 10.
நேமி நாதம் 18, 45, 46, 68.
நூறு நாமா 82.
நூறு மசலா 82.
நைடதம் 22.

ப.

பஞ்சதந்திரக்கதை 26.
பஞ்சரத்தினத் தாலாட்டு 76.
பஞ்சா வரலாற்று விளக்கம் 85
பட்டினப்பாலை 10.
பத்தஹுல் தய்பான் 86.
பத்தஹுல் மன்னுன் 86.
பத்துப்பாட்டு 9, 10, 25, 51, 61, 99.
பத்மாவதி சரித்திரம் 31.
பதிற்றுப் பத்து 9.
பதினெண் கீழ்க்கணக்கு 11, 12, 61.
பதினோராம் திருமுறை 16.
பப்பரத்தியார் அம்மானை 72.
பரமார்த்த குருவின் கதை 25.
பரராசசேகரம் 90.
பரிபாடல் 9, 10, 11, 36, 51.
பலுலூன் அசுகாபி மாலை 78.
பழமொழி நானூறு 11.
பழனித்தல புராண விரிவுரை 28.
பழனித்தல புராணவுரை 101.
பறுளைப்பள்ளு 28, 93.
பன்னிருபடலம் 40, 41, 49.
பாசவதைப் பரணி 23.

பாஞ்சாலி சபதம் 120, 121, 123.
பாண்டிக்கோவை 40.
பாண்டியன் பரிசு 123.
பாத்திமாநாயகி பிள்ளைத்தமிழ் 72.
பாப்பாவினம் 44.
பாரதக் கதை 26.
பாரதம் 21, 65.
பாரத வெண்பா 15.
பாலபாடம் 28.
பாலபோத இலக்கணம் 59.
பிள்ளைத்தாலாட்டு 77.
பில்கிறிம புறோகிறஸ் 25.
பிரயோக விவேகம் 22, 46, 54, 56, 97.
பிரமோத்தர கண்டம் 22.
பிரபுலிங்க லீலை 23.
பிரபந்தக் கொத்து 27.
பிரதாபமுதலியார் சரித்திரம் 25
பிங்கலந்தை 15.
புகழ்ப்பா மஞ்சரி 27.
புதியதும் பழையதும் 30.
புதிய ஏற்பாடு 91.
புலவராற்றுப்படை 73.
புறநானூறு 9, 41, 51, 98, 99.
புறப்பொருள் வெண்பா மாலை 15, 40, 41, 49.
பூஞ்சோலை 107.
பூவடிச்சிந்து 81.
பெண்புத்திமாலை 25.
பெரிய திருமடல் 14.
பெரிய திருமொழி 14.
பெரிய திருவந்தாதி 14.
பெரிய புராணம் 16, 17, 23, 28, 97.
பெரிய புராண வசனம் 28, 97.
பெரியாழ்வார் திருமொழி 14.
பெருங்கதை 15, 64, 65, 68.
பெருமாள திருமொழி 14.
பேச்சுத்தமிழ்இலக்கண நூல் 57
பேர்சிவெல் அகராதி 103.
பேரகத்தியத் திரட்டு 33.
பைபிள் 95.
பைஹுல் றகுமான் 86.
பொன்வண்ணத் தந்தாதி 13.
பொருநராற்றுப்படை 9.
பொருளோ பொருள் 107.
போற்றிப்பஃறொடை 19.

ம.

மக்காக் கோவை 27.
மகோற்சவ விளக்கம் 28.
மங்கையர்க்கரசியின் காதல் 30
மணிமந்திரத் தாலாட்டு 77.
மணிமுத்துமாலை 84.
மணிமேகலை 12, 16, 62, 63, 64, 65, 68, 100
மதங்கசூளாமணி 105.
மதுரைக் கலம்பகம் 23.
மதுரைக் காஞ்சி 10
மதுரைக் கோவை 26.
மதுரைத்தமிழ்ச் சங்கத்துப் புலவர் ஆற்றுப்படை 27, 71
மயிலத்துலா 23.
மரணத்துலக்க மணிமாலை 84.
மருதடி விநாயகர் பாமாலை 106

மருதப்பக் குறவஞ்சி 91.
மலைபடுகடாம் 9.
மறைசையந்தாதி 28, 93.
மறைசையந்தாதி உரை 102.
மனுதர்ம சாத்திரம் 35.
மஅரிபத்தின்தாலாட்டு 77.
மஸ்தான்சாகிபுப்பாடல் 74, 82.
மாணிக்கமாலை 107.
மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சீவிய சரித்திரக் கும்மி 75.
மாறன் கிளவி மணிமாலை 52.
மாறன் அகப்பொருள் 21, 52.
மாறன் அலங்காரம் 21, 50, 51
மானிப்பாய் அகராதி 24, 103.
மிஃராஜுநாமா 82.
மிருகேந்திரம் 23.
மீசான்மாலை 85.
மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் சரித்திரம் 30.
மீறான்சாகிபு பிள்ளைத்தமிழ் 27
மீறான் தாலாட்டு 77.
முகியத்தீன் மாலை 79.
முகியித்தீன் ஆண்டவர் திருப் புகழ் 75.
முகியித்தீன் ஆண்டவர் பிள் ளைத் தமிழ் 71.
முகியித்தீன் ஆண்டவர் பேரில் தாய் மகள் ஏசல் 79.
முத்திநிச்சயச்சிற்றுரை 23.
முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் 23.
முத்துத்தம்பிப்பிள்ளையகராதி 103.
முதலாம் திருவந்தாதி 14.
முதற் சைவவினுவிடை 97.
முதற் பாடபாடம் 97.
முதுமொழிமாலை 77.
முருகன் திருகுதாளம் 107
முல்லைப்பாட்டு 10.
முனாஜாத்துமாலை 81.
முஸ்லிம் அத்வைத மூலமொழி 85.
மூவருலா 17.
மூன்றாம் திருவந்தாதி 14.
மெஞ்ஞானத்தூது 83.
மெய்ஞான மனதலங்காரப் புகழ்ச்சி 83.
மெய்ஞானத் தங்கப்பாட்டுமாலை 84.
மௌலானா றாமி சீவிய சரித் திரம் 86.

ய.

யசோதர காவியம் 16.
யூசுபு நபிகிஸ்ஸா 82.
யாப்பருங்கலக்காரிகை 18, 28, 42, 43, 55.
யாப்பருங்கலக்காரிகை உரை 28, 102.
யாப்பருங்கலம் 18, 42, 43, 49, 51, 53, 68.
யாப்பருங்கல விருத்தி உரை 41
யாழ் நூல் 104. 105,
யாழ்ப்பாண அரசர்கள் 104.
யாழ்ப்பாண வைபவமாலை 90, 92.

யாழ்ப்பாண வைபவவிமர்சனம் 104.

ல.

லைலா மஜ்னூன் 31.

வ.

வச்சணந்தி மாலை 53.
வசன சூளாமணி 98
வடோச்சிப் படைப்போர் 81
வண்ணக் கவிகள் 27
வள்ளி தெய்வயானை ஏசல் 79.
வளையாபதி 16, 61, 67.
வாழ்க்கையின் விநோதங்கள் 107.
வான சாத்திரம் 102
விநோதரச மஞ்சரி 26.
வின்சிலோ அகராதி 102
விஞ வெண்பா 19.
வீசகணிதம் 102.
வீரசோழியம் 18, 27, 44, 45, 54, 68, 98.
வெள்ளாட்டி மசலா 82.
வேத புராணம் 85.
வேத விளக்கம் 25.
வேதியரொழுக்கம் 25.
வையா பாடல் 90.

ஹ.

ஹுசைன் படைப்போர் 81
ஹுர்முஜ்கதை. 86.

A

A Comparative Grammar of the Dravidian Languages 58
Agastya in the Tamil Land 33
A Grammar of High Tamil Dialect 57.
A Grammarof Kodun Tamil 57
A Hand Book of Tamil Language 57.
A Progressive Grammar of Common Tamil 59.

C

Cambridge History of India 34.
Chemistry 102.

E

Elementary Algbera 102.

H

History 102.
Human Anatomy 102.

R

Rudiments of Tamil Grammar 58.

T

The Chronology of the early Tamils (1932) 36.
The Tamils One Thousand Eight Hundred Years Ago 99.
University of Ceylon Review 1948 12.

பத்திரிகை அகர வரிசை.

[எண்—பக்க எண்]

உதய தாரகை 25, 103.

க.

கத்தோலிக்கப் பாதுகாவலன் 25, 103.

ச.

சிறுபிள்ளை நேசத்தோழன் 25

சுவிசேஷ பிரபல விளக்கம் 25

செந்தமிழ் 105.

த.

தமிழ்ப்பொழில் 105.

தினவர்த்தமானி 25, 97.

ப.

பாலதீபிகை 25.

பாலியர் நேசன் 103.

பிரபுத்த பாரதம் 105.

ஜ.

ஜனசிநேகன் 25.

அடுத்த வெளியீடு !

கலாநிதி சு. வித்தியானந்தன்

எழுதிய

தமிழர் சால்பு

தமிழ் மன்றம்,

கல்ஹின்னை, கண்டி.